

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | டிசம்பர் 05, 2013 | புரட்சி 12 | முழக்கம் 48 | விலை: ரூ.3.00


## குடும்பம் குடும்பமாய் திரண்டு – வீரவணக்கம்

# ‘புலியூரி’ல் மாவீரர் நாள் எழுச்சி





நவம்பர் 27 அன்று மாலை 6.05 மணிக்கு கொளத்தூர் புலியூர் பிரிவு, தண்டாசாலையில் தளபதி பொன்னம்மான் நினைவு நிழற்கூடத்தில் தமிழீழ ஆதரவாளர் ஒருங்கிணைப்பு குழு சார்பில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்ச்சி சிறப்பாக நடை பெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு கழக மாவட்ட அமைப்பாளர் டைகர் பாலன் தலைமை வகித்தார். பொது மக்கள், பள்ளி-கல்லூரி மாணவர்கள், வணிகர்கள், மருத்துவர்கள், ஆசிரியர்கள், வழக்கறிஞர்கள், தமிழக வாழ்வுரிமைக் கட்சி, நாம் தமிழர், ம.தி.மு.க., விடுதலை சிறுத்தைகள், பா.ம.க. மற்றும் தோழமை அமைப்புகள் உட்பட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டு மாவீரர்களுக்கு வீரவணக்கம் செலுத்தினர். வீரவணக்க நிகழ்வுக்கு பின் மேட்டூர் டி.கே.ஆர். இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சியை தொடர்ந்து தமிழக வாழ்வுரிமைக் கட்சியை சார்ந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் காவேரி, காமராசு, கழகப் பொருளாளர் இரத்தினசாமி ஆகியோரது உரைக்குப் பின் கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் சிறப்புரையாற்றினார்.

சரியாக 6.04 மணிக்கு மாவீரர் வீரவணக்கப் பாடல் ஒலிக்க, கையில் மெழுகுவர்த்தி ஏந்தி மாவீரர் பொன்னம்மான் நினைவு நிழற்குடையில் அமைக்கப்



பட்டிருந்த மாவீரர் சின்னத்துக்கு ஆண்களும் பெண்களுமாக சாரை சாரையாக மெழுகுவர்த்தி ஏற்றி வீரவணக்கம் செலுத்திய காட்சி உணர்ச்சிப்பூர்வமாக இருந்தது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு சொந்தமான விடுதலைப் புலிகளின் பயிற்சி நடந்த தோட்டம் அருகே இந்நிகழ்வு நடைபெற்றது. 1984 ஆம் ஆண்டு தொடங்கி, 1986 ஆம் ஆண்டு வரை நடந்த இந்த முகாமில் பயிற்சிப் பெற்ற போராளிகள்தான் பிற்காலத்தில் விடுதலைப் புலிகளின் முன்னணி தளபதிகளாக களத்தில் நின்று, மாவீரர்கள் ஆனார்கள். தமிழகம் முழுதும் நடந்த விடுதலைப் புலிகள் பயிற்சியை ஒருங்கிணைத்து வழி நடத்திய போராளி பொன்னம்மான்தான் இந்த பயிற்சி முகாமையும் வழி நடத்தினார். இலங்கையில் இந்திய இராணுவம் நிலை கொண்டிருந்தபோது வெடி பொருள் வெடித்து உயிர்ப்பலியான வீரர்களில் ஒருவர் பொன்னம்மான். மூன்று பிரிவுகளாக இங்கு நடந்த பயிற்சியில் 4 முறை தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் நேரில் வருகை தந்து பார்வையிட்டுள்ளார். விடுதலைப் புலிகள் முன்னணி தளபதிகள் ராதா, புலேந்திரன், லூகாஸ் மேனன் உள்ளிட்டவர்கள் பயிற்சி பெற்றது, இதே முகாமில் தான். பேபி சுப்பிரமணியம் என்ற இளங்குமரன், கேணல் கிட்டு ஆகியோர் அடிக்கடி இந்த முகாமுக்கு வந்து பார்வையிட்டார்கள். மூன்று ஆண்டுகள் நடந்த இந்த முகாமுக்கான செலவு அனைத்தையும் மக்கள் மனமுவந்து வழங்கிய பொருட்கள், நிதி உதவியுடன் தான் நடந்தது குறிப்பிடத்தக்க சிறப்பு. அப்போது திராவிடர் கழகத்தில் இருந்த தோழர் கொளத்தூர் மணி, ஆதரவாளர்களுடன் இணைந்து, இதற்கான பொருள், நன்கொடைகளை திரட்டும் பணிகளை மேற்கொண்டார்.

குமாரப்பட்டி என்ற பெயர் கொண்ட அந்தப் பகுதி, பிறகு புலியூர் என்று பெயர் மக்களால் மாற்றம் செய்யப்பட்டது. கடந்த பல ஆண்டுகளாகவே இந்தப்

(4 ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...

✦ ஆக்ராவில் மோடி அமர்ந்திருந்த நாற்காலி, கூட்டத்தில் 4.5 லட்சத்துக்கு ஏலம் போனது. – **செய்தி**

நாற்காலியோட நிறுத்துங்க; மோடியையும் சேர்த்து ஏலம் விட்டுடாதீங்க...

✦ இந்தியாவில் நகரங்களில் 70 சதவீதம் பேர் ஏழ்மையில் வாழ்வதாக அரசு நியமித்த எஸ்.ஆர். ஹஷீம் குழு தந்த அறிக்கையை ஓராண்டு காலமாக மத்திய அரசு முடக்கிப் போட்டு விட்டது.

– **செய்தி**

எப்படியோ ஏழ்மையை முடக்கிப் போட்டிருக்கிறார்களா, இல்லையா? எதற்கெடுத்தாலும் குற்றம் கண்டுபிடிக்கக் கூடாது.

✦ மதங்கள் நடத்தும் புனிதச் சடங்குகளினால் எழும் புகை மூட்டங்களால் பசுமை இல்லங்கள் பாதிக்கப்பட்டு, இமயமலைப் பனிக்கட்டிகளும் உருகி, பூமி வெப்பமடைய காரணமாகிவிடுகின்றன.

– **ஆய்வாளர்கள் தகவல்**

கவலைப்பட வேண்டாம்; பூமியைக் காப்பாத்துறதுக்கும் யாகம் கைவசம் இருக்கு!

✦ முடிகாணிக்கை வருவாயை அதிகரிப்பது குறித்து திருமலை தேவஸ்தானம் தீவிர ஆய்வு.

– **செய்தி**

பக்தர்களுக்கு நீண்ட கூந்தல் வளர அமேசான் காடுகளின் மூலிகைகளைக் கொண்டு வந்து எண்ணெய் தயாரிப்பது பற்றி தேவஸ்தானம் பரிசீலிக்கலாமே!

✦ திருப்பூரில் பழைய பேருந்து நிலையம் அருகே உள்ள சந்தையில் வெங்காயம் திருட முயன்ற இருவர் கைது.

– **செய்தி**

அய்யய்யோ... இது திருட்டு வழக்கில்லையே! தேசத் துரோக குற்றமாச்சே....!

✦ கிரிக்கெட்டில் கோடி கோடியாக பொருள் ஈட்டிய – சமூகத்துக்கு எந்த சேவையும் செய்யாத சச்சினுக்கு ‘பாரத ரத்னா’ விருதா?

– **நீதிமன்றத்தில் வழக்கு**

அப்படி சேவை எதுவும் செய்யாமல், சமூகத்தைக் காப்பாற்றியதற்காகத்தான் இந்த விருது!

✦ 1987 இல் ‘தண்ட’த்தை மடத்திலேயே விட்டுவிட்டு, தலைமறைவானவர் ஜெயேந்திரர்.

– **தினமலர் செய்தி**

‘சாமி’கள் மவுன விரதத்தைப் போல அது ‘தலைமறைவு விரதம்’ தெரிஞ்சுக்குங்க!

✦ மாடுகளிடம் பரவி வரும் ‘கோமாரி’ நோயைத் தடுக்க பன்றிக் கொழுப்பு மருந்தாக தரப்படுகிறது.

– **செய்தி**

இராமகோபாலன் ஜி, பார்த்தேளா? புனித கோமாதாவுக்கு, பன்றிக் கொழுப்பை ஊட்டுறாளாம்! ‘இந்து’ விரோதிகளை விடாதீங்க, ஜி!

**உள்ளே**
**சிறப்பு வினா... விடைகள்...**

# திருமணம் வேண்டாதது!

## பெரியார்

உலகில் அர்ச்சகன், மாந்திரிகன், சோதிடன் இவர்களைவிடப் பித்தலாட்டத்தில் கைதேர்ந்தவர்கள் கிடையாது.

மதமும் கடவுள் சங்கதியும் மனித சமூகத்தின் வளர்ச்சியைப் பெரிதும் தடுத்து நிறுத்திவிட்டன. குறிப்பாகப் பெண்கள் சங்கதியை எடுத்துக் கொள்ளுங்கள். பார்ப்பான் நம்மை எப்படிக் கீழ்ச்சாதி என்று கூறி அடிமை வேலை வாங்குகிறானோ, அதைப்போலத்தான் மக்களில் சரி பகுதி எண்ணிக்கையுள்ள பெண்களை நடத்தி வருகிறோம். பெண்கள் என்றால் வெறும் குட்டிபோடும் கருவி என்றுதான் நடத்தி வருகிறோம். பெண்களும் கணவன்மார்கள் நகை, நட்டு வாங்கிக் கொடுத்தால் போதும் - நல்ல துணிமணி வாங்கிக் கொடுத்தால் போதும் என்கிற அளவுக்குத் தங்களைக் குறுக்கிக் கொண்டு விட்டார்கள்.

பிராமணன்-சூத்திரன் என்ற அமைப்புக்கும் பேதத்திற்கும், புருஷன்-பெண்டாட்டி என்ற விகிதத்துக்கும் எந்தவித வேறுபாடும் கிடையாதே! உலகத்திற்குப் பயன்படும்படியான பேர் பாதி மனித சக்தியை, பெண்ணடிமை மூலம் நாம் விரயப்படுத்திக்கொண்டு இருக்கின்றோம்.

இதற்கு ஒரு பரிகாரம் என்ன என்றால், ‘கலியாணம்’ என்பதையே சட்ட விரோதமாக ஆக்கவேண்டும். இந்தக் ‘கலியாணம்’ என்ற அமைப்பு முறை இருப்பதால்தான் கணவன்-மனைவி என்ற உறவும், பெண் அடிமைத் தன்மையும் உருவாகிறது. மனைவியாகிவிட்டால் அதோடு சரி - அவள் ஒரு சரியான அடிமை! அதுமட்டுமல்ல - இந்தக் கலியாண முறை இருப்பதால்தானே குழந்தை குட்டிகள் - அவற்றுக்குச் சொத்துக்கள் சம்பாதிப்பது - அதுவும் எதைச் செய்தாவது சம்பாதிப்பது என்ற சமுதாய ஒழுக்கக்கேடுகள் எல்லாம் ஏற்படுகின்றன.

மந்திரி ஆகிறவன்கூட, கலெக்டர் ஆகிறவன்கூடப் பெண்டாட்டி பிள்ளையைக் காப்பாற்றத்தானே இருக்கிறான். இந்த வகையில் அமைப்பு முறை என்றால், உலகத்தைப் பற்றியோ சமுதாயத்தைப் பற்றியோ எவன் கவலைப்படுவான்? பொது உணர்ச்சி எப்படி ஏற்படும்? அவனவன் சொந்த வாழ்க்கைப் பிரச்சினைக்கே ஈடு கொடுத்துக் கொண்டு இருப்பதென்றால், சமுதாய உணர்ச்சி எப்படி ஏற்பட முடியும்?

இந்தக் கலியாண முறையை இந்த நாட்டில் ஏற்படுத்தியதே பார்ப்பான்தான். சாத்திரங்களில் சூத்திரனுக்குக் கலியாண முறையே இல்லையே!

தொல்காப்பியத்திலே கூறப்பட்டு இருக்கிறதே “பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் - அய்யர் யாத்தனர் கரணம் - என்ப” என்று இருக்கிறதே! “மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம் கீழோர்க் காகிய காலமும் உண்டே” என்றும் தொல்காப்பியத்தில் கூறப்பட்டுள்ளது. இவற்றில் இருந்தெல்லாம் சூத்திரர்களுக்குத் திருமணம் என்ற அமைப்பே இல்லாதிருந்தது என்பதுதான் தெளிவாகத் தெரிகிறது.

பெரும்பகுதி மக்களைச் சூத்திரனாக்க - உடலுழைப்புக்காரனாக்க எப்படிப் பார்ப்பான் சாத்திரங்கள் செய்தானோ அதைப்போலத்தான் - பெண்களை அடிமையாக்கக் ‘கலியாணம்’ என்ற முறையும் ஏற்படுத்தப்பட்டது.

தவம், சூத்திரச் சம்பூகன் எப்படிச் செய்யக்கூடாது என்று இராமாயணத் தத்துவம் கூறுகிறதோ அதை அடிப்படையாக வைத்துத்தான், வள்ளுவனும் பெண்கள் கடவுளைத் தொழாமல் கணவனையே தொழ வேண்டும் என்று எழுதி வைத்து இருக்கிறான்.

“தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை”

- என்ற குறள் அதுதான்.

இந்நாட்டிலே ஒரு பெண்ணானவள் பதிவிரதையாக இருக்க வேண்டும் என்றால், அவள் எவ்வளவுக்கு எவ்வளவு அடிமை உணர்வோடு இருக்கிறாளோ, அவ்வளவுக்கு அவ்வளவு அவள் உயர்ந்த பதிவிரதையாகப் பாவிக்கப்படுகிறாள்.

இதைத்தான் நமது இதிகாசங்களும் புராணங்களும் சாத்திரங்களும் வலியுறுத்துகின்றன.

வள்ளுவனிலிருந்து ஒவ்வொரு பெரிய மனிதனும் பெண்ணை அடிமைப் பொருளாகத்தான் கருதி இருக்கிறானே தவிர ஆண்களோடு சரி சமானமான உரிமையுடையவர்களாகக் கூறவில்லையே!

ஆணும் பெண்ணும் சம உரிமை இல்லாத உலகில் சுதந்தரத்தைப் பற்றிப் பேச எவனுக்கு யோக்கியதை இருக்கிறது?

முசுலிமை எடுத்துக்கொண்டால் பெண்களை, உலகத்தைக்கூடப் பார்க்கவிடமாட்டேன் என்கிறானே! முகத்தை மூடி அல்லவா சாலையில் நடமாட விடுகிறான். இதைவிடக் கொடுமை உலகில் ஒன்று இருக்க முடியுமா?

நம் நாட்டு யோக்கியதைதான் என்ன? ஏழு வயதிலேயே பெண்களைக் கல்யாணம் செய்து கொடுத்துவிட்டு அன்றைக்கு இரவே சாந்தி முகூர்த்தம் வைத்துவிடுவானே! சாந்தி முகூர்த்தம் நடந்த மறுநாளே அந்தப் பெண் ஆஸ்பத்திரிக்குப் போய் விடுவாள் - இவ்வளவு காட்டு மிராண்டித்தனங்களும் பெண்கள்மீது சுமத்தப்பட்டு இருந்தனவே! பெண்களுக்காவது உணர்ச்சி வரவேண்டாமா? சிங்காரிப்பது - ஜோடித்துக் கொள்வது - சினிமாவுக்குப் போவது என்பதோடு இருந்தால் போதுமா? தாங்களும் சம உரிமை உடையவர்கள் என்ற உணர்ச்சி வரவேண்டாமா?

உலகிலே மற்ற நாட்டுக்காரன் எல்லாம் எப்படி எப்படி முன்னேறி வருகிறான்? வெள்ளைக் காரன் என்ன நம்மைவிடப் புத்தியுள்ளவனா? இயற்கையிலே நம்மைவிட அவன் அறிவில் குறைந்தவன்தானே - அவனோ குளிர்தேசத்துக்காரன்; நாமோ உஷ்ண தேசத்துக்காரன். பாம்புக்குக்கூட உஷ்ண தேசத்துப் பாம்புக்குத்தான் விஷம் அதிகம். பூவில்கூட உஷ்ணதேசத்துப் பூவுக்குத்தான் மணமும் மதிப்பும் அதிகம். அந்த இயற்கை அமைப்புப்படி, நாம் இயற்கையிலேயே அவர்களைவிட அறிவாளிகள்தான். இருந்தாலும் அவர்களின் முன்னேற்றம் எங்கே? நம் நிலை எங்கே? காரணம் - அவன் அறிவைப் பயன்படுத்தினான் - நாமோ பயன்படுத்தத் தவறி விட்டோம். அறிவைப் பயன்படுத்தினால் நாமும் அவனைவிட வேகமாக முன்னேற்ற மடையலாம்.

நான் 1932 இல் ஜெர்மனி சென்றிருந்தேன். அப்போது ஒரு வீட்டில் தங்கியிருந்தேன். அந்த வீட்டுக்காரர்களை விசாரித்தேன். அவர்கள் தங்களை, “Proposed husband and wife” என்றார்கள். அப்படி என்றால், என்ன அர்த்தம்? என்று கேட்டேன். “நாங்கள் உண்மையான கணவன்-மனைவியாகத் திருமணம் செய்து கொள்வதற்கு முன்பு ஒருவரை ஒருவர், நன்றாகப் புரிந்து கொள்ள நாங்கள் பயிற்சி பெறுகிறோம்” என்றார்கள். “எவ்வளவு காலமாக?” என்று கேட்டேன். “எட்டு மாதமாக” என்றார்கள். எப்படி இருக்கிறது பாருங்கள்? அந்த நாடு முன்னேறுமா? ‘பதிவிரதம்’ பேசி, பெண்களை அடிமையாக்கும் இந்த நாடு முன்னேறுமா?

**‘விடுதலை’ 28.6.1973**

*பெரியார் கருத்து வெற்றி பெறுகிறது!*

# திருமணமின்றி சேர்ந்து வாழலாம்: மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு

திருமணமாகாமல் ஆணுடன் சேர்ந்து வாழும் பெண்கள் மற்றும் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பாதுகாக்கச் சட்டம் இயற்றுமாறு மத்திய அரசுக்கு உச்சநீதிமன்றம் உத்தரவு பிறப்பித்து, வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்ப்பை 28.11.2013 அன்று வழங்கியது. திருமணம் செய்து கொள்ளாமல் சேர்ந்து வாழ்ந்த பெண்ணையும், அவருக்குப் பிறந்த குழந்தையையும் தனியாகத் தவிக்கவிட்டு, திடீரென ஆண் ஒருவர் பிரிந்து சென்றார். இதனால் பாதிக்கப்பட்ட அந்தப் பெண், தன்னை தவிக்கவிட்டுச் சென்ற அந்த ஆணிடம் இருந்து பராமரிப்பு செலவு பெற்றுத் தரக்கோரி உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார்.

இவ்வழக்கின் விசாரணை, நீதிபதி கே.எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையிலான அமர்வு முன்னிலையில் நடைபெற்று வந்தது. இவ்வழக்கில் உச்சநீதிமன்றம் அளித்த தீர்ப்பில், “திருமண மாகாமல் ஆணுடன் சேர்ந்து வாழும் பெண்கள், அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளைப் பாதுகாக்கும் வகையில் உரிய சட்டத்தை இயற்ற வேண்டும்” என மத்திய அரசுக்கு உத்தர விட்டது.

மேலும், “திருமணமாகாமல் ஆண்-பெண் சேர்ந்து வாழ்வது குற்றமும் அல்ல, பாவமும் அல்ல. இதுபோல் சேர்ந்து வாழ்வோருக்கு வெளிநாடுகளில் சட்டப்பூர்வ உரிமை வழங்கப்படுகிறது. ஆகையால் இதற்கு ஏற்பு வழங்கும் வகையில் புதிய சட்டத்தை மத்திய அரசு இயற்ற வேண்டும்” என்றனர்.

# கிணத்துக்கடவில் தொடரும் சாதித் தீண்டாமைக் கொடுமைகள்

கோவை மாவட்டம், கிணத்துக் கடவு அருகே பத்தனம் என்கிற கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் மாணவர்களிடம் ஆசிரியர்கள் சாதித் தீண்டாமையைக் கடைப்பிடிக்கின்றனர். இதையறிந்த திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் அந்த ஊருக்குச் சென்று அங்கு படிக்கின்ற தலித் மாணவ, மாணவிகளையும் அவர்தம் பெற்றோர்களையும் அவர்களுடைய வீடுகளுக்கேச் சென்று சந்தித்து விவரங்கள் கேட்டறிந்தனர்.

அதன்படி அவர்கள் சொன்னது, - அந்தப் பள்ளியில் படிக்கும் அனைத்து மாணவ மாணவிகளையும் அந்தப் பள்ளியின் ஆசிரியர் ஈஸ்வரி என்பவர், தேநீர் வாங்க, பள்ளி வளாகங்களை சுத்தம் செய்ய பெருக்க பயன்படுத்து வாராம். ஆனால், பள்ளிக் கழிப்பறையை மட்டும் கழுவி சுத்தம் செய்ய தலித் மாணவ, மாணவிகளைப் பயன்படுத்துவாராம். இது பல காலமாக நடந்து கொண்டிருக்கிறது. அது தற்போதுதான் வெளி வந்துள்ளது.

அதாவது தற்போது அந்தப் பள்ளியில் படிக்கும் சுபாஷினி என்கிற மாணவி கழிப்பறை சுத்தம் செய்ய தண்ணீர் கொண்டு வராததால் அவரை ஆசிரியர் ஈஸ்வரி அடித்து அவரின் கை வீங்கிப் போனது. அதைக் கண்ட அவரின் பெற்றோர் கேட்ட போதுதான் அந்த மாணவி நடந்ததைச் சொல்லியுள்ளார்.

பெற்றோரும், தீண்டாமைக்குட்பட்ட மற்ற மாணவர்களின் பெற்றோர்களும், மக்கள் விடுதலை முன்னணியும் சென்ற 20.11.2013 அன்று அந்தப் பள்ளி ஆசிரியரிடம் கேட்கச் சென்ற போது, சம்பவ இடத்திலேயே இவர்கள் முன்னிலையிலேயே, அந்த ஆசிரியருக்கு ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் அலைபேசியில் அந்த ஆசிரியரிடம், ‘என்னம்மா பசங்களை கக்கூஸ் கழுவச் சொல்றீங்களாமே என்று கேட்டுள்ளார்.

அந்த ஆசிரியை, உங்க பசங்களையெல்லாம் (பிற்படுத்தப்பட்ட மாணவர்கள்) அப்படி சொல்லவில்லை, மாதாரிப் பசங்களைத்தான் சொன்னேன் என்று அவர்கள் முன்னிலையிலேயே சொல்லியிருக்கிறார். இதைக் கண்டு ஆத்திரமடைந்த அவர்கள் பள்ளியை முற்றுகையிட்டனர். தகவலறிந்த உதவிக் கல்வி அலுவலர் மற்றும் காவல்துறையினர் சம்பவ இடத்திற்கு வந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்த பிறகு முற்றுகையை கைவிட்டார்கள்.

ஏற்கனவே கிணத்துக்கடவைச் சுற்றியுள்ள கிராமங்களில் இரட்டைக் குவளை மற்றும் முடித்திருக்கும் கடைகளில் தாழ்த்தப்பட்டோருக்கு முடி வெட்டாமை ஆகியவற்றைக் கண்டித்து தடையை மீறி கிணத்துக்கடவில் கண்டன ஆர்ப்பாட்டமும், கோவை மாவட்ட ஆட்சியர் அலுவலக முற்றுகைப் போராட்டமும் திராவிடர் விடுதலைக் கழகத்தால் நடத்தப்பட்டுள்ளது. அதுமட்டுமின்றி கோவை மாவட்ட ஆட்சியர் மற்றும் கோவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆகியோர் மீது கழகம் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப் பட்டு வழக்கு நடந்து கொண்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**செய்தி : நிர்மல்குமார்**

## “என் பிள்ளைகளை கொலை செய்வதாக மிரட்டினார்கள்”

# சங்கர்ராமன் மனைவி கண்ணீர் பேட்டி

**ஜெயேந்திரனும் அவரது கூட்டாளிகளும் சங்கர்ராமன் கொலை வழக்கில் விடுதலையாகி விட்டார்கள். முதலில் குற்றவாளிகளை அடையாளம் காட்டிய சங்கர்ராமன் மனைவியும், மகளும் இறுதியில் அடையாளம் காட்ட அஞ்சினர். என் பிள்ளைகளை கொலை செய்து விடுவதாக மிரட்டியதே காரணம் என்கிறார், சங்கர்ராமனின் மனைவி, ‘ஜூனியர் விகடன்’ ஏட்டுக்கு (4.12.13) அவர் அளித்த பேட்டி இது.**

3369 நாட்கள்... 24 குற்றவாளிகள்...1873 பக்க குற்றப் பத்திரிகை... 189 அரசு தரப்பு சாட்சிகள்... என்ற பீடிகையோடு நடந்த சங்கரராமன் கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட ஜெயேந்திரர், விஜேயேந்திரர் உள்ளிட்ட அத்தனை பேரையும் விடுதலை செய்துள்ளது புதுவை நீதிமன்றம்.

தமிழகத்தில் நடந்தால் நியாயமான விசாரணை நடக்காது என்று வேறு மாநிலத்துக் மாற்ற ஜெயேந்திரர் வைத்த கோரிக்கையை ஏற்று சங்கர் ராமன் கொலை வழக்கு புதுவைக்கு மாற்றப்பட்டது. கடந்த 2005 ஆம் ஆண்டு தொடங்கி 9 ஆண்டுகள் நடந்தது வழக்கு. இந்த வழக்கில் நீதிபதி சிஸ்முருகன் கடந்த 27 ஆம் தேதி தீர்ப்பளித்தார்.

‘சாட்சிகளில் பெரும்பாலானவர்கள் பிறழ் சாட்சியாக ஆனார்கள்’ என்று குறிப்பிட்ட நீதிபதி, குற்றம் சாட்டப்பட்ட அனைவரையும் விடுதலை செய்வதாக அறிவித்தார். “சங்கரராமன் குடும்பத்தினரே சரியாக ஒத்துழைக்கவில்லை” என்ற அரசு வழக்கறிஞர் தேவதாஸ் சொல்லி இருக்கிறார்.

தீர்ப்பு வெளியான சில நிமிடங்களில் காஞ்சி புரத்தில் சங்கரராமன் குடும்பத்தினரைச் சந்தித்தோம். கண்ணீரோடு முடங்கிக் கிடந்த சங்கரராமனின் மனைவி பத்மா, சோகம் அப்பிய முகத்துடன் பேசினார். “என் கணவர் யாருக்கும் எந்தத் தீங்கும் செய்யாதவர். பாவிகள் அவரைத் துள்ளத் துடிக்க அவர் வேலை செய்த கோயிலிலேயே வெட்டிக் கொன்னாங்க. கொலையில் சம்பந்தப்பட்டவங்க பெரிய இடம்னு தெரிஞ்ச பிறகும் விடாம வழக்கை நடத்த ஒத்துழைப்பு தந்தோம். ஒருநாள், விசாரணைக்காக போனபோது நீதிமன்ற வளாகத்திலேயே வெச்சி மூணு பேர், ‘சாட்சியத்தை மாத்தி சொல்லலைன்னா உன் பிள்ளைங்களை ஆசிட் தொட்டியில வீசிடுவோம். அடையாளம் தெரியாம போயிடுவாங்கனு மிரட்டினாங்க. கோயில்ல வெச்சி ஒரு உயிரைப் பறிக்கத் துணிஞ்சவங்க... இதையும் செய்திடுவாங்கன்னு பயந்து போனேன். அவருதான் போயிட்டாரு.... என் பிள்ளைகளையாவது காப்பாத்துவோம்னு நீதிமன்றத்துல மாத்திச் சொல்ல வேண்டியதாகிடுச்சி” என்ற பத்மாவின் கண்களில் கண்ணீர் கொட்டுகிறது. துடைத்துக் கொண்டு தொடர்கிறார்.

“போலீஸ்காரங்க அடையாள அணிவகுப்புக்கு தனி வேன்ல அழைச்சிட்டுப் போனாங்க. நீதிமன்றத்துல குற்றவாளிகளை சரியா நான் அடையாளம் காட்டினேன். உயிருக்கு பயந்துதான் இந்தக் காரியத்தைச் செய்தேன். அவ்வளவு அச்சுறுத்தல் இருந்த சூழலில், எங்களை மறுபடியும் தனி வேன்ல கூட்டிட்டு வந்து வீட்டுல விட்டிருக்க லாம். ஆனா, போலீஸ்காரங்க, சர்வசாதாரணமா பஸ்ல திரும்பிப்போகச் சொன்னாங்க.எப்போ என்ன நடக்குமோன்னு பயந்துக்கிட்டுத்தான் பஸ் ஏறினேன்.

அன்னிக்கு நடுராத்திரி 12 மணிக்கு தன்னந்தனியா வீடுவந்து சேர்ந்தோம். அதுல இருந்து யாரையுமே நாங்க நம்பலை. யார் மேலயும் நம்பிக்கை வைக்கிற நிலையில் நாங்க இல்லை. நாங்க யாரைப் பகைச்சிக் கிட்டோமோ அந்தப் பெரியவங்க எதையும் செய்யத் துணிந்தவங்க. குற்றவாளிகளை அடையாளம் காட்டிட்டு வந்த அன்றைக்கு எங்க உயிருக்கு ஏதாவது ஆகியிருந்தா யார் பொறுப்பு? அநாதையா தானே இருக்கோம்?

இனி நமக்கு யாரும் பாதுகாப் பில்லைனு முடிவு பண்ணித்தான் சாட்சியை மாத்திச் சொன்னோம். ஆனா, அந்த ஒரு காரணத்துக்காக எங்க ஒத்துழைப்பு இல்லைன்னு அரசு வக்கீல் சொல்லியிருக்கார். இது நியாயமா? அதுக்காக அவா அத்தனை பேரையும் விட்டுர்றதா?” என்று கேட்ட பத்மா, எதையோ யோசித்தவராக இருந்தார்.

“கடவுள் எல்லாத்தையும் பார்த்துண்டு இருக்கார். அவா பெரிய இடம். அவாளை எதிர்த்துப் போராட எங்களிடம் தெம்பும் திராணியும் இல்லை. நான் ஜெயலலிதா அம்மாவைத்தான் நம்புறேன். வழக்கை இத்தோட விட்டுடாம மறுபடியும் அப்பீல் போக நடவடிக்கை எடுக்கணும். எத்தனை வருஷ மானாலும் எங்களுக்கு நீதி கிடைக்கணும். இது முதல்வர் அம்மா வுக்கு கண்ணீரோட நான் வைக்கிற கோரிக்கை” என்றார் வழிந்த கண்ணீரை துடைத்தபடி.

அம்மா பேசுவதை கலங்கிய நிலையில் கவனித்தபடி இருந்தார், அவரது மகன் ஆனந்த் சர்மா. “குற்றம் நிரூபணம் ஆகாததால் குற்றம்சாட்டப் பட்டவர்கள் விடுவிக்கப்படுவதாக தீர்ப்பில் கூறப் பட்டுள்ளது. சங்கரராமன் கொலையில் இவர் களுக்குத் தொடர்பில்லை என்றால் சங்கரராமனை கொன்றது யார்? தன்னைத் தானே கத்தியால் வெட்டிக் கொண்டு செத்துப் போக என் தந்தை என்ன மனநோயாளியா?

2001 இல் சீனா செல்ல இருந்த ஜெயேந்திரரை, ‘மடாதிபதிகள் கடல் கடந்து செல்லக்கூடாது’ என வழக்குப் போட்டுப் போகவிடாமல் என் தந்தை தடுத்தார். தொடர்ந்து மடத்தின் அட்டூழியங்களை வெளியில் சொன்னார். ஜெயேந்திரர், விஜயேந்திரர் மற்றும் அவரைச் சேர்ந்தவர்களின் முறைகேடான செயல்களைச் சொந்தப் பெயரிலும் புனை பெயர் களிலும் புகார்களாக எழுதினார்.

இதற்கு ஆதாரமான கடிதங்களை முக்கிய ஆதாரங்களாக காவல்துறையினர் எங்கள் வீட்டிலிருந்து கொண்டு சென்றனர். அதிலேயே என் தந்தைக்கும் ஜெயேந்திரர் தரப்புக்கும் இருந்த பகை வெளிப்படையாகத் தெரியும்.

உத்திரமேரூர் நீதிமன்றத்தில் இரகசிய வாக்க மூலமாகவே இதைக் கூறியிருக்கிறேன். அடையாள அணிவகுப்பிலும் சரியான குற்றவாளிகளை அடையாளம் காட்டினோம். அதை ஏற்றுக் கொண்டனர். ஆனால், புதுவை நீதிமன்றத்தில் முதல் விசாரணையின்போது உயிர் பயத்தினால் நாங்கள் சாட்சியத்தை மாற்றிச் சொல்ல வேண்டியதானது. ஏற்கெனவே கொலை பாதகம் செய்த அவர்களின் மிரட்டலுக்கு எங்களைப் போன்ற சாமான்யன் பயப்படாமல் இருக்க முடியுமா? ஆண்டவன் நீதிமன்றத்தில் நிச்சயம் அவர்களுக்கு தண்டனை உண்டு” என்றார் விரக்தியும் வேதனையும் கலந்த குரலில்.

சங்கரராமனின் மருமகன் கண்ணனிடம் பேசினோம். “இந்த தீர்ப்பு அதிர்ச்சி அளிக்கிறது. போதிய ஆதாரங்கள் இருந்தும் ஒட்டு மொத்தமாக அத்தனை பேரையும் விடுவித்திருப்பது அதிர்ச்சி யளிக்கிறது” என்று சொன்னார்.

## சிறப்புவிடைகள்

✦ சங்கர்ராமன் கொலை வழக்கில் ஜெயேந்திரன், விஜயேந்திரன் விடுதலை. **– செய்தி**

*‘ஆன்ம விடுதலை’ கிடைக்கிறதோ இல்லையோ; இந்த ‘பூத’ உடலுக்காவது விடுதலை கிடைத்ததே!*

✦ நீதிமன்றத்தில் தீர்ப்பு கூறப்பட்டபோது ஜெயேந்திரர் முகம் இறுக்கத்துடன் காணப் பட்டது. விஜயேந்திரர் எதையோ சிந்தித்துக் கொண்டிருந்தார். **– செய்தி**

*அப்படி என்ன சிந்தித்துவிடப் போகிறார்கள்? போயும் போயும் ஒரு ‘சூத்திர’ நீதிபதி நம்ம ‘தலைவிதி’யை நிர்ணயிக்கிறானே என்று சிந்தித்திருப்பார்கள்!*

✦ தீர்ப்பு வெளிவந்தவுடன் செய்தியாளர்கள், ஜெயேந்திரனிடம் பேச முற்பட்டபோது அவர் கையை மட்டும் அசைத்தார். ‘சுவாமிகள் மவுனவிரதம்’ இருப்பதாக சீடர்கள் தெரி வித்தனர். **– செய்தி**

*மவுன விரதம் இருப்பதாக – சாமிகள் சீடர்களிடம் கூறியிருப்பார் போல!*

✦ தீர்ப்பு வந்தவுடன் ஜெயேந்திரர் புதுச்சேரி யிலிருந்து தனி விமானத்தில் தூத்துக்குடி சென்று, அங்கிருந்து காரில் திருச்செந்தூர் போய் சாமி தரிசனம் செய்தார். **– செய்தி**

*ஆதி சங்கரர் நடந்தே போனார்; அவரது ‘வாரிசு’ தனி விமானத்தில் பறக்கிறது.*

✦ பாரத வரலாற்றில் மகான்கள் தங்கள் தவவலிமையில் இன்னல்களைக் கடந்து இறைவனின் ஆட்சியை நிறுவிய வரலாறு மீண்டும் நிகழ்ந்துள்ளது. **– இந்து இயக்கங்களின் கூட்டமைப்பு அறிக்கை**

*அரசு சாட்சிகளைப் பல்டி அடிக்க வைப்பதற்கும் ‘தவ வலிமை’ பயன்படும் போல!*

✦ தீர்ப்பு வந்தவுடன் சீடர்கள் புதுச்சேரி நீதிமன்ற வளாகத்திலுள்ள நீதி தேவதை சிலை முன் தேங்காய் உடைத்து பூஜை செய்ய முயன்றனர். **– செய்தி**

*‘நீதி’ தேவதை யை இந்து கடவுள் பட்டியலில் சேத்துட்டேளா? அது ‘சூத்திரன்’ வடித்த ‘பிரதிஷ்டை’ செய்யப்படாத சிலை, தெரியுமோ?*

✦ திருச்செந்தூர், திருப்பதியில் ஜெயேந்திரர் தரிசனம் செய்தார். **– செய்தி**

*வரதராஜப் பெருமாள் கோயிலுக்கு எப்போது ‘விஜயம்’ சாமி?*

✦ காஞ்சி சங்கர மடத்தில் சீடர்கள் பட்டாசு வெடித்து மகிழ்ச்சி. **– செய்தி**

*நல்லா கொண்டாடுங்கோ! வெடிச் சத்தம் சங்கர்ராமன் குடும்பத்துக்கு கேட்கனும்!*

# கழகத் தலைவர் கைதுக்குக் கண்டனம்

தமிழக மக்கள் உரிமைக் கழகம் சார்பில் நவம்பர் 25 ஆம் தேதி மாலை சென்னை வள்ளுவர் கோட்டத்தில் திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட தோழர்கள் மீதான தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக்கோரி வழக்கறிஞர் புகழேந்தி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. த.மு.மு.க. மாநிலப் பொறுப்பாளர் குன்னங்குடி அனிபா, தபசி குமரன் (திராவிடர் விடுதலைக் கழகம்), சைதை சிவா (தமிழக வாழ்வுரிமை கட்சி), தமிழ் நேயன் (தமிழ் தேசிய மக்கள் கட்சி), ‘தடா’ அப்துல் ரகீம், க. அருணபாரதி (த.தே.பொ.க.), அருண்சோரி (தமிழ்நாடு மக்கள் கட்சி), டி.எஸ்.எஸ். மணி, திருமுருகன் காந்தி (மே 17 இயக்கம்) உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டுள்ள கொளத்தூர் மணியை விடுதலை செய்ய வலியுறுத்தியும், சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் சுற்றுச்சுவர் இடிப்பைக் கண்டித்தும், மண்டப முகாமில் மாவீரர் நாள் நிகழ்ச்சி நடத்தியவர்கள் மீது தடியடி நடத்திய காவல்துறையைக் கண்டித்தும் நாம் தமிழர் கட்சி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நவம்பர் 28 அன்று மாலை வள்ளுவர் கோட்டம் அருகே நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு நாம் தமிழர் கட்சியின் சென்னை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியார் அன்பன் தலைமை தாங்கினார். இதில் நாம் தமிழர் கட்சியின் முதன்மை ஒருங்கிணைப்பாளர்கள் கா.கலைக்கோட்டுதயம், இடிமுழக்கம் சாகுல் அமீது, அன்பு தென்னரசு, வழக்கறிஞர் அறிவுச் செல்வம், அமுதா நம்பி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமார், சுமித்ரா உள்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர். சீமான் கண்டன உரையாற்றினார்.

**மதுரை :** கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட 8 தோழர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யக்கோரியும், முள்ளி வாய்க்கால் சுற்றுச் சுவர் இடிப்பைக் கண்டித்தும் நவம்பர் 30 ஆம் தேதி மாலை மதுரை சிம்மக்கல் ஆறு முச்சந்தியில் கண்டனப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்-லெனினிஸ்ட்) மக்கள் விடுதலை அமைப்பு ஏற்பாடு செய்த இக்கூட்டத்தில் மீ.த. பாண்டியன், தங்கப்பாண்டியன், பால் பிரபாகரன் (தி.வி.க.), துரை சம்பத் (த.பெ.தி.க.), இராசு (த.தே.பொ.க.), வெந. கணேசன் (தமிழர் தேசிய இயக்கம்) உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் கண்டன உரையாற்றினர்.

DATE OF PUBLICATION 04.12.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்– பெரியார் மலர்’

### டிசம்பர் 24இல் வெளி வருகிறது!

மலர் தயாரிப்புப் பணிகள் நடந்து வருகின்றன.

தோழர்கள், விளம்பரங்கள் சேகரிப்புப் பணியில் துரிதம் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

டிசம்பர் 10 ஆம் தேதிக்குள் விளம்பரங்கள் வந்து சேர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.

(முதல் பக்கத் தொடர்ச்சி)

பகுதியில் ‘மாவீரர் நாள்’ எழுச்சியுடன் நடந்து வருகிறது.

ஈழ விடுதலைப் போராட்டத்தின் பல்வேறு கட்டங்களில் பல்வேறு முனைகளில் பயிற்சிகள் நடந்தாலும் போரட்டம் தொடங்கிய காலத்தில் போராளிகளைத் தயார் செய்த பெருமை இந்தப் புலியூருக்கு உண்டு என்று பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார். மாவீரர்களின் மகத்தான தியாகம், அர்ப்பணிப்பு குறித்து தேசியத் தலைவர் பிரபாகரன் பதிவு செய்த கருத்துகளையும் சமையலறையில் முடங்கிக் கிடந்த பெண்களை விடுவித்து அவர்களை ஆயுதம் தரிக்கச் செய்த புரட்சியை பெரியாரின் பெண் விடுதலைப் பார்வையில் தேசியத் தலைவர் முன்வைத்த கருத்துகளையும் விடுதலை இராசேந்திரன், அவரது உரையிலிருந்து படித்துக் காட்டினார்.

“தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு தமிழ்நாட்டில் பேருதவிகளை வழங்கிய பெருமை பெரியார் இயக்கங்களுக்கு உண்டு. பெரியார் இயக்கம், விடுதலைப் புலிகளோடு கொண்டிருந்த தோழமை உறவால் இயக்கத் தோழர்கள் கொள்கை உறுதி; தன்னலமற்ற அர்ப்பணிப்பு; விளம்பரம் தேடாத உழைப்பு போன்ற பாடங்களைப் பெற்று, தங்களுக்கு உரமூட்டிக் கொண்டார்கள். அதே போன்று விடுதலைப் புலிகள் இயக்கமும் பெரியார் இயக்கத்தின் உறவால் பகுத்தறிவு, பெண்ணுரிமை, கொள்கைகளை ஏற்றுக் கொண்டு, அதை தங்கள் இயக்கத்துக்குள் அறிமுகப்படுத்தியது.

இயக்கப் போராளிகள் ஜாதி மறுப்புத் திருமணம் செய்வதையும், அதுவும் போராளிகளின் குடும்பங்களுக்கிடையே நடப்பதையும் வலியுறுத்திய தேசியத் தலைவர் பிரபாகரன். தாலி இல்லாத திருமணங்கள் நடந்தால் மகிழ்ச்சி அடைவேன் என்று அறிவுறுத்தினார். அப்படியே தாலி கட்ட வேண்டும் என்றால், மதச் சின்னங்கள் இல்லாத புலிச் சின்னம் பொறித்த தாலியை பரிந்துரைத்தார். இயக்கம் நடத்திய ‘அறிவுச்சோலை’ புத்தக விற்பனையகங்களில் மூடநம்பிக்கை பரப்பும் நூல்கள் தடை செய்யப்பட்டிருந்தன. கிளிநொச்சியில் அமைந்திருந்த தமிழ் ஈழத்தின் அலுவலகங்கள் அனைத்திலும் கடவுள் படங்கள் எதுவும் இடம் பெறவில்லை. தேசியத் தலைவர் பிரபாகரன் கருத்துகள் மட்டுமே இடம் பெற்றிருந்தன. தை முதல் நாளே தமிழர் புத்தாண்டு என்பதை ஏற்று, இயக்கம் நடத்திய வைப்பகங்களில் தை முதல் நாளே வங்கிக் கணக்குகள் புதுப்பிக்கும் நிகழ்வுகள் நடந்தன. கல்வித் துறைப் பொறுப்பாளர் இளங்குமரன் எனும் பேபி சுப்பிரமணியம், பரப்புரைப் பொறுப்பாளராக இருந்து, பிறகு காவல்துறைப் பொறுப்பாளராகிய இரமேஷ் எனும் இளங்கோ, நிதித் துறை பொறுப்பாளர் புகழேந்தி போன்ற முன்னணி தளபதிகள், பகுத்தறிவு, பெண்ணுரிமை போன்ற பெரியாரிய சிந்தனைகளை இயக்கத்துக்குள் முன்னெடுப்பதில் முனைப்பாக செயல்பட்டனர். தேசியத் தலைவர் பிரபாகரன் இதை ஊக்கப்படுத்தி ஆதரவு தந்தார். புலிகளின் வானொலியில் இராமாயணக் கதை நெடுந்தொடர் நாடகமாக ஒலிபரப்பப்பட்டது. அதில் இராமாயணக் கதை ஆரிய-திராவிடப் போராட்டமே என்ற கருத்தின் அடிப்படையில் உரையாடல்கள் அமைந்திருந்தன. இராவணன்-திராவிடர்களின் தலைவனாகவும்; இராமன் ஆரியர்களால் போற்றப்பட்டவனாகவும் சரியாகவே சித்தரிக்கப்பட்டார்கள். இதற்கு இராமாயணத்தைப் பக்தியுடன் போற்றும் பழமைவாதி களிடமிருந்து எதிர்ப்புகள் வந்தன. தேசியத் தலைவர் பிரபாகரன், எதிர்ப்புகளைப் புறந்தள்ளியதோடு, அந்த நெடுந்தொடரை மறு ஒலிபரப்புச் செய்ய ஆணை யிட்டார். நூல் வடிவில் வெளிவந்த அந்த நெடுந்தொடருக்கு ஆரிய-திராவிடப் பார்வையிலேயே அணிந்துரையும் வழங்கினார். ஒரு கட்டத்தில் தமிழகத்திலிருந்து பெரியார் இயக்கத்தைச் சார்ந்த பகுத்தறிவுப் பரப்புரையாளர்களை அழைத்து, பரப்புரை செய்யவும் விரும்பினார். அதை கழகத் தலைவர் கொளத்தூர் மணியிடமும் தெரிவித்தார். சில பல காரணங்களால் அம்முயற்சி தடைபட்டது. கோயில்களுக்கு மாற்றாக மாவீரர் துயிலுமிடங்களே வணங்கத்தக்கவையாக மாற்றப்பட்டன. போராளிகள் பெயர்கள் தமிழ் மொழியில் மாற்றப்பட்டு, மத அடையாளங்கள் கொண்ட பெயர்கள் நீக்கப்பட்டன. 40,000 தமிழ்ப் பெயர்களைக் கொண்ட பட்டியல் நூல் தயாரிக்கப்பட்டு மக்களிடம் பரப்பப்பட்டது. புலிகளின் தொலைக் காட்சி, வானொலி மற்றும் இதழ்களில் மதம் சார்ந்த கருத்துகள் தவிர்க்கப்பட்டன. இப்படி எத்தனையோ நிகழ்வுகளைப் பட்டியலிட முடியும். பெரியார் இயக்கத்துக்கும் விடுதலைப்புலிகள் இயக்கத்துமான உறவு கொள்கைப் பரிமாற்றங்களை கொண்டிருந்த உறவாகும்.

புலிகளின் மகத்தான தியாகம்தான் இன்று ஈழத் தமிழர் பிரச்சினையை சர்வதேச அரங்கிற்குள் நகர்த்தி இருக்கிறது. இந்த நகர்வை மேலும் விரைவுபடுத்தி, ஈழ விடுதலை எனும் இலங்கை நோக்கிப் பயணிக்கச் செய்வதே மாவீரர்களுக்கு நாம் செலுத்தும் உண்மையான வீர வணக்கம். கனவுலகில் கற்பனைப் பெருமிதங்களில் மூழ்கிக் கிடப்பதால் எந்தப் பயனும் இல்லை என்றார் விடுதலை இராசேந்திரன்.

சு.க.ப.க. மண்டல செயலாளர் அ.குமார் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கினார். கு. சூரியகுமார் நன்றி கூறினார். தோழர் தா.செ. பழனிச்சாமி அனைவருக்கும் இரவு உணவு வழங்கினார். நிகழ்ச்சிகளை கனடா தமிழ் வானொலி நேரடியாக ஒலிபரப்பியது.

**நமது செய்தியாளர்**

# ஏனில்லை பெரியார் படம்!

வரலாற்றைத்திருத்தும்வேலை
வழக்கமாய்ப்பார்ப்பான்வேலை
பெரியாரைத்தலைகீழாகப்
பிழைபடக்காட்டும்வேலை
சரியாய்அவ்வேலைதன்னைத்
தமிழ்த்தேசம்பேசுவோர்கள்
விரிவாகச்செய்கின்றார்கள்
விதைநெல்லைஅவிக்கின்றார்கள்!

புராணங்கள்பொய்கள்தம்மைப்
பூணூலார்சதிகள்தம்மை
இராப்பகல்எடுத்துச்சொல்லி
இனமானம்காத்துநின்றார்
திராவிடர்தமிழர்என்றார்
திருக்குறள்மேன்மைசொன்னார்
பொறாமையால்இவரைமாற்றான்
போலன்றோபழிக்கின்றார்கள்!

ஒருபக்கம்சாதிக் கேடோ
உழைப்பாளர்தமைப்பிளக்கும்
மறுபக்கம்மதத்தின்ஆட்டம்
மாத்தமிழ்நாட்டுமண்பின்
திறத்தையேசிதைக்கும்;இந்தத்
தீமைக்கெலாம்மருந்து
உரத்தோடேஅய்யாதந்த
ஒப்பருங்கருத்தியல்தான்!

காட்டமாய்க்கொதித்தெழுந்து
காங்கிரசின்தலையில்போடு
போட்டவர்பெரியார்;சீறும்
புயலாகித்தமிழ்நாடு
கேட்டவர்பெரியார்;இங்குக்
கீழ்ச்சாதியாம்,நம்மானம்
மீட்டவர்பெரியார்;எல்லா
மேன்மைக்கும்பெரியார்தான்வேர்!

புடைப்பத்தோள்உயர்த்திநாளும்
புலிவீரம்பேசிப்பேசித்
தடைக்கெல்லாம்பெரியார்செய்த
தவறென்றேசொல்லிச்செல்லி
முடக்கினர்அவர்படத்தை
முள்ளிவாய்க்கால்முற்றந்தன்னில்!
விடைவரலாறுகூறும்
வெறுங்கூச்சல்கரைந்தேபோகும்!

**– தமிழேந்தி**

## புரட்சியாளர் நினைவு நாள் டிச.6



**ஜாதியம்
பார்ப்பனியம்
இந்துத்துவா சக்திகள்
தலைதூக்குதலை
எதிர்கொள்ள
நீங்கள் தந்த
கருத்தியலே
எங்களின்
வலிமையான
ஆயுதம்!**

**ஜாதி ஒழிப்பே சமூக விடுதலை
என சூளுரைப்போம்!**


# சென்னையில் கழகம் எடுத்த மாவீரர் நாள்

நவம்பர் 27 அன்று மாலை 6.05 மணிக்கு சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக இராயப்பேட்டை பத்ரி நாராயணன் நினைவு நூலகத்தில் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்ச்சி நடைபெற்றது. மருத்துவர் எழிலன் சுடர் ஏந்தி சிறப்புரை வழங்கினார். மாவட்ட தலைவர் பா.ஜான், இளைஞரணி செயலாளர் செல்வகுமார், அமைப் பாளர் சுகுமாறன், செய்தித் தொடர்பாளர் சுனில்குமார், திருவல்லிக்கேணி பகுதி பொறுப்பாளர்கள் அருண் குமார், செந்தில், தமிழ்ச் செல்வன், தமிழ்ச் செல்வி, புரட்சி பாரதம் பிரபு மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**‘புரட்சிப் பெரியார் முழக்கம்’**
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41.
✆ 9941613535

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 5th December 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | டிசம்பர் 12, 2013 | புரட்சி 12 | முழக்கம் 49 | விலை: ரூ.3.00

## வினாக்கள்... விடைகள்...!

✦ கோயில் கருவறைக்குள் உள்ள சிலை மந்திரத்தால் உயிரூட்டப்பட்டது; பாதுகாப்புக்காக கருவறையை அற நிலையத் துறை வீடியோ படம் எடுப்பது, பக்தர்களைப் புண்படுத்துவதாகும். **– அர்ச்சகர் சங்கம் எதிர்ப்பு**

ஆகம விதிகளில் திருத்தம் கொண்டு வந்து கருவறைக்குள் ஒரு கண்காணிப்புக் காமராவைப் பொருத்தி விடலாமே!

✦ குரங்கு, எலி, பூனைகளுக்கு காபிப் பழத்தை உணவாகக் கொடுத்து, அவை மலம் கழிக்கும் போது வெளியாகும் கொட்டைகள்தான் உயர்ந்த 'காபி' ரகமாக தயாரிக்கப்படுகிறது. **– 'இந்து' தமிழ் ஏடு செய்தி**

அக்கிரகாரத்துல 'பேஷா' மணக்கும் காபி வாசனை – ரகசியம், இப்பதாண்டா அம்பி புரியறது!

✦ ஜப்பான் நாட்டில் திருமணங்களை நடத்தி வைக்க புரோகிதர்களாக ரோபோக்களை (எந்திர மனிதர்களை) பயன்படுத்து கிறார்கள். **– 'தினமலர்' செய்தி**

அந்த ரோபோக்களை எங்க நாட்டுக்கு அனுப்பிடாதீங்க... ஓமகுண்டம் புகை மூட்டத்துல ஓட்டம் புடுச்சிடும்.

✦ செவ்வாய்க் கிரகத்துக்கு இந்தியா விண்கலம் அனுப்பிய அடுத்த 15 நாளில் அமெரிக்காவும் அனுப்பியுள்ளது. **– செய்தி**

இரண்டு கலங்களும் நாடாளுமன்றத்துக்கு தெரியாமல் ரகசிய ஒப்பந்தம் எதையாவது போடாமல் இருந்தால் சரி.

✦ தஞ்சை மாவட்டம் கும்பகோணத்தில் காவிரித்தாய் கோயில் கட்டப்பட்டு, குடமுழுக்கு நன்னீராட்டு விழா நடந்தது. **– செய்தி**

நன்னீராட்டுவதற்கு தண்ணீர் காவிரியிலிருந்து கிடைத்ததா? அல்லது கங்கையி லிருந்து கொண்டு வந்தீர்களா?

✦ தடுப்புக் காவல் சட்டங்களில் கைது செய்யப்பட் டுள்ளதில் இந்தியாவிலேயே முதலிடம் தமிழ்நாட்டுக்கு (523 பேர்), இரண்டாவது இடம் குஜராத். **– தேசியக் குற்ற ஆவண மய்யம்**

முந்துகிறார்; முந்துகிறார்; பிரதமர் பதவிப் போட்டியில் மோடியைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு ஜெயலலிதா முந்து கிறார்.

✦ ஆதார் அட்டைகளில் அடங்கியுள்ள அனைத்து தகவல்களும் அமெரிக்க உளவு நிறுவனத்துக்குப் போகிறது. **– மார்க்சிஸ்ட் கட்சி குற்றச்சாட்டு**

பயப்படவேண்டாம்; அமெரிக்க உளவு நிறுவனம் அட்டைகளை சரிபார்த்து உறுதி செய்தால், பிறகு நாம் இந்தியக் குடிமக்கள் தான் என்பதை இந்தியாவும் அங்கீகரித்து விடும்! அவ்வளவுதான்!

✦ கங்கை ஆற்றில் சாமி சிலைகளைக் கரைப்பதற்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு கருதி அலகாபாத் உயர்நீதி மன்றம் தடை. **– செய்தி**

ஆமாம்! இப்படி கரைப்பதால்தான் கங்கை அழுக்காகிறது; அதே போல் பக்தர்கள் முழுக்குப் போட்டு செய்த 'பாவங்'களைக் கரைப்பதற்கும் தடை போட்டால் கங்கை இன்னும் சுத்தமாகிவிடும்.

✦ கட்சியின் புதிய நிர்வாகிகள் பட்டியல் வெளியீடு; சத்தியமூர்த்தி பவனில் மகிழ்ச்சி; உற்சாகம். **– செய்தி**

இருக்கத்தானே செய்யும் அவர்கள் என்ன தமிழ்நாட்டில் ஆட்சியைப் பிடித்தா, மகிழ்ச்சி அடைய முடியும்? நன்றாக கொண்டா டுங்கள்.

✦ சர்வதேச ஊழல் ஒழிப்பு தினத்த முன்னிட்டு (டிச.9) பள்ளி, கல்லூரிகளில் மாணவர்கள் ஊழல் ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர். **– செய்தி**

சட்டசபை, நாடாளுமன்றத்தில் உறுதிமொழி ஏற்றிருந்தால் சபையை அவமதித்த குற்றமாகியிருக்கும்; நல்லவேளை பள்ளிகளோடு நிறுத்திக் கொண்டார்கள்!

✦ ஏற்காடு இடைத் தேர்தலில் ஆளுங்கட்சியான அ.தி.மு.க அமோக வெற்றி. எதிர்க்கட்சி தி.மு.க.வுக்கு டெபாசிட் தொகை கிடைத்தது. **– செய்தி**

எதிர்கட்சிக்கு டெபாசிட் கிடைக்கச் செய்திருப்பதெல் லாம் ஆளுங்கட்சிக்கு ஒரு வெற்றியா? அதிலெல்லாம் அழகிரி சாதனையை முறியடிக்கவே முடியாது, சார்!

### அறிவுரைக் குழுமத்தில் தோழர்கள் நேர் நிறுத்தம்

# தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை நீக்குக!

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் உமாபதி, இராவணன், மனோகரன், மாரிமுத்து ஆகியோர் 2013 டிசம்பர் 9 ஆம் தேதி அறிவுரைக் குழுமத்தின் முன் பிற்பகல் 3 மணி யளவில் நேர்நிறுத்தப்பட்டனர். உமாபதி, இராவணன் ஆகியோருக்காக பொதுச்செய லாளர் விடுதலை இராசேந்திரனும், மாரிமுத்து, மனோகரனுக்காக மருத்துவர் எழிலனும் வாதுரைத்தனர்.

விடுதலை இராசேந்திரன் நீதிபதிகள் முன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"நாட்டின் பாதுகாப்புக்கு, பொது ஒழுங்குக்கு, சமுதாயத்துக்கு இன்றியமையாத பொருள்களை வழங்குதலுக்கு, அதற்கு சேவை ஆற்றுவதற்கு எதிராக பாதிப்புகளை ஏற்படுத்தினால் மட்டுமே தேசியப் பாதுகாப்புச் சட்டம் பயன்படுத்தப்படவேண்டும். அத்தகைய எந்தக் குற்றமும் சாட்டப்படாத நிலையில், தேசியப் பாதுகாப்புச் சட்டம் இந்த வழக்கில் முறைகேடாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

தபால் நிலையங்கள் மீது தாக்குதல் நடத்தி யதாக பல்வேறு பிரிவுகளின் கீழ் காவல்துறை வழக்குப் பதிவு செய்துள்ளது. வழக்குகளில் பிணை வழங்கப்படவில்லை. பிணை வழங்கு வதை நீதிமன்றம் நிலுவையில் வைத்துள்ளது. ஆனால், பிணை கிடைத்துவிடும் என்று ஊகமாகக் கருதிக் கொண்டு, அவர்கள் பிணையில் விடுதலையாகிடக் கூடாது என்ற ஊகத்தின் அடிப்படையில் தேசியப் பாது காப்புச் சட்டம் முறைகேடாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இது தொடர்பாக சட்டரீதியான எங்கள் தரப்பு கருத்துகள் தங்களுக்கு அளிக்கப்பட்ட மனுவில் விளக்கப்பட்டுள்ளன. நான் சட்டங்களுக்கு அப்பாற்பட்டு சில நியாயங்களை தங்கள் கவனத்துக்குக் கொண்டு வர விரும்புகிறேன். எங்களுடைய இயக்கம் அரசியல் கட்சி அல்ல; பெரியாரின் ஜாதி ஒழிப்பு, சமூக சமத்துவம், சமூக நீதி, பெண் ணுரிமை, பகுத்தறிவு கருத்துகளை மக்களிடம் பரப்பும் சமுதாய இயக்கம். இன்றைய சூழலில், இளைஞர்கள் இப்படிப்பட்ட சமுதாயக் கொள்கைகளை நோக்கி வருவதே மிகவும் அதிசயமான அபூர்வமான நிகழ்வாகும். அரசியலுக்குப் போனால் பணம், பதவி, அதிகாரங்கள் கிடைக்கும். இங்கே அத்தகைய எந்தப் பயனும் கிடைக்காது. இளைஞர்களில் பெரும்பாலோர் பொழுதுபோக்கு, கேளிக்கைக் கொண்டாட்டங்கள், ஒழுக்கக்கேடான நடவடிக்கைகளில் மூழ்கிக் கிடக்கும் ஒரு சமூக அமைப்பில் மக்களுக்கு உண்மையான தொண் டாற்ற வரும் இத்தகைய இளைஞர்கள் மீது அவர்கள் கொள்கைக்காக நடத்தும் பேராட் டங்களைக் காட்டி வாழ்க்கையே முடக்கிப் போடும் இத்தகைய சட்டங்களைப் பயன்படுத் துவது நீதி தானா? என்று கேட்கிறோம்.

கைது செய்யப்பட்ட இந்தத் தோழர்கள், உண்மையிலேயே இந்தக் குற்றத்தைச் செய்திருப்பார்கள் என்பது உறுதியானால், அதற்கான சட்டங்களின் கீழ், நீதிமன்றம் தண்டனை வழங்கட்டும், நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம். எங்களது பெரியார் இயக்கம் எந்த வன்முறை செயல்பாடுகளையும் ஏற்கவில்லை. ஆனால், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை முறைகேடாக பயன்படுத்தி, ஓராண்டு காலம் முடக்கியிருப்பதால்தான், இங்கே நியாயம் கேட்க வந்திருக்கிறோம். தோழர் உமாபதியின் துணைவியாருக்கு அறுவை சிகிச்சை நடந்து, ஒரு சில நாட்களிலேயே அவர் துணைவியாருக்கு பாதுகாப்பாக இருந்த நிலையில் வீட்டில் நள்ளிரவில் கைது செய்யப்பட்டுள்ளார். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் அவர் இல்லை; கைது செய்யப்பட்ட ஒரு தோழரிட மிருந்து உமாபதி குறித்து வாக்குமூலம் பெற்று, அவர் மீது காவல்துறை பொய்யாக வழக்குத் தொடர்ந் துள்ளது. தோழர்கள் ஒப்புதல் வாக்குமூலம் ஏதும் தரவில்லை. காவல்துறையே ஒப்புதல் வாக்குமூலங்களை தயாரித்துள்ளது. எனவே அதில் அவர்கள் கையெழுத்திடவில்லை. கைது செய்யப்பட்டுள்ள தோழர்கள் இதற்கு முன் எந்த குற்றச்சாட்டின் கீழும் தண்டிக்கப் பட்டவர்களும் அல்ல.

இந்தியாவில் ஏனைய மாநிலங்களோடு ஒப்பிடும்போது சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் அதிகம் இல்லாத மாநிலம் தமிழ்நாடு. ஆனால், தமிழ்நாடுதான் தடுப்புக் காவல் சட்டங்களை அதிகமாகப் பயன்படுத்தும் மாநிலமாக உள்ளது. 2012 ஆம் ஆண்டு குற்றவியல் ஆவண நிறுவனம் தந்துள்ள தகவல்படி, 523 பேர் தமிழ்நாட்டில் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர். இந்த

(4 ஆம் பக்கம்)

## கழகத் தலைவர் கைதைக் கண்டித்து வைகோ நடத்திய பொதுக் கூட்டம்

திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீதான தேசிய பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்தும், அவர் மீதும் கழகத் தோழர்கள் மீதான தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை நீக்கக் கோரியும் ம.தி.மு.க. சார்பில் 7.12.2013 மாலை புரசைவாக்கம் 'தானா' வீதியில் கண்டனக் கூட்டம் நடைபெற்றது. ம.தி.மு.க. மாவட்டப் பொறுப்பாளர் ஜீவா தலைமையில் நடந்த கூட்டத்தில் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்தின், த.பெ.தி.க. பொதுச் செயலாளர் கோவை இராமகிருட்டிணன், த.தே.பொ.க. சார்பில் அருண் பாரதி, கரும்பு விவசாயிகள் கழகத்தின் சார்பில் பொன்னையன், நாகை தருமன், ஈட்டிமுனை இளமாறன் உள்ளிட்ட பலரும் கண்டன உரையாற்றினர்.

மழையையும் பொருட்படுத்தாமல் கூட்டம் நடந்தது. மேடையின் பின்புறத்தில் தோழர் கொளத்தூர் மணி, சிறைக் கம்பிகளுக்குள் அடைபட்டிருப்பதுபோல் வண்ணப் பதாகை நிறுவப்பட்டிருந்தது. இதற்கிடையே மத்திய உள்துறை அமைச்சர் ஷிண்டேயை ம.தி.மு.க. நாடாளுமன்ற உறுப்பினர் கணேசமூர்த்தி நேரில் சந்தித்து, கொளத்தூர் மணியை விடுதலை செய்ய வேண்டும் என்று வைகோ தயாரித்த கோரிக்கை மனுவை அளித்தார். உள்துறை அமைச்சரிடம் தொலைபேசி வழியாகவும், வைகோ கழகத் தலைவர் மீதான பொய் வழக்குகளை விவரித்துக் கூறி, தேசிய பாதுகாப்புச் சட்டத்தை நீக்கம் செய்ய வலியுறுத்தினார். மாநில அரசு முறைகேடாகப் பிறப்பிக்கும் தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை மத்திய உள்துறைக்கு நீக்கம் செய்யும் உரிமை உண்டு. கடந்த காலங்களில் பலமுறை இதேபோல் உள்துறை அமைச்சகம் நீக்கம் செய்துள்ளது குறிப்பிடத்தக்கது.

**தலையங்கம்**

# ‘மக்கள் சந்திப்புத் திட்டத்தை’ தீவிரப்படுத்துவோம்!

*‘மக்கள் சந்திப்புத் திட்டம்’ – கழக சார்பில் தோழர்களின் வேலைத் திட்டமாக முன் வைக்கப்பட்டுள்ளது. கழகத்தின் பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, செயலவைத் தலைவர் திருப்பூர் துரைசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் ஆகியோர், தோழர்களை மாவட்டந்தோறும் நேரில் சந்தித்து இதற்கான நன்கொடைப் படிவங்கள், துண்டறிக்கைகளை வழங்கியுள்ளனர்.*

*திராவிடர் விடுதலைக் கழகத்தின் பெரியாரியல் செயல்பாடுகளையும் அதன் முன்னுரிமைத் திட்டங்களையும் மக்களிடம் விளக்குவதற்கும் அவர்களின் ஆதரவை நன்கொடை வழியாக உறுதி செய்யவுமே இத்திட்டம்.*

*பெரியார் கொள்கைகள் உருவாக்கிய தாக்கம், தமிழ்நாட்டை வேறு மாநிலங்களிலிருந்து தனித்துவம் மிக்கதாக மாற்றியது. ஒப்பிட்டளவில் சமூக மாற்றத்துக்கு தமிழகத்தை பக்குவப்படுத்திய பெருமையும் சிறப்பும் பெரியாரியலுக்கு உண்டு. ஆனால், தமிழ்நாட்டை இன்று வேறு திசை நோக்கி இழுத்துச் செல்லக்கூடிய ஆபத்தான முயற்சிகள் முனைப்பாக அரங்கேறி வருகின்றன. திராவிட அரசியல் கட்சிகள், பதவி அரசியல் என்ற இலக்கை நோக்கி ஓடிக் கொண்டிருக்கின்றன. அவர்களுக்கான கொள்கை அடையாளங்களை கைவிட்டுவிட்டார்கள்.*

*தமிழ்நாட்டில் வேர் பிடிக்க முடியாமல் திணறிக் கொண்டிருந்த பார்ப்பன மதவாத சக்திகள், திராவிட அரசியல் கட்சிகள் மாறி மாறி வைத்த அரசியல் கூட்டணிகளால் தமிழகத்தில் தங்களை காலூன்றிக் கொண்டு அமைப்பு ரீதியாக வலிமை பெறக்கூடிய தீவிர செயல் திட்டங்களில் இறங்கிவிட்டனர். இதற்கு ஒத்திசைவாக ஜாதிய கட்சிகள் ஜாதிய அணி திரட்டலுக்கான முயற்சிகளில் இறங்கி, தலித் மக்களை எதிரிகளாகக் கட்டமைத்து, தங்களை வளர்த்துக் கொள்ளத் துடிக்கிறார்கள்.*

*மற்றொரு புறத்தில் தமிழ் தேசியம் பேசும் சக்திகள், பெரியாரைத் தனிமைப்படுத்திடும் முயற்சிகளில் இறங்கியுள்ளனர். பெரியார் தமிழறிஞர் அல்ல என்றும், தமிழ்ப் பகையாளர் என்றும் பேசியும் எழுதியும் வருகிறார்கள். ஆக, திராவிடக் கட்சிகள், மதவாத அமைப்புகள், ஜாதியக் கட்சிகள், தமிழ் தேசியம் பேசும் சில அமைப்புகள் ஆகியவற்றுக்கிடையே ‘பெரியார் எதிர்ப்பு’ என்ற ஒரே பார்வை மேலோங்கி நிற்பதைப் பார்க்க முடிகிறது. பெரியார் என்றுமே தன்னை தமிழ் அறிஞராகவோ, பேச்சாளராகவோ, எழுத்தாளராகவோ கூறிக் கொண்டதில்லை. தன்னை ஒரு கருத்தாளன் என்றே அவர் வரையறுத்துக் கொண்டார்.*

> **“நாம் பத்தாவது வயதிற்குமேல் எந்தப் பள்ளிக்கூடத்திலும் படிக்கவில்லை. நமக்கு புத்தக ஆராய்ச்சி இல்லை. நம் சக்திக்குள்ள அறிவு என்பதைக் கொண்டு நடுநிலை என்பதிலிருந்து ஆராய்வதன் மூலம் அறிவதும், ஆராய்ச்சிக்காரர்கள் என்பவர்களைச் சந்திக்கும்போது கேட்டு அறிவதும்தானே ஒழிய வேறில்லை என்பதை கண்ணியமாய் ஒப்புக் கொள்கிறோம்.”** *– பெரியார் (குடிஅரசு 25.12.1927)*

*– என்று நேர்மையாக அறிவித்தவர் பெரியார். ஆராய்ச்சியாளர்களும், தமிழில் புலமைப் பெற்றவர்களுமே தமிழர் வரலாற்றில் மதிப்புக்குரியவர்கள் என்ற பார்வைக்குப் பின்னால், பச்சையாக பதுங்கிக் கிடப்பது, பார்ப்பனியம் பொதுப் புத்திக்குள் நுழைத்து வைத்திருக்கும் ‘மேட்டிமை’ கருத்தியல் தான்! சமுதாயத்தின் வளர்ச்சி நோக்கியப் பார்வையில் பெரியார் முன்வைத்த சிந்தனைகளின் உள்ளடக்கத்தைப் பகுத்துப் பார்ப்பது என்பது வேறு; அதற்கு உள் நோக்கம் கற்பித்து சேறு வாரி இறைப்பது என்பது வேறு. மொழி பற்றிய பெரியாரின் கருத்துகளையும் அவ்வாறு ஆய்வுக்கு உட்படுத்துவதே சரியான அணுகுமுறையாகும். எந்தத் தமிழர்களின் மானத்துக்கும் உரிமைக்கும் போராடினாரோ, அதே மக்களை ‘கடவுளை நம்பும் காட்டுமிராண்டிகளே’ என்று பெரியார் உரிமையோடு கூறினார். அப்படி விளித்தபோது, அதற்காக அவரது உழைப்பால் பயன்பெற்ற சமுதாயம் அவர் மீது ஆத்திரம் கொண்டு பாய்ந்துவிடவில்லை. அப்படிப் பேசுவதற்கு உரிமை அவருக்கு உண்டு என்றே உணர்வுள்ள தமிழர்கள் அங்கீகரித்தார்கள். பார்ப்பனர்கள்தான், ‘காட்டுமிராண்டிகள்’ என்று கூறுகிறார், என தூண்டிவிட்டு எழுதினர்; பேசினர்.*

*மொழியின் வளர்ச்சிக்கும், அறிவியலுக்கும் பெரியார் முன் வைத்த கருத்துகளுக்கு உள்நோக்கம் கற்பித்து, ‘பெரியார் தமிழைக் கொச்சைப்படுத்துகிறார், பார்’ என்று அதே பார்ப்பனியத்தின் குரலில் எழுதவும் பேசவும் கிளம்பியிருக்கிறார்கள். “திருமணம் கிரிமினல் குற்றமாக்கப்பட வேண்டும்” என்று கூட பெரியார் கூறினார். திருமணமானவர்களிடம் போய் உங்களை எல்லாம் கிரிமினல் என்று கூறி தமிழ்ப் பண்பாட்டை சிறுமைப்படுத்துகிறார், பெரியார் என்று, இவர்களே பேசினாலும் வியப்பதற்கில்லை.*

*பார்ப்பனியம் முழுமையாக தமிழனைஅடிமைப்படுத்தியிருந்த சமூகத்தில் வடமொழிகளை விரட்டி, திருமணம், இறுதி நிகழ்வு, வீடு திறப்பு என்று ஒவ்வொரு நிகழ்விலும் தமிழை ஒலிக்கச் செய்தவர் பெரியார். தமிழ் எழுத்துக்களின் சீர்திருத்தத்தை அறிமுகப்படுத்தியதோடு, தமிழறிஞர்களுக்கு சமுதாயத்தில் சுயமரியாதையை உருவாக்கியதிலும் பெரியாருக்கு பங்கு உண்டு. தமிழரின் ‘வரலாற்றுப் போக்கைத் திருப்பிய’ ஒரு தலைவரின் தன்னலமற்ற – நேர்மையான சமுதாயத் தொண்டை புறந்தள்ள வேண்டும் என்ற சதி தொடங்கியிருக்கிறது. இத்தகைய தமிழகச் சூழலில் சுயமரியாதை சமத்துவத்தை இலக்காகக் கொண்ட ஒரு இன விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டிய களத்தில் நாம் நிற்கிறோம்.*

*ஆற்ற வேண்டிய கடமைகளின் அவசியத்தை நெஞ்சில் நிறுத்தி, தோழர்கள் களப்பணியாற்ற கடமை அழைக்கிறது! தோழர்களே மக்கள் சந்திப்பு திட்டத்தின் வழியாக இயக்கத்துக்கு புதிய தோழர்களைக் கொண்டு வந்து இயக்க நிதி திரட்டலையும் துரிதப்படுத்துங்கள் என்று உரிமையோடு அழைக்கிறோம்!*

*பெரியாரியமே இன விடுதலைக்கான சரியான பாதை!*

# தமிழர் ‘இனப்படுகொலை’ உறுதியாகிறது

*முள்ளிவாய்க்கால் படுகொலையைத் தொடர்ந்து, முதலில் அயர்லாந்து நாட்டிலுள்ள ‘மக்கள் நிரந்தரத் தீர்ப்பாயம்’ விசாரணை ஒன்றை நடத்தியது. வியட்நாமில் அமெரிக்காவின் மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்களை அம்பலப்படுத்திய பெருமை இந்த ஆணையத்துக்கு உண்டு. நேர்மையும் நம்பகத் தன்மையும் கொண்ட இந்த ஆணையத்தின் முன் இலங்கை இராணுவத்தின் போர்க் குற்றம் தொடர்பாக ஏராளமான ஆவணங்கள் சான்றுகளாக உலகத் தமிழர் அமைப்புகளின் முயற்சியால் சேகரித்து முன்வைக்கப்பட்டன. மனித உரிமை மீறல்கள் போர்க் குற்றங்களை உறுதிப்படுத்தியது, இந்த விசாரணை ஆணையம். ஆனால், இனப்படுகொலைக்கான அறிகுறிகள் தெரிகிறது என்றும், அந்தக் குற்றச்சாட்டை உறுதிப்படுத்த சான்றுகள் தேவை என்றும் கூறியது. மீண்டும் மக்கள் நிரந்தரத் தீர்ப்பாயம் இது குறித்து இம்மாதம் ஜெர்மனியில் கூடி விரிவாக ஆராய்ந்து இனபடுகொலை குறித்து விசாரிக்க நிபுணர் குழு ஒன்றை நியமித்திருக்கிறது. இந்த நிலையில் சிங்கள இராணுவத்துக்கு அனைத்து உதவிகளையும் செய்து வந்த இந்திய அரசின் பிரதிநிதி ஒருவரே ‘இனப் படுகொலை’ நடந்தது உண்மையே என்று ஒப்புதல் தந்துள்ளார். அவர் வேறு யாரும் அல்ல, மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம்தான்.*

*சென்னையில் 30.11.2013 அன்று அவரே ஏற்பாடு செய்த கருத்தரங்கம் ஒன்று, நியு உட்லண்ட்ஸ் ஓட்டலில் நடந்தது. அதில் பேசிய ப. சிதம்பரம், “இறுதிக் கட்டப் போரின்போது இலங்கையில் இனப்படுகொலை நடந்ததை நான் மறுக்கவில்லை. 2009 ஆம் ஆண்டு நாம் மேற்கொண்ட முயற்சிக்கு இலங்கை அரசு உளப்பூர்வமாக செவி சாய்க்கவில்லை. அப்படி நடந்திருந்தால் பிரபாகரன் உயிரோடு இருந்திருக்கக்கூடும். இறுதிக் கட்டப் போரில் நடந்த இனப் படுகொலை மற்றும் மனித உரிமை மீறல்கள் குறித்து சுதந்திரமான விரிவான விசாரணை நடத்தி படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படும் வரை நமது முயற்சி ஓயாது” - என்று பேசியுள்ளார். அவரது முழு உரையை ‘துக்ளக்’ பத்திரிகை (11.12.2013) பதிவு செய்துள்ளது.*

*மத்திய நிதியமைச்சர் பொறுப்பிலுள்ள ஒருவர், முதன்முறையாக ‘இனப் படுகொலை’ நடந்தது என்பதற்கு ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளார். இனப்படுகொலை என்ற நிலை வந்துவிட்ட பிறகு, சர்வதேசம் இலங்கையில் நேரடியாக தலையிட்டு நடவடிக்கை எடுக்க முடியும் என்று அய்.நா.வின் சட்டங்கள் தெளிவாகக் கூறுகின்றன. அந்த நாட்டில் விடுதலைக்குப் போராடும் மக்கள், சுதந்திர நாட்டை அமைத்துக் கொள்ளும் உரிமையையும் சர்வதேச சட்டங்கள் அங்கீகரிக்கின்றன. ஏற்கெனவே பிரிட்டன், பிரான்சு, அய்.நா.வின் மனித உரிமை ஆணையம், இலங்கை அரசுக்கு எதிராக வெளிப்படையாகவே பேசத் தொடங்கிவிட்டன. முன் எப்போதும் இல்லாத நெருக்கடியை இலங்கை அரசு சந்திக்கத் தொடங்கிவிட்டது. ‘இனப் படுகொலை’யை ஒப்புக்கொண்ட ப.சிதம்பரம், அடுத்து இந்திய அரசுக்கு அழுத்தம் தருவாரா? அல்லது அடுத்து வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழர்களின் வாக்குகளைக் குறி வைத்துப் பேசினாரா? என்பது அவரது அடுத்த கட்ட நகர்வுகளை வைத்தே முடிவு செய்ய முடியும்.*

## பார்ப்பனர் எச்சில் இலையும் ‘புண்ணிய’மானது!

*பார்ப்பனர் சாப்பிட்ட எச்சில் இலை மீது ‘சூத்திரர்கள்’ உருண்டு வழிபாடு செய்தால், நோய் தீர்ந்து, புண்ணியம் கிடைக்கும் என்ற நம்பிக்கை , இப்போதும் கருநாடகத்தில் தொடருகிறது. மங்களூர் அருகே உள்ள குக்கே சுப்ரமணியசாமி கோயிலில் ஆண்டுதோறும் ‘மடேஸ் நானா’ என்ற பெயரில் நடக்கும் இழிவை எதிர்த்து பிற்படுத்தப்பட்ட ‘இந்து’ மடாதிபதிகளும் போர்க்கொடி உயர்த்தியுள்ளது குறிப்பிடத்தக்கது. இந்த அவமானத்தை தலைகுனிய வைக்கும் இழிவை நிறுத்தக்கோரி மங்களூர் துணை ஆளுநர் அலுவலகம் எதிரில் கடந்த சனிக்கிழமை டிசம்பர் 7 ஆம் தேதி ஒரு நாள் பட்டினிப் போராட்டம் நடந்தது. கருநாடகாவைச் சார்ந்த வேதிக் பிற்படுத்தப்பட்டோர் அமைப்பு, பார்ப்பன இழிவுக்கெதிராக நடத்திய இந்தப் போராட்டத்தில், சித்தேஸ்வர மடாதிபதி பசவராஜா தேவாரூ, மைசூர் பேட்டாட புரா மடாதிபதி சிரச்ரேட்டி சிவாச்சார்ய சுவாமி, கருநாடகா சமூகநலத் துறை அமைச்சர் எச். ஆஞ்சநேயா உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டு கண்டித்துப் பேசினர்.*

*கடந்த பல ஆண்டுகளாகவே இதை எதிர்த்து இயக்கங்கள் நடந்து வருகினற்ன. ஆனாலும், பார்ப்பன அடிமையில் மூழ்கிக் கிடக்கும் மக்கள், பார்ப்பனர் சாப்பிட்ட எச்சில் இலையில் உருண்டு, ‘அங்கப் பிரச்சனம்’ செய்து தோல் வியாதிகளைப் பற்றி கவலைப்படாமல் அதை ‘புண்ணியமாக’க் கருதி வருகிறார்கள். இதைத் தொடர்ந்து எதிர்த்துவரும் சிவராமு என்பவரை கடந்த ஆண்டு ஆர்.எஸ்.எஸ். பார்ப்பனர்கள் கடுமையாக தாக்கியுள்ளனர். மாநில அரசு இதைத் தடை செய்யாமல், பலத்த போலீஸ் பாதுகாப்பு தந்து வருகிறது. கருநாடக முதல்வர் பகுத்தறிவாளர் அவராவது இந்த பார்ப்பன இழிவுச் சடங்குக்கு தடை போடுவாரா? மாநில சமூக நலத்துறை அமைச்சர் பட்டினிப் போராட்டத்தில் கலந்துகொண்டு கண்டனம் தெரிவித்தாலும் சட்டத்தினால் இதைத் தடுக்க முடியாது என்றும் மக்களிடம் மனமாற்றம் வேண்டும் என்றும் பேசியுள்ளார். பார்ப்பனர் இழிவை நியாயப்படுத்தும் ஒரு சடங்கை தடுக்க ஆட்சியே அஞ்சுகிறது என்பதையே இது உணர்த்துகிறது.*

## அம்பேத்கர் மணிமண்டபத்தில் கழக சார்பில் வீர வணக்கம்




*சென்னை மாவட்ட கழகத்தின் சார்பில் டிசம்பர் 6 அன்று புரட்சியாளர் அம்பேத்கர் நினைவு நாளில், அம்பேத்கர் மணி மண்டபத்தில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் மாலை அணிவித்தார். இராயப்பேட்டை பத்ரி நாராயணன் படிப்பகத்தில் வைக்கப்பட்டிருந்த அம்பேத்கர் படத்துக்கும், மயிலை விசாலாட்சி தோட்டத்திலுள்ள அம்பேத்கர் சிலைக்கும் தோழர்கள் புடை சூழ, பொதுச் செயலாளர் ஜாதி ஒழிப்பு முழக்கங்களுடன் மாலை அணிவித்தார்.*

# இன விடுதலைப் போராளி மண்டேலா - விடை பெற்றார்!

***கறுப்பினப் போராளி, இன விடுதலை இயக்கங்களின் நாயகர், சிறைப் பறவை மண்டேலா, அம்பேத்கர் முடிவெய்திய அதே டிசம்பர் 6 ஆம் நாளில் விடைபெற்றுக் கொண்டுவிட்டார்.***

"வன்முறைக்கு இடம் கொடுக்காமல் அமைதியான வழியில்தான் எங்கள் போராட்டங்களை தொடங்கினோம். ஆனால், அரசு வன்முறையை ஏவியது. வன்முறைக்கு வன்முறைதான் தீர்வு என்பதால் நாங்களும் எங்கள் வழிமுறைகளை மாற்றிக் கொண்டோம். நாங்கள் தேர்ந்தெடுத்தது வன்முறையைத் தானே தவிர, பயங்கரவாதத்தையல்ல" என்று கூறிய மண்டேலா, பிறகு அந்த வன்முறைப் போராட்டத்தையும் கைவிட்டார். வரலாறாகிப் போன அந்த விடுதலை வீரர் பற்றிய சுருக்கமான வரலாறு இதுதான்: (நன்றி: குமுதம் ரிப்போர்ட்டர்)



18 ஜூலை 1918 அன்று தென்னாப்பிரிக்காவின் வெஸோ என்ற குக்கிராமத்தில் பிறந்தவர் ரோலிலாலா மண்டேலா. பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர். தந்தை பெயர் காட்லா. பள்ளி ஆசிரியருக்கு ரோலிலாலா வாயில் நுழையவில்லை போல. "இனி உன் பெயர் நெல்சன்" என்று சொல்லி விட்டார்.

கருப்பின மக்களை விடுவிக்க வேண்டும் என்ற இலக்குடன் செயல்பட்ட ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் மீது மண்டேலாவுக்கு ஈர்ப்பு ஏற்பட்டது. பள்ளிப் படிப்பை முடித்ததுமே கட்சியில் சேர்ந்து விட்டார். கொள்கைக்கு கட்சி. சரி, பிழைப்புக்கு? முதலில் கிடைத்தது காவலாளி வேலை. பின்னர் உதவியாளர் உத்தியோகம். வக்கீல் குமாஸ்தா என்று பல பணிகள். கூடவே, கட்சிப் பணி. என்றாலும், படிப்பை விட்டுவிடவில்லை. ஊழியத்தில் கிடைத்த ஊதியத்தைச் சட்டம் படிக்கப் பயன்படுத்தினார்.

கட்சியில் மண்டேலா வேகவேகமாக வளர்ந்து கொண்டிருந்தார். அவர்தான் வேகமாக வளர்ந்தாரே தவிர, கட்சி மந்தகதியில்தான் இருந்தது. கருப்பர்களுக்கு எதிராக கடுமையான சட்டங்களையும் அடக்குமுறைகளையும் அரசாங்கம் ஏவியபோது மாய்ந்து மாய்ந்து மனு எழுதியது கட்சித் தலைமை.

வெறுப்பாக இருந்தது மண்டேலாவுக்கு. 'உரிமை என்பது வெள்ளையரிடம் கூனிக்குறுகிக் கெஞ்சிப் பெறுவதல்ல. போராட்டத்தின் வழியாக நாமே எடுத்துக் கொள்வது' என்றார். ஒத்த கருத்துடைய இளைஞர்கள் மண்டேலாவுக்குத் தோள் கொடுத்தனர். 'தாய்க் கட்சி ஒரு பக்கம் இயங்கட்டும். நாமே தனியே இளைஞரணியைத் தொடங்கலாம்' என்றார் மண்டேலா. கடிதம் போதும், களத்தில் இறங்கலாம் என்று முடிவு செய்தனர் இளைஞர்கள். சின்னதும் பெரியதுமாகப் போராட்டங்கள் நடந்தன. இளைஞர்கள் மத்தியில் உற்சாகம் தென்பட்டது. அது மண்டேலாவுக்குள் உத்வேகத்தைக் கிளப்பியது. 'அமைதிக்கு விடைகொடுப்போம், ஆயுதப் போராட்டத்துக்கு வழி அமைப்போம்' என்றார். இளைஞர்கள் ஆர்ப்பரித்தனர். அந்தச் சத்தம் அரசின் கவனத்தைக் கலைத்தது.

4 டிசம்பர் 1956 அன்று அதிரடியாகக் கைது செய்யப்பட்டார் மண்டேலா. வன்முறை வழியாக ஆட்சியைக் கவிழ்க்க சதி செய்தார், தேசத் துரோக காரியங்களில் ஈடுபட்டார், கம்யூனிசத்தைப் பரப்ப முயன்றார் என்று மண்டேலாவின் மீது பல குற்றச்சாட்டுகள். வழக்கு ஒரு பக்கம் நடக்க, பிணையில் வெளிவந்து பணிகளைச் செய்து கொண்டிருந்தார் மண்டேலா. அந்தச் சமயத்தில்தான் தென்னாப்பிரிக்க நிறவெறி அரசு ஒரு மிகப் பெரிய படுகொலைச் சம்பவத்தை அரங்கேற்றியது. அதற்கு வரலாறு வழங்கிய பெயர், 'ஷார்ப்வில் படுகொலை'. அப்போது கருப்பின மக்கள் எப்போதும் அடையாள அட்டையுடன்தான் இயங்க வேண்டும் என்ற சட்டம் அமலில் இருந்தது. சமூக ஒதுக்கலின் சத்திய சாட்சியமாக இருந்த அடையாள அட்டைச் சட்டத்துக்கு எதிராக கருப்பின மக்கள் போராட்டத்தில் இறங்கினர்.

21 மார்ச் 1960 அன்ற அரசுக்கு எதிராக ஊர்வலம் நடத்திய கருப்பின மக்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தியது அரசு. அந்தத் தாக்குதலில் அறுபதுக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர். அந்தப் படுகொலை நாடு தழுவிய அளவில் பலத்த அதிர்வலைகளை ஏற்படுத்தியது. மக்கள் போராட்டத்தில் குதித்தனர். எல்லாவற்றுக்கும் காரணம் ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸ் என்று முடிவு செய்த அரசு, அந்தக் கட்சியையே தடை செய்தது.

சில ஆண்டுகளுக்கு முன்னால் ஆயுதம் ஏந்த வேண்டும் என்று மண்டேலா முழங்கினார் அல்லவா, உண்மையில் அவர் அந்த முடிவை உடனடியாகச் செயல்படுத்தவில்லை. ஆனால் 'ஷார்ப்வில் படுகொலை' ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்து வைத்தது. 12 டிசம்பர் 1961 அன்று 'ஆப்பிரிக்காவின் ஈட்டி' என்ற பொருள் வரும் வகையில் எம்.கே. என்கிற ஆயுத இயக்கத்தை ஆரம்பித்தார் மண்டேலா. அகிம்சைப் பயணம் ஆயுதப் போராட்டமாக மாறியது அந்தப் புள்ளியில் இருந்துதான். அரசுக்கு எதிராக கொரில்லா யுத்தத்தைத் தொடங்கினார். ஆங்காங்கே தாக்குதல் நடந்தன. அரசு மிரண்டது. போதாக்குறைக்கு நாடு தழுவிய அளவில் சுற்றுப் பயணம் செய்து, இளைஞர்களைத் திரட்டினார். தனியார் இராணுவத்தைக் கட்டமைத்தார். ஆயுதப் பயிற்சிக்காக இளைஞர்கள் சிலரைத் தேர்ந்தெடுத்து வெளிநாடுகளுக்கு அனுப்பினார். அல்ஜீரியா சென்ற மண்டேலா அங்கே ஆயுதப் பயிற்சி எடுத்துக் கொண்டார். இயந்திரத் துப்பாக்கியை இயக்கினார். வெடிகுண்டு தயாரித்தார்.

ஆயுதப் பயிற்சியை முடித்துக் கொண்டு தென்னாப்பிரிக்கா திரும்பியபோது, மண்டேலாவைக் குறிவைத்து கைது செய்தது அரசு. வழக்கின் முடிவில் ஐந்தாண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால், அத்துடன் மண்டேலாவை மன்னித்துவிட அரசாங்கம் விரும்பவில்லை. ஏற்கெனவே நிலுவையில் இருந்த வழக்கின் மீது வெளிச்சம் பாய்ச்சப்பட்டது. அந்த வழக்கில் அரசாங்கம் முன்வைத்த அத்தனையும் அதிபயங்கர குற்றச்சாட்டுகள். 'அரசைக் கவிழ்க்க சதி செய்தார், அரசுக்கு எதிராக நாசவேலைகளில் ஈடுபட்டார், மக்களைப் போராட்டத்துக்குத் தூண்டினார், ஆயுதக் குழுவை உருவாக்கினார், அரசுக்கு எதிராக கொரில்லா யுத்தம் நடத்தினார்' என்று இருநூறுக்கும் மேற்பட்ட குற்றச்சாட்டுகள். அந்தப் பட்டியலைப் பார்த்தபோது மரண தண்டனையைத் தவிர மாற்று இல்லை என்றுதான் எல்லோருமே நினைத்தார்கள்.

20 ஏப்ரல் 1964 அன்று நீதிமன்றத்துக்கு அழைத்து வரப்பட்டார் மண்டேலா. மரணத்தின் நெருக்கத்திலும் மண்டேலா உதிர்த்த வாசகங்கள்தான் கட்டுரையில் தொடக்கத்தில் இருப்பவை. வழக்கின் முடிவில் மண்டேலாவுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. 'பிசாசுகளின் தீவு' என்று வர்ணிக்கப்பட்ட ரோபன் தீவு சிறைச்சாலையில் கைதி எண். 466/64 என்ற அடையாளத்துடன் அடைக்கப்பட்டார் மண்டேலா. உலகின் கொடூரமான சித்திரவதைகள் எங்கு நடக்கும் என்று கேட்டால் அந்தக் காலத்தில் ரோபன் தீவைத்தான் கை காட்டுவார்கள். ஆறு சதுர அடிகள் கொண்ட அறையில் அடைத்து வைத்தார்கள். சுண்ணாம்புச் சுரங்கத்தில் வேலை செய்யச் சொன்னார்கள். இருபத்தியேழு ஆண்டுகால சிறைவாசத்தின் பெரும் பகுதியை அந்தச் சிறையில்தான் கழித்தார் மண்டேலா.

மக்களின் தொடர்ச்சியான போராட்டங்கள், உலக நாடுகளின் அழுத்தங்கள் காரணமாக 11 பிப்ரவரி 1990 அன்று விடுதலையானார் மண்டேலா. அதன் பிறகு அதிபரானது, அமைதிக்கான நோபல் பரிசு, பாரத ரத்னா, அரசியலில் இருந்து ஓய்வு எல்லாம் வரலாற்றின் வெள்ளைப் பக்கங்கள். ஆனால் சிறைக்குள் அவர் அனுபவித்த கொடுமைகள் அத்தனையும் கருப்புப் பக்கங்கள். கருப்பின மக்களின் விடுதலைக்காக அவா கொடுத்த விலை அது!

## சங்கராபுரத்தில் கண்டன ஆர்ப்பாட்டம்

30.11.2013 சனிக் கிழமை மாலை 3 மணியளவில் விழுப்புரம் மாவட்டம் திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி உள்ளிட்ட கழகத் தோழர்கள் மீது போடப்பட்டுள்ள தேசியப் பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்தும், கழகத் தலைவரை எந்தவித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யக் கோரியும் சங்கராபுரம் பேருந்து நிலையம் அருகில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட அமைப்புக் குழு உறுப்பினர் ச. பெரியார் வெங்கட் தலைமை தாங்கினார். செ. நாவாப்பிள்ளை, கா. இராமர், ந. அய்யனார் ஆகியோர் உரையாற்றினர்.

ஆர்ப்பாட்டத்தில், கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீது போடப்பட்டுள்ள தேசியப் பாதுகாப்புச் சட்டத்தை கண்டித்தும் எந்தவித நிபந்தனையுமின்றி கழகத் தலைவரை விடுதலைச் செய்ய வேண்டும் என்றும்,

சங்கராபுரம் நகரத்தில் ஜாதிப் பெயர்களை தூக்கிப் பிடிக்கும் வணிகம் மற்றும் தொழிற்சாலைகள் உடனடியாக தங்கள் கடைகளிலுள்ள ஜாதிப் பெயரை அகற்றி, சமூக மாற்றத்திற்கு வழி வகுக்க வேண்டும் என்றும்,

ஜாதி வெறியர்களால் படுகொலை செய்யப்பட்ட தர்மபுரி இளவரசனின் படுகொலை ஓர் ஆண்டு கடந்தும் முறையான விசாரணை இல்லாத காரணத்தால் இளவரசனின் படுகொலையை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றவும், ஜாதி வெறியர்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிய நிவாரணம் வழங்கவும் வலியுறுத்தப்பட்டது.

சங்கராபுரம் வட்டம் சேஷ சமுத்திர கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்கள் சாமி ஊர்வலத்தை அரசு பொதுச் சாலைகளில் நடத்தக் கூடாது என்று தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஜாதி இந்துக்கள் தாக்குதல் நடத்தி ஊர்வலத்தை தடுத்து நிறுத்தினர். இதைக் கண்டித்து கழகத்தின் சார்பில் தடையை மீறி போராட்டம் நடத்தி தோழர்கள் கைதாகினர். இந்த ஆண்டு அவ்வாறு நடைபெறாமல் இருக்க காவல்துறை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

பெரியார் குமார், கி.ஆனந்தன், மு. நாகராஜ், சி. ஆசைத்தம்பி, இராமலிங்கம், குப்புசாமி உள்ளிட்ட பல தோழர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சி மாவட்டக் கழகக் கலந்துரையாடல்

திராவிடர் விடுதலைக் கழகத்தின் திருச்சி மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 2.12.13 மாலை 7.30 மணிக்கு சகிலா விடுதியில் மாவட்டத் தலைவர் மீ.இ. ஆரோக்கியசாமி தலைமையில் நடைபெற்றது.

சிறப்பு அழைப்பாளர்களாக செயலகத் தலைவர் திருப்பூர் துரைசாமி, மாநில பொருளாளர் ஈரோடு இரத்தினசாமி, மாநில பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன் கலந்து கொண்டனர். திருச்சி மாவட்டக் கழகத்திலிருந்து தோழர்கள் மண்டல அமைப்புச் செயலாளர் புதியவன், மாவட்டச் செயலாளர் கந்தவேல் குமார், மாவட்ட அமைப்பாளர் குணராஜ், மாவட்ட பொருளாளர் மனோகரன், திருவரங்கம் அமைப்பாளர் அசோக், பெரியார் பெருந் தொண்டர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து, பொன்னுசாமி, பழனி, முருகானந்தம், தமிழ் முத்து, ஞானம் உள்பட பலர் கலந்து கொண்டனர். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழகத் தலைவர் மற்றும் தோழர்கள் மீது தேசிய பாதுகாப்புச் சட்டத்தை ஏவியுள்ள தமிழக அரசை கண்டிக்கிறோம்.

ஆதித் தமிழர் பேரவையின் மாநில மகளிரணி செயலாளர் இராணி, அருந்ததியினருக்கான 6 சதவீதம் உள்ஒதுக்கீட்டை மாநில அரசு நிறைவேற்றக்கோரி திருச்சி அம்பேத்கர் சிலை முன் தீக்குளித்து மரணம் அடைந்ததற்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறது. டிசம்பர் மாதத்தில் ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடத்துவது என்று தீர்மானிக்கப்படுகிறது. திருவரங்கம் நகர தலைவராக பெரியார் பெருந்தொண்டர் டாக்டர் எஸ்.எஸ்.முத்து நியமிக்கப்பட்டார். மக்கள் சந்திப்பு இயக்கத்தை திருச்சி மாவட்டக் கழகத்தின் சார்பாக சிறப்பாக நடத்துவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

DATE OF PUBLICATION 11.12.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# கரியாம்பட்டி அருந்ததியர் மக்கள் மீது நடக்கும் தொடர் தாக்குதல்!

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை அருகில் உள்ள கிராமம் கரியாம்பட்டி - நடுப்பட்டி. இக்கிராமத்தில் கடந்த 24.11.2013 அன்று மாலை 3.30 மணியளவில் சுமார் 200 பேர் கொண்ட சாதி இந்து வன்கொடுமை கும்பல் கத்தி, அரிவாள், உருட்டுக்கட்டை, பெட்ரோல் உள்ளிட்ட ஆயுதங்களுடன் தலித் குடியிருப்பிற்குள் அத்துமீறி உள்ளே நுழைந்துள்ளனர். அங்கிருந்த தலித் மக்களை சாதிய ரீதியாக இழிவாகப்பேசி அவமானப்படுத்தியுள்ளனர். தாக்குதலிலும் ஈடுபட்டுள்ளனர். இக்கொடிய வன்முறையில் 8 வீடுகள் தீ வைத்து கொளுத்தப்பட்டன, 27 வீடுகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. வீட்டிலிருந்த தொலைக்காட்சி, பீரோ, மிக்சி உள்ளிட்ட பொருட்கள் அடித்து சூறையாடப்பட்டுள்ளன. இத்தாக்குதலில் பெருமாள் (36), நாகராஜ் (34), சுப்பிரமணி (28) ஆகிய 3 தலித்துகள் காயமடைந்தனர். மூவரும் திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்து வருகின்றனர். இச்சம்பவம் குறித்து நிலக்கோட்டை காவல்நிலையத்தில் 5 முதல் தகவல் அறிக்கைகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. 22 தலித்துகளும், 51 சாதி இந்துக்களும் கைது செய்யப்பட்டு மதுரை மத்திய சிறை மற்றும் திண்டுக்கல் கிளைச் சிறையில் ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர். இச்சம்பவம் குறித்து எவிடன்ஸ் அமைப்பின் உண்மையறியும் குழுவினர் கடந்த 25.11.2013 மற்றும் 30.11.2013 ஆகிய தேதிகளில் சம்பவ இடத்திற்கு நேரடியாகச் சென்று களஆய்வு மேற்கொண்டனர்.

கரியாம்பட்டி - நடுப்பட்டி கிராமத்தில் வசித்து வரும் தலித் இளைஞர்கள் நாகராஜன் (19), சக்திவேல் (23) ஆகியோர் சாதி இந்து பெண்ணை கிண்டல் செய்ததாக கூறி சுமார் 200க்கும் மேற்பட்ட சாதி இந்துக்கள் 24.11.2013 அன்று மாலை 3.30 மணியளவில் தலித் குடியிருப்பு பகுதிக்குள் அத்துமீறி உள்ளே நுழைந்துள்ளனர். கத்தி, அரிவாள், உருட்டுக்கட்டை, பெட்ரோல் உள்ளிட்ட பயங்கரமான ஆயுதங்களை எடுத்துக் கொண்டு தலித் மக்களை மிரட்டியுள்ளனர். சாதிய ரீதியாக இழிவாகப்பேசி கொண்டே அங்கிருந்தவர்களை தாக்கியும் உள்ளனர். இக்கொடிய தாக்குதலைக் கண்டு அச்சமடைந்த தலித்துகள் அப்பகுதியிலிருந்து தப்பித்து வெளியே ஓடிச்சென்றுள்ளனர். தலித் வீடுகளுக்கு தீ வைத்து எரித்துள்ளனர்.

இக்கிராமத்தில் வசித்து வரும் கிருஷ்ணம்மாள் (60), பார்வதி (39), அங்காளஸ்வரி உள்ளிட்ட தலித் பெண்கள் எமது குழுவினரிடம், கடந்த 24.11.2013 அன்று மதியம் சுமார் 2.30 மணியளவில் எங்கள் பகுதியைச் சேர்ந்த தலித் இளைஞர்கள் கிரிக்கெட் விளையாடிக் கொண்டிருந்தனர். அப்போது கிரிக்கெட் பந்தினை எடுக்கக்கோரி ஒரு இளைஞன் விசில் மூலம் சைகை செய்தான். அதற்காக சாதி இந்து பெண்ணை கிண்டல் செய்ததாக எங்கள் இளைஞர்கள் மீது பொய்ப் புகார் கொடுத்தனர். இதைவிட கொடுமை என்னவென்றால் கொஞ்சம்கூட உண்மையை விசாரிக்காமல் பாலகாதேவி என்கிற பெண் போலீசார் எங்கள் பகுதி இளைஞர்களை பூட்ஸ் காலால் எட்டி உதைத்து கன்னத்தில் அறைந்தார், கடுமையாக தாக்கினார் என்று கூறினார்கள்.

தலித் தரப்பில் 3 பெண்கள், 3 சிறுவர்கள் உட்பட 22 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 3 தலித் பெண்களான அங்காளஸ்வரி, பெருமாளக்கா, திருமுல் ஆகிய மூவரும் விதவைகள். அழகுபாண்டி (13), மாரிபாண்டி (13), கண்ணன் (16) ஆகிய சிறுவர்களையும் போலீசார் கைது செய்துள்ளனர்.

இரண்டு சிறுவர்கள் மீது சாதி இந்துக்கள் பெண்களை கிண்டல் செய்ததாக புகார் கொடுத்தால் அவற்றை வழக்காக பதிவு செய்து போலீசார் விசாரணை நடத்தியிருக்க வேண்டும். ஆனால் அதைவிட்டுவிட்டு பொய்ப் புகார் சுமத்தப்பட்ட சிறுவர்களை பலர் முன்னிலையில் போலீசார் அடித்து காயப்படுத்தியதனால் சாதி இந்துக்களுக்கு மறைமுகமாக போலீசின் ஆதரவு இருக்கிறது என்பது தெரிய வந்திருக்கிறது. இதனை சாதி இந்துக்கள் பயன்படுத்திக் கொண்டனர்.

இப்பகுதியில் 100க்கும் மேற்பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். கடந்த 27.11.2013 அன்று எரிந்து போன 6 வீடுகளுக்கு தலா ரூ.5,000 நிவாரணத்தை அரசு வழங்கியுள்ளது. சேதமடைந்த 31 வீடுகளுக்கு தலா ரூ.500 கொடுத்துள்ளனர். இதுதான் அரசின் அதிகபட்ச நிவாரணமாக உள்ளது. இப்பகுதியில் தலித் குடியிருப்பு பகுதிக்குள் யார் உள்ளே வருகிறார்கள்? செல்கிறார்கள்? என்பதை கண்காணிக்க கண்காணிப்பு கேமராவை அரசு பொருத்தியுள்ளது. இப்பகுதியில் உள்ள தலித்துகள் மீது தொடர்ச்சியாக தாக்குதல்கள் நடந்து வருகின்றன.

தேசிய தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஆணையத்தின் இயக்குனர் வெங்கடேசன், கடந்த 15.10.2013 அன்று கரியாம்பட்டி - நடுப்பட்டி கிராமத்திற்கு நேரடியாக வருகை தந்து விசாரணை நடத்தினார். வெங்கடேசன் நடுப்பட்டி கிராமத்தில் உள்ள தலித் மக்களுக்கு வேலை வாய்ப்புகளும், அடிப்படை வசதிகளும் அரசு வழங்க வேண்டும் என்கிற பரிந்துரையும் முன்வைத்தார். அந்த பரிந்துரை இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை. இதற்கு தேசிய தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் ஆணையம் அரசிற்கு எவ்வித அழுத்தமும் கொடுத்ததாக தெரியவில்லை.

கடந்த ஒரு வருடமாக கரியாம்பட்டி - நடுப்பட்டியில் நடந்து வரும் வன்கொடுமைகளில் சில...

கடந்த 26.02.2012 அன்று தலித்துகளான பெத்தன் (27), கணேசன் ஆகியோரை சாதி இந்துக்கள் செருப்பால் அடித்து காயப்படுத்தியுள்ளனர். இதுகுறித்து புகார் கொடுத்ததற்காக பெத்தன் மீது மறுபடியும் தாக்குதல் நடந்தது. இச்சம்பவம் குறித்து நிலக்கோட்டை காவல்நிலையத்தில் வன்கொடுமை தடுப்புச் சட்டம் 1989 பிரிவு 3(1)(10)ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றவாளி கைது செய்யப்படவில்லை.

கடந்த 19.04.2012 அன்று தலித் பெண் காளியம்மாள் மீது சாதி வெறியர்கள் கடுமையான தாக்குதலில் ஈடுபட்டனர். இது குறித்து நிலக்கோட்டை காவல்நிலையத்தில் வழக்கு பதிவு செய்யப்பட்டது. ஆனால் குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

கடந்த 21.07.2013 அன்று தலித் இளைஞர்கள் கண்ணன், பிரசாந்த், பாலு ஆகிய மூவரும் ஒண்டிவீரன் படம் போட்ட டிசர்ட் அணிந்து சென்றதற்காக 5 பேர் கொண்ட சாதி வன்கொடுமை கும்பல், டிசர்ட்டை கழட்ட சொல்லி கடுமையாக அடித்து சித்திரவதை செய்துள்ளனர். இதுகுறித்து நிலக்கோட்டை காவல்நிலையத்தில் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. குற்றவாளிகள் கைது செய்யப்படவில்லை.

இதனைத் தொடர்ந்து, புகார் கொடுத்தனால் ஆத்திரமடைந்த சாதி இந்துக்கள் கடந்த 22.07.2013 அன்று இரவு 9.00 மணியளவில் தலித் குடியிருப்புக்குள் உள்ளே புகுந்து 4 வீடுகளை அடித்து சேதப்படுத்தியுள்ளனர். தலித் பெண்களையும் ஆபாசமாக பேசி வன்முறையில் ஈடுபட்டனர். இதுகுறித்து 23.07.2013 அன்று நிலக்கோட்டை காவல்நிலையத்தில் 140/2013 பிரிவுகள் 147, 148, 336, 324, 307 இ.த.ச. மற்றும் தாழ்த்தப்பட்டோர் பழங்குடியினர் வன்கொடுமை தடுப்புச் சட்டம் பிரிவு 3(1)(10) ஆகியவற்றின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதில் சாதி இந்துவான சின்னதுரை, வீராச்சாமி உள்ளிட்ட 8 பேர் கைது செய்யப்பட்டு ரிமாண்ட் செய்யப்பட்டுள்ளனர்.

இந்நிலையில் பாதிக்கப்பட்ட தலித்துகள் மீது சாதி இந்துக்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் தலித்துகள் மீது நிலக்கோட்டை காவல்நிலையத்தில் குற்றஎண்.141/2013 பிரிவுகள் 147, 148, 294(b), 336, 323, 307 இ.த.ச. மற்றும் பொதுச் சொத்துக்கள் சேதமடைதல் கீழ் சுமார் 83 தலித்துகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

தங்கள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டதனால் அதிர்ச்சியடைந்த 500க்கும் மேற்பட்ட தலித்துகள் கடந்த 02.10.2013 முதல் 07.10.2013 வரை கரியாம்பட்டி - நடுப்பட்டி கிராமத்திலிருந்து வெளியேறி சங்கால்பட்டி கிராமத்திற்குள் குடிபுகுந்தனர். இதனால் திண்டுக்கல் மாவட்ட நிர்வாக அலுவலர்கள் பாதிக்கப்பட்ட தலித் மக்களிடம் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். தலித் மக்கள் அரசு அலுவலர்களிடம் இப்பகுதியில் தனி காவல்நிலையம் அமைக்க வேண்டும், தங்களுக்கென்று தனி பள்ளிக்கூடம் வேண்டும், குடியிருப்பு கட்டிக் கொடுக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்தனர். இவற்றை நடைமுறைப்படுத்துவதாக அரசு தரப்பில் உறுதியளித்தனர் என்று எவிடென்சு நடத்திய ஆய்வு கூறுகிறது.

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

அறிவுரைக் குழுமங்கள்தான் இதற்கு நீதி வழங்க வேண்டும்.

அறிவுரைக் குழுமங்கள் கடந்த காலங்களில் தங்களுக்கான அதிகாரங்களைப் பயன்படுத்த முன் வந்ததே கிடையாது அரசு பிறப்பித்த ஆணைகளுக்கு ஏற்பு வழங்கிக் கொண்டே இருந்தன. தமிழக வரலாற்றிலேயே இந்த அறிவுரைக் குழுமம் தான் பல தடுப்புக் காவல் ஆணைகளை நீக்கம் செய்து, நம்பிக்கை ஒளியைக் காட்டியிருக்கிறது. எனவே, தங்களிடமிருந்து நிதியை எதிர்பார்க்கிறோம்” என்று விடுதலை இராசேந்திரன் குறிப்பிட்டார்.

மருத்துவர் எழிலன் தனது வாதுரையில், “கைது செய்யப்பட்ட தோழர்கள் வாழும் பகுதியில் உள்ள மருத்துவமனையில் நான் மருத்துவராகப் பணியாற்றுகிறேன். இந்தத் தோழர்களை நான் நன்கு அறிவேன். அவர்கள் பெரியார் கொள்கை பரப்பும் பணியை மட்டுமல்ல, மக்களுக்காக குருதிக் கொடை வழங்குதல், மருத்துவ முகாம்களை நடத்துதல், மக்கள் பிரச்சினைகளுக்கு ஓடிச் சென்று உதவுதல் போன்ற பணிகளையும் செய்து வருகிறார்கள். இவர்கள் மீது இதற்கு முன் எவ்வித குற்ற வழக்கிலும் தண்டிக்கப் படாதவர்கள். சமுதாயத் தொண்டாற்றும் இந்த இளைஞர்கள் மீதான தேசிய பாதுகாப்புச் சட்டம் - சட்டத்துக்கும் இயற்கை நியதிக்கும் எதிரானது. அவர்களை விடுவிக்க வேண்டும் என்று கூறினார்.

---

## ‘புரட்சிப் பெரியார் முழக்கம்–பெரியார் மலர்’

## டிசம்பர் 24இல் வெளி வருகிறது!


மலர் தயாரிப்புப் பணிகள் நடந்து வருகின்றன.

தோழர்கள், விளம்பரங்கள் சேகரிப்புப் பணியில் துரிதம் காட்டுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

விளம்பரங்களை விரைந்து அனுப்பும்படி கேட்டுக் கொள்கிறோம்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 13th December 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப் **பெரியார் முழக்கம்**

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | டிசம்பர் 19, 2013 | புரட்சி 12 | முழக்கம் 49 | விலை: ரூ.3.00


# ‘திராவிடர் விடுதலைக் கழக’த்தின் தொடர்பயணம்

*‘இலக்கு நோக்கிய பயணத்தில் இணைய வரும் தோழர்களே, வாருங்கள்!’ என்ற அழைப்பை ஏற்று வந்த தோழர்களுடன் 2012 ஆகஸ்டு 12 ஆம் நாள் திராவிடர் விடுதலைக் கழகம் ஈரோட்டில் உதயமானது. 2001 ஆம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வந்த பெரியார் திராவிடர் கழகத்தில் தலைவராக இருந்த கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் விடுத்த அழைப்பை ஏற்று, விலகி வந்த பெரும்பாலான பெரியார் திராவிடர் கழக மத்தியக் குழு உறுப்பினர்களுடன் தொடங்கப் பட்ட இந்த அமைப்பு, திராவிடர் விடுதலைக் கழகம் என்ற தனிப் பெயரை சூட்டிக்கொண்டு, தனது பயணத்தைத் தொடர்ந்தது. இயக்கம் தொடங்கியதிலிருந்து – ஜாதி, தீண்டாமைக்கு எதிராக கழகத்தின் பணிகள் பெரியார் காட்டிய வழியில் தீவிரம் பெற்றன. புதிய சவால்களையும் கழகம் எதிர்கொண்டது. சமூக நீதியான இடஒதுக்கீட்டுக் கொள்கையைப் பயன்படுத்தி, தங்களை மீட்டெடுத்துக்கொண்ட, பிற்படுத்தப் பட்ட ஜாதிகளைச் சார்ந்த சில தலைவர்கள் ஜாதிய அமைப்புகளை ஒன்று சேர்த்துகொண்டு, தலித் மக்களுக்கு எதிராக போர்ப் பிரகடனம் செய்தனர்.*

*அந்த சக்திகளை நேரடியாக களத்தில் எதிர் கொண்ட கழகம், ஜாதி எதிர்ப்பு இயக்கங்களையும் மாநாடுகளையும் நடத்தியதோடு, பெரியார், அம்பேத்கர் எரித்த பார்ப்பனிய கொடுங்கோல் “சட்டமான” மனு சாஸ்திரத்தைத் தீயிட்டுக் கொளுத்தும் போராட்டத்தை தமிழகம் முழுதும் பெண்கள் தலைமையில் 18 மய்யங்களில் நடத்தியது. மனு சாஸ்திரப் போராட்டத்தை அறிவிக்க, ஈரோட்டில் திராவிடர் விடுதலைக் கழகம் நடத்திய இரண்டு நாள் மாநாடு, கழகத்தின் எழுச்சிமிகு வளர்ச்சியையும் கொள்கை உறுதியை யும் பறைசாற்றியது. பரப்புரை போராட்டம் – கைது என்று தொடர்ந்து களப்பணியாற்றிய திராவிடர் விடுதலைக் கழகம் கடந்து வந்த பயணங்களின் நிகழ்வுகள் பற்றிய ஒரு தொகுப்பு:*

ஆகஸ்டு 12 இல் புதிய பெயரோடு களமிறங்கிய திராவிடர் விடுதலைக் கழகம், ஆகஸ்டு 17 முதல், மாவட்டந்தோறும் தோழர்களை சந்திக்கும் பயணத்தைத் தொடங்கியது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பொருளாளர் இரத்தினசாமி உள்ளிட்ட கழகப் பொறுப்பாளர்கள், நெல்லை, திண்டுக்கல், திருச்சி, சென்னை, புதுச்சேரி, திருப்பூர், ஈரோடு, கோவை, மேட்டூர், சேலம், குமாரபாளையம், காவேரிப்பட்டிணம் ஆகிய ஊர்களில் தோழர்களை சந்தித்து, புதிய நிர்வாகிகளை தேர்வு செய்தனர்.

செப்.11 - சத்துணவுக் கூடங்களில் தலித் பெண்கள் உணவு தயாரிக்க எதிர்ப்புத் தெரிவித்த ஜாதிவெறி சக்திகளையும் அதற்கு துணைப் போன தமிழக அரசையும் கண்டித்து, சென்னை, சேலம், ஈரோடு, பட்டுக்கோட்டை, திருச்சி, கிருட்டிணகிரி, திருவாரூரில் கழகம் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது.

அதே நாளில், இடிந்தகரையில் கூடங்குளம் அணுமின் திட்டத்தை எதிர்த்துப் போராடிய மக்கள் மீது காவல்துறையும் துணை இராணுவமும் நடத்திய தாக்குதலைக் கண்டித்து, அணுஉலை எதிர்ப்பு கூட்டியக்கத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் சென்னையில் சாலை மறியல் நடந்தது. 300 தோழர்கள் கைதானார்கள்.

2012 செப்டம்பர் 21, 22, 23 தேதிகளில் கோவை மேட்டுப்பாளையத்தில் கோவை மண்டல கழகத் தோழர்களுக்கு 3 நாள் பயிற்சி முகாம் சிறப்புடன் நடந்தது. செப்டம்பர் 23 அன்று ஆண்டுதோறும் விநாயகன் சிலை ஊர்வலத்தை நடத்தும் மதவெறி சக்திகளுக்கு எதிராக சென்னையில் பெரியார் கைத் தடி ஊர்வலம் நடத்தி தோழர்கள் கைதானார்கள்.

செப்டம்பர் 21 ஆம் தேதி சென்னையில் பா.ஜ.க. அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டத்தை கழகத்தினர் நடத்தி, 80 தோழர்கள் கைதானார்கள். ம.பி. பா.ஜ.க. அரசு இனப் படுகொலை செய்த ராஜபக்சேவுக்கு சிவப்புக் கம்பள வரவேற்பு தந்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த போராட்டம் நடந்தது. இதே செப்டம்பரில் கோவையில் ஈஷா ஆன்மிக மய்யத்துக்கு தங்குதடையின்றி மின்சாரம் வழங்கப் படுவதைக் கண்டித்து (தமிழ்நாடு முழுதும் கடும் மின்வெட்டு தொடர்ந்த சூழலில்) முற்றுகைப் போராட்டம் நடத்தி தோழர்கள் கைதானார்கள். சூலூர் அருகே வினாயக பூஜை தொடர்பாக மதவாத சக்திகளுக்கும் தோழர்களுக்கும் இடையே உருவான பிரச்சினையில் தோழர்கள் கைது செய்யப்பட்டு, கோவை சிறையில் அடைக்கப்பட்டனர்.

அக்டோபரில் கழகத்தில் முன்னணி அமைப்புகளில் ஒன்றான சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகத்தின் சார்பில் கொளத்தூர் அருகே உக்கம்பருத்திக் காட்டில் 6 நாள் வீதி நாடகப் பயிற்சி நடந்தது. சேலம் மாவட்டம் கண்ணாமூச்சி கிராமத்தில் ஊர்ப் பொது மேடையில் பிள்ளையார் சிலையை அமைக்கும் முயற்சிகளை தோழர்கள் முறியடித்தனர்.

அரசு ஆணைகளுக்கு எதிராக ஆயுத பூஜை போட்ட அரசு அலுவலகங்கள், காவல் நிலையங் களுக்கு எதிராக களமிறங்கி செயல்பட்டனர். கழகத் தோழர்கள், சேலம் அரசு பொறியியல் கல்லூரியில் ஆயுத பூஜை போடுவதை நிறுத்தச் சென்ற கழகத் தோழர்கள் 10 பேர் கைது செய்யப்பட்டு சேலம் சிறையில் அடைக்கப்பட்டனர்.

பழனியில், பழனி ஆண்டவர் கோயில் கலை பண்பாட்டுக் கல்லூரி ஆசிரியர் நியமனங்களில் தாழ்த்தப்பட்டோருக்கான இடஒதுக்கீடு தொடர்ந்து புறக்கணிக்கப்படுவதைக் கண்டித்து, கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

பல்லடத்தில் ‘சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழக’ (சு.க.ப.க.) சார்பில் ஒரு நாள் குறும்பட பயிற்சி நடத்தப்பட்டது. சங்கராபுரம் அருகே உள்ள சேது சமுத்திர கிராமத்தில் தலித் மக்கள் சாமி ஊர்வலத்தை பொதுச் சாலைகள் வழியாகக் கொண்டு செல்வதற்கு ஆதிக்க ஜாதிகள் தடை விதித்ததைக் கண்டித்து கழகத் தோழர்கள் போராட்டம் நடத்தி 58 பேர் கைதானார்கள்.

நவம்பர் 18 ஆம் தேதி சேலத்தில் கழகத்தின் செயற்குழு கூடியது. தர்மபுரி மாவட்டத்தில் தலித் கிராமங்களில் புகுந்து, ஜாதி வெறியர்கள் கொடூர தாக்குதல் நடத்தி, வீடுகளை சூறையாடியதைக் கண்டித்தும், ஈழத் தமிழர் மீதான இனப் படு கொலைக்கு சர்வதேச விசாரணையை வலியுறுத்தி யும், சமூக நீதியால் பயனடைந்த பார்ப்பனரல்லாத இடைநிலைச் சாதிகளில் சிலர் வெளிப்படையாக ஜாதி வெறியைத் தூண்டிவிடுவதைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதோடு, ஈரோடு மாநாடு குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது.

லண்டனில் பிரித்தானியா தமிழ்க் கழகம், பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இணைந்து நவம்பர் 7, 8 தேதிகளில் நடத்திய உலகத் தமிழர் மாநாட்டிலும் தொடர்ந்து, நவம்பர் 27 ஆம் தேதி லண்டனில் நடந்த மாவீரர் நாள் நிகழ்விலும் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் பங்கேற்றார்.

தர்மபுரியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஜாதி வெறிக் கும்பல் நடத்திய தாக்குதலைக் கண்டித்து திண்டுக்கல், சென்னை, பெரம்பலூர், தர்மபுரி, மேட்டூர், கோவை, கிருட்டிணகிரியில் கழகச் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. ஈரோட்டில் நிகழவிருக்கும் மனுசாஸ்திர எரிப்பு மாநாட்டின் நோக்கங்களை விளக்கி, சென்னை மாவட்ட கழகத் தோழர்கள் 7 நாள் பரப்புரைப் பயணம் நடத்தினர். நவம்பர் 23, 24இல் ஈரோட்டில் மனுசாஸ்திர எரிப்புப் போராட்ட விளக்க மாநாடு மிகச் சிறப்பாக நடந்து முடிந்தது. பல்லாயிரக் கணக்கில் இளைஞர்கள் திரண்டனர். மேடைகளில் ஜாதி மறுப்பு திருமணங்கள் நடந்தன. தலைவர்கள், சமூகவியலாளர்கள் பங்கேற்ற கருத்தரங்குகள், விவாத

(3ஆம் பக்கம்)

## வினாக்கள்... விடைகள்...!

- ஓரின உறவு இயற்கையானது அல்ல; இயற்கைக்கு முரணான ஒன்றை பா.ஜ.க. ஆதரிக்காது. **– ராஜ்நாத்சிங்**

  ஆடையின்றிப் பிறந்ததுதான் – மனிதனின் இயற்கை. மனிதன் ஆடை அணிவதையும் பா.ஜ.க. ஏற்காதோ?

- திருப்பதி ‘லட்டு’ தரம் உயர்த்தப்படும். **– தேவஸ்தானம் அறிவிப்பு**

  அப்படியே, ‘மொட்டை’ போடுவதையும் தடை செய்து, பக்தியின் தரத்தையும் சற்று உயர்த்தக் கூடாதா?

- ‘ஆதார்’ அடையாள அட்டை அமைப்பின் தலைவர் நந்தன் நிலகேணி, காங்கிரசின் பிரதமர் வேட்பாளராக அறிவிக்கப்படலாம். **– செய்தி**

  சரிதான்! காங்கிரசுக்கே அவர் அடையாள அட்டையாகிவிட்டாரா?

- ஏற்கனவே தங்கப் புதையல் பற்றி கூறிய சாமியார் சோபன்சர்க்கார், இப்போது பதேப்பூர் கோட்டைக்குக் கீழே 2500 டன் தங்கம் இருப்பதை தோண்ட வேண்டும் என்று அலகாபாத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றது. **– செய்தி**

  அடுத்து நீதிபதி வீட்டுக்குள் 3000 டன் தங்கம் புதைக்கப்பட்டிருக்கிறது என்று வழக்கு தொடரப் போகிறார், பாருங்கள்!

- நாடாளுமன்றத்தில் ஊழலைத் தடுக்கும் ‘லோக்பால் மசோதா’வை காங்கிரஸ் கொண்டு வருகிறது. **– செய்தி**

  செய்து முடித்த எல்லா ஊழல்களுக்கும் ஒரே சட்டத்தில் முற்றுப்புள்ளி வைத்து சரித்திரம் படைத்த காங்கிரசுக்கே எங்கள் ஓட்டு!

- மன்மோகன் சிங்குக்கு பிரதமர் பதவி வழங்கி யிருக்கக்கூடாது என்று பல ஆண்டுகளாகவே கூறி வருகிறேன்; யாருமே கேட்கவில்லை. **– மணி சங்கர் அய்யர்**

  வருத்தப்படாதீர்கள். இன்னும் சில மாதங்களில் மக்கள் காதுகொடுத்து கேட்கத் தயாராக இருக்கிறார்கள்.

- பில்லி சூன்ய எதிர்ப்புச் சட்டத்தை இந்துக்களுக்கு விரோதமாக அரசு பயன்படுத்தினால் வீதியில் இறங்கிப் போராடுவோம். **– மராட்டிய சட்டசபையில் சிவசேனா எதிர்ப்பு**

  ஏன் வீதிக்கு வருகிறீர்கள்? பில்லி சூன்யத்தை ஏவி விட வேண்டியது தானே?

- பட்டேல் நினைவு நாளில் பாரதிய ஜனதா நாடு முழுதும் ‘ஒற்றுமை ஓட்டம்’ நடத்தியது. **– செய்தி**

  ஓட்டு வேட்டைக்கு உடற்பயிற்சி வேறு செய்ய வேண்டுமா? தாங்க முடியலடா, சாமி!

- ‘அய்யப்பன் சீசனால்’ டாஸ்மாக்கில் மது விற்பனை குறைந்துவிட்டது. **– செய்தி**

  கவலை வேண்டாம்! ‘அய்யப்பன் ரிட்டர்ன் சீசன்’ வரும்போது விற்பனை சரிகட்டப்பட்டு விடும்.

**தலையங்கம்**

## மீண்டும் '377'

டெல்லி உயர்நீதிமன்றத்தால் 2009 இல் நீக்கம் செய்யப்பட்ட இந்திய குற்றவியல் சட்டத்தின் 377 ஆவது பிரிவுக்கு இப்போது உச்சநீதிமன்றம் உயிர் கொடுத்திருப்பது நாடு முழுதும் விவாதங்களை உருவாக்கி இருக்கிறது. "இயற்கைக்கு விரோதமாக உடல்உறவு கொள்வது தவறு; மீறுவோருக்கு ஆயுள் தண்டனை" என்று கூறும் இந்தச் சட்டம் 1860 இல் மெக்காலே உருவாக்கிய குற்றவியல் சட்டத்தில் இடம் பெற்றதாகும். பிரிட்டிஷ்காரர்கள் அன்றைய இங்கிலாந்தில் இதே போன்ற சட்டம் இருந்ததால் இந்தியாவுக்கும் கொண்டு வந்தார்கள். இன்று இங்கிலாந்திலேயே அந்த சட்டம் நீக்கப்பட்டுவிட்டது.

2014 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்தில் ஆணும்-ஆணும் அல்லது பெண்ணும்-பெண்ணும் திருமணம் செய்து கொள்ளும் உரிமை வழங்கப்பட்டுள்ளது. திருமணத்தின் அடுத்தக்கட்டப் பரிமாணம் 'இது' என்று இங்கிலாந்து அறிவித்துள்ளது. 18 ஆப்பிரிக்க நாடுகளும், 20 ஆசிய நாடுகளும் இந்த 'ஓர் பால்' திருமண முறையை சட்டபூர்வமாக அங்கீகரித்துள்ளன. 78 நாடுகள் இதை குற்றமாகக் கருதுகின்றன.

பாலின உறவுகள் தனி மனித உரிமைகளின் பாற்பட்டது. அதில் சட்டங்கள் குறுக்கிடுவதை நாகரிக சமூகம் ஒரு போதும் ஏற்காது. 2009 ஆம் ஆண்டு டெல்லி உயர்நீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு 'ஓர் பால்' வாழ்க்கையைத் தொடங்கியவர்கள் மற்றும் திருநங்கைகளின் வாழ்க்கை இப்போது உச்சநீதிமன்றத் தீர்ப்புக்குப் பிறகு கேள்விக்குறியாகியுள்ளது.

ஒவ்வொரு வீட்டின் படுக்கை அறைக்குள்ளும் காவல்துறை நுழைந்து, அங்கே "இயற்கைக்கு" மாறான உடல் உறவுகள் நிகழ்கிறதா என்பதை கண்காணிக்கக்கூடிய ஒரு சட்டம், ஒரு நாட்டில் இருப்பது அந்த நாட்டுக்கே தலைகுனிவு! தீர்ப்பை எழுதிய நீதிபதிகள், மதவாதப் பழமைவாதிகளாகவே மாறிப் போயிருக் கிறார்கள் என்பதுதான் வேதனை! 'இத்தகைய ஓர்பால் உறவுக்காரர்களை உயிரோடு எரிக்க வேண்டும்' என்று 1300 இல் பிரிட்டனில் சட்டம் இயற்றப்பட்டதையும், 'சமூகத்துக்குப் பயன்படாதவர்கள்' என்ற மதவாதிகள் கருத்தையும் தீாப்பில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றன.

பாரதிய ஜனதா - இயற்கைக்கு மாறான உறவுகளை ஏற்க மாட்டோம் என்று கூறுகிறது. அப்படியானால் இந்துக் கடவுளர் களின் இயற்கைக்கு மாறான உறவுகளைத்தான் (அய்யப்பன் உட்பட) புராணங்களும், இதிகாசங்களும் கதை கதைகளாகக் கூறிக் கொண்டிருக்கின்றன. இந்தக் கற்பனைகளை விமர்சித்தாலே இந்துக்களின் மனம் புண்படுகிறது என்கிறார்கள். ஒரு பக்கம் தங்கள் கடவுள்களின் இயற்கைக்கு மாறான உறவுகளை புனிதமாக வணங்கிக் கொண்டு, சமூகத்தில் மட்டும் அதை 'பாவமாக'க் கருதுவது ஏன்? என்ற கேள்விக்கு பதில் சொல்ல வேண்டும்.

'திருமணம்' என்ற அமைப்பு முறை நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகிறது. ஆணாதிக்கத்தின்கீழ் அடைபட்டுக் கிடக்க விரும்பாத உரிமைகளை நேசிக்கும் பெண்களும், 'குழந்தைப் பேறு' என்ற அடிமைத்தளையிலிருந்து விடுவித்துக் கொள்ள விரும்பும் பெண்ணியவாதிகளும், 'பெண்-ஆண்' கட்டாயத் திருமணத்திலிருந்து விடுபட்டு, தங்களுக்கு விருப்பமான திருமண உறவுகளை தேர்வு செய்கிறார்கள். இதில் சட்டங்கள் ஏன் மூக்கை நுழைக்க வேண்டும்?

ஓரின உறவை எதிர்க்கத் தேவையில்லை என்று கத்தோலிக்கர்களின் மதத் தலைவர் போப் கூறியிருப்பதோடு, அய்.நா.வின் 94 உறுப்பு நாடுகள் இதை ஏற்றுக் கொண்டுள்ளன.

திருமணம் என்பது மாறுதலுக்கு உட்பட்டது என்று பெரியார் கூறுகிறார். அதையும் தாண்டி, இந்த உடலுறவு முறை குறித்தும் பெரியார் கேள்விகளை எழுப்பியுள்ளார்.

> **"கலவி முறை என்பதும், சொத்து முறை என்பதும் பெரும்பாலும் தேசாச்சாரம், மதாச்சாரம் அல்லது சாதியாச்சாரம், பழக்க வழக்கம் முதலியவற்றைப் பொறுத்து இருக்கிறதே தவிர, வேறு நியாயமான நிர்ப்பந்தமான உலகெங்கும் ஒரே வழி துறையான காரண காரிய முறை கிடையாது"**
>
> (குடிஅரசு 2.6.1945) என்கிறார்.

இதேபோல், 'ஒழுக்கம்' என்பதற்கான வரையறைகளும் மாற்றத் துக்குள்ளாகியே தீரும். மனித சமுதாயத்துக்கும், சமூக சமத்துவத்துக்கும் ஏற்புடையதாகவும், மற்றவர்களுக்கு தொல்லை தராததும், உதவு வதும்தான், சுயமரியாதைக்காரர்களுக்கான ஒழுக்கம் என்று பெரியார், 'ஒழுக்கத்துக்கான' உள்ளடக்கத்தை மறுவரையறை செய்கிறார்.

உச்சநீதிமன்றத்தின் இத்தகைய தீர்ப்புகள் மாற்றப்பட வேண்டும். 153 ஆண்டுகளாக 377 ஆவது சட்டப் பிரிவு அமுலிலுள்ள இந்த நாட்டில் இந்தச் சட்டத்தை மீறிய குற்றத்திற்காக இதுவரை ஒருவர் கூட ஆயுள் தண்டனைப் பெற்றதில்லை என்பதிலிருந்தே இந்தச் சட்டம் செயலளவில் தோற்றுப் போய் நிற்கிறது என்பது விளங்கும்.

தனி மனித உறவுகளை சமூகத்திற்கு பாதிப்பின்றி தீர்மானித்துக் கொள்ளும் உரிமைகளை அங்கீகரிப்பதுதான் ஒரு நாகரிக சமுதாயத்துக்கான அடையாளம்!

# தில்லை நடராசன் வழக்கு: தீட்சதர்களுக்கு ஆதரவாக ஜெயலலிதா ஆட்சி சதி

*28.11.2013 அன்று உச்சநீதிமன்றத்தில் நடந்த விவாதம் குறித்த சுருக்கமான குறிப்புகள்:*

சிதம்பரம் நடராசர் கோயிலை இந்து அறநிலையத் துறை 2009 ஆம் ஆண்டில் தன்னுடைய கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததற்கு எதிராக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து தோற்ற தீட்சிதர்கள் உச்சநீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்திருக்கின்றனர். அவர்களுக்கு ஆதரவாக, சுப்பிரமணிய சாமி இந்த வழக்கில் இணைத்துள்ளார். கோயிலை அறநிலையத் துறை மேற்கொண்டதற்கு ஆதரவாக ஆறுமுகசாமி (சிவனடியார்), வி.எம். சவுந்தரபாண்டியன் (சிதம்பரம்) ஆகியோர் வழியாக மனித உரிமை பாதுகாப்பு மையமும் சத்தியவேல் முருகனாரும் இவ்வழக்கில் தலையிட்டுள்ளனர். இவ்வழக்கு சௌகான், பாப்டே ஆகிய நீதிபதிகள் கொண்ட அமர்விற்கு நவம்பர் 28 அன்று விசாரணைக்கு வந்தது.

மனுதாரர்களான தீட்சிதர்கள் சார்பில் யாரும் வாதிடவில்லை. மாறாக, சுப்பிரமணிய சாமி வாதத்தை துவக்கி வைத்தார். சுப்பிரமணிய சாமியுடைய வாதங்களின் சுருக்கம்:

"பிராமணர்கள்" எனப்படுவோர் பிறப்பினால் தோன்றுபவர்களல்ல. குணம் தான் ஒருவர் "பிராமணரா" என்பதைத் தீர்மானிக்கிறது என்று கீதை கூறுகிறது. அதனால்தான் பிறப்பால் "பிராமணர்" அல்லாத விசுவாமித்திரர் உள்ளிட்டோர் "பிராமணர்"களாக அங்கீகரிக்கப்பட்டனர். தில்லை தீட்சிதர்கள் சிவன் வழி வந்த "பிராமணர்கள்". அவர்கள் கன்னட-துளு வம்சாவளியைச் சேர்ந்தவர்கள். இந்து அறநிலையத் துறை சட்டத்தின் பிரிவு 45 குறிப்பிட்ட "தனிப் பிரிவு"களைச் சேராதவர்களின் கோயில்களுக்கு (non denominational temples) மட்டுமே பொருந்தும் பிரிவு 107 (denominational) குறிப்பிட்ட தனிப் பிரிவினருக்கான கோயில்கள் அறநிலையத் துறை தலையிடுவதைத் தடை செய்கிறது.

அத்தகைய 'தனிப் பிரிவு' (denomination) குறித்து அரசியல் சட்டம் விளக்கவில்லை. அதற்கான விளக்கம் உச்சநீதிமன்ற தீர்ப்புகளில்தான் உள்ளது. தீட்சிதர்களைப் பொறுத்தவரை அவர்கள் 3000 பேர். அந்த 3000 பேரில் ஒருவர்தான் தில்லை நடராசன். இவர்கள் அனைவரும் "கைலாசத்"திலிருந்து வந்தவர்கள் என்பது நம்பிக்கை. இது தீட்சிதர்களின் நம்பிக்கை மட்டுமல்ல, பக்தர்களின் மத நம்பிக்கையும் அதுவே.

தமிழ்நாட்டைச் சேர்ந்த திராவிடக் கட்சிகள், குறிப்பாக நாத்திகவாதிகளான கருணாநிதி போன்றோரும் பிற திராவிட இயக்கத்தினரும் கோயிலை பீரங்கி வைத்து பிளக்க வேண்டும் என்று பிரச்சாரம் செய்தவர்கள். 1989, 2006, 2008 ஆகிய ஆண்டுகளில் இத்தகைய "பிராமண" எதிர்ப்பு நாத்திக பிரச்சாரத்தை கருணாநிதி செய்திருக்கிறார். இதன் காரணமாகத்தான் இந்த வழக்கில் தலையிடுவது என்ற முடிவு செய்து உயர்நீதிமன்றத்தில் மனு செய்தேன். அப்போதுதான் விடுதலைப் புலிகள் ஆதரவாளர்கள் என்னை அங்கே தாக்கினார்கள். ஆனால், தற்போதைய மாநில அரசு அப்படியல்ல. இதனை நட்புரீதியான அரசாகவே நான் பார்க்கிறேன்.

"தி.மு.க. அரசு தீட்சிதர்களுடன் அறநிலையத் துறையும் இணைந்த கூட்டு நிர்வாகம் நடத்துவதற்கு உத்தரவிட்டுள்ளது. ஆனால், நிர்வாக அதிகாரி நேரடியாக கோயிலை கையகப்படுத்தியுள்ளார். ஆகையினால், தீட்சிதர்களுக்கு எவ்வித அதிகாரமும் இல்லை. எனவே, இந்த அரசாணையே ரத்து செய்யப்பட வேண்டும்" என்று கூறிவிட்டு, "தமிழக அரசின் வழக்கறிஞர் பேசிய பின்னர், நான் மீண்டும் பேசுகிறேன்" என்று கூறி சுப்பிரமணிய சுவாமி அமர்ந்தார்.

தமிழக அரசின் சார்பில் மூத்த வழக்குரைஞர்களோ தலைமை வழக்குரைஞரோ இந்து அறநிலையத் துறையின் உயர் அதிகாரிகளோ சட்ட அதிகாரிகளோ யாரும் நீதிமன்றத்திற்கு வரவில்லை. தமிழக அரசின் சார்பில் யோகேஷ் கன்னா என்ற ஒரு இளம் (கீழ்நிலை) வழக்குரைஞர் மட்டுமே வந்திருந்தார். அவர் எதுவும் பேசவில்லை.

இந்நிலையில், ஆறுமுக சாமியின் (சிவனடியார்) வழக்குரைஞரான கோவிலன் பூங்குன்றன் தனது தரப்பை முன் வைக்கத் தொடங்கினார். "இந்தக் கோயில் தீட்சிதர்களுக்கு சொந்தமானது அல்ல, இது இந்துக்கள் அனைவருக்கும் சொந்தமான பொதுக் கோயில்" என்று 1890-லேயே நீதிபதிகள் முத்துசாமி அய்யர், ஷெஃப்பர்ட் ஆகிய சென்னை உயர்நீதிமன்ற நீதிபதிகள் அளித்துள்ள தீர்ப்பை அவர் சுட்டிக் காட்டினார். "இத்தகைய ஒரு பொதுக் கோயிலின் நிதி நிர்வாகத்தில் பல முறைகேடுகளும் நிதிக் கையாடல்களும் நடைபெற்ற காரணத்தினால்தான் இதில் அரசு தலையிட வேண்டி வந்தது என்று அதற்கான விவரங்களை அவர் கூற முற்படும்போதே இடைமறித்த நீதிபதிகள், இதற்கு முன்பு வந்த தீர்ப்பு பற்றி பதில் சொல்லுங்கள்" என்று கேட்டனர். "அதனைப் பின்னர்விளக்குகிறேன். தற்போது, இதை எடுப்பதற்கான காரணங்களை விளக்குகிறேன்" என்று தீட்சிதர்களின் நிதிக் கையாடல்கள், நகைக் களவுகள் குறித்து விவரிக்கத் தொடங்கினார்.

உடனே நீதிபதி பாப்டே, "நீங்கள் யாருடைய வழக்குரைஞர்" என்று கேட்டார். "நான் ஆறுமுகசாமி என்ற சிவனடியாரின் வழக்குரைஞர், தமிழில் தேவாரம் பாட தீட்சிதர்கள் மறுத்தபோது அந்த உரிமைக்குப் போராடி வெற்றி பெற்றவர் என்னுடைய கட்சிக்காரர்" என்று கூறி, தன்னுடைய வாதத்தைத் தொடர்ந்தார். மீண்டும், குறுக்கிட்ட நீதிபதி பாப்டே, "நிதிக் கையாடல் பற்றி பேசுகிறீர்களே, பூரி ஜெகன்னாதர் கோயிலுக்கு போயிருக்கிறீர்களா, அங்கே மடியிலிருந்து பணத்தைப் பிடுங்கிக் கொண்டுதான் சாமியை பார்க்க விடுவான்" என்று சொல்லி கிண்டலாக சிரித்தார். அடுத்து, நீதிபதி சௌகான் (இரண்டு நீதிபதிகளில் இவர்தான் சீனியர்), "மீண்டும் மீண்டும் நிதிக் கையாடல் பற்றி பேசுகிறீர்கள், உங்களுக்குத் தனிப்பட்ட சொத்துத் தகராறு ஏதும் இருக்கிறதா? அந்தக் கோயில் சொத்தை அபகரிக்க நினைக்கிறீர்களா?" என்று குதர்க்கமாகவும் ஆத்திரமூட்டும் வகையிலும் கேள்வி கேட்டு அவரை பேச விடாமல் தடுத்து விட்டார். இதற்குப் பிறகு தமிழக அ ரசின் வழக்குரைஞரான யோகேஷ் கன்னா பேசத் தொடங்கினார்., உயர்நீதிமன்ற தீர்ப்பிலிருந்து சில பகுதிகளைப் படித்துக் காட்டி நிர்வாக முறைகேடுதான் கோயிலை எடுப்பதற்குக் காரணம் என்றும் தீட்சிதர்கள் ஒரு தனியான பிரிவினரா என்பது பற்றி தனக்குத் தெரிவில்லை என்றும் அவர் கூறினார். உடனே, அரசு வழக்குரைஞரிடம் வழக்கை ஒழுங்காகப் படித்துவிட்டு வருமாறு நீதிபதிகள் கூறிவிட்டு உணவுக்காக ஒத்தி வைத்தனர். உணவு இடைவேளைக்குப் பின் வழக்கில் இணைத்துக் கொண்ட மூத்த வழக்குரைஞர் துருவ் மேத்தா கோயிலை அறநிலையத் துறை கையகப்படுத்தியதை ஆதரித்து வாதிடத் தொடங்கினார். அவர் முன் வைத்த வாதம்:

"தாங்கள் 'தனிப் பிரிவினர்' என்பதை தீட்சிதர்கள்தான் நிலைநாட்ட வேண்டும். அவ்வாறு அதுவரை அவர்கள் எங்கேயும் நிறுவியதில்லை. கோயிலை தாங்கள் கட்டவில்லை என்றும், மன்னர்கள்தான் கட்டினார்கள் என்றும் தமது மனுவிலேயே தீட்சிதர்கள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இந்தக் கோயில் தீட்சிதர்களுக்கு சொந்தமான கோயில் அல்ல. இவர்கள் தனிப் பிரிவாகக் கருத முடியாது. எனவே, கோயிலை

(4 ஆம் பக்கம்)

# கழகத்தின் தொய்வில்லாப் பணிகள்

## போராட்டங்கள்; பரப்புரைகள்; மாநாடுகள்

முதல் பக்கத் தொடர்ச்சி

அரங்குகள், கலை நிகழ்ச்சிகள் என்று மாநாடு கருத்துச் செறிவுடனும் உணர்ச்சிப்பூர்வமாக நடந்து முடிந்தது.

### 2013 ஆம் ஆண்டில்...

2013 ஜனவரி மாதத்தில் மருத்துவர் ராமதாசு, தமது வன்னியர் சங்கத்துடன் சில பிற்படுத்தப்பட்ட ஜாதி அமைப்புகளையும், 'பிராமண' சங்கத்தையும் இணைத்துக்கொண்டு அனைத்து சமுதாயக் கூட்டமைப்பு என்ற பெயரில் மாவட்டந்தோறும் ஆலோசனைக் கூட்டங்களை நடத்தினார். வன் கொடுமை தடுப்புச் சட்டத்தின் கடுமையான பிரிவுகள் நீக்கப்பட வேண்டும் என்றும், ஜாதி மறுப்புக் காதல் திருமணங்கள், நாடகத் திரு மணங்கள் என்றும்; பெற்றோர்களின் சம்மதத்துடன் நடக்கும் ஜாதி மறுப்புத் திருமணங்களே செல்லும் என்று சட்டமியற்ற வேண்டும் என்றும் அக்கூட்டங்களில் தீர்மானங்கள் போடப்பட்டன. தமிழ்நாட்டை மீண்டும் பின்னுக்கு இழுத்துச் செல்லும் இந்த 'மனுசாஸ்திரக்' கோரிக்கைகளுக்கு எதிராக திராவிடர் விடுதலைக் கழகம் எதிர் நடவடிக்கைகளிலும் பரப்புரைகளிலும் இறங்கியது. இந்த ஜாதியமைப்புக் கூட்டங்கள் நடைபெற்ற இடத்துக்கு எதிரே கண்டன ஆர்ப்பாட்டங்களை நடத்தி, கழகத் தோழர்களும் ஒத்த கருத்துள்ள தோழமை அமைப்பினரும் கைதானார்கள். கோவை, கரூர், ஈரோடு, நாமக்கல் உள்ளிட்ட பல ஊர்களில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. சென்னையில் தியாகராயர் நகரில் இதேபோல் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடந்தபோது, ஜாதியமைப்பைச் சார்ந்தவர்கள் கழகத் தோழர்களைத் தாக்க வந்தனர். தோழர்களும் திருப்பித் தாக்க தயாரான நிலையில் காவல்துறை தலையிட்டு தடுத்தது. கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள்.

பிப்ரவரி மாதம் முழுதும் மாவட்டந்தோறும் ஜாதி எதிர்ப்பு மாநாடுகளை கழகம் நடத்தியது. பிப்ரவரி 4 ஆம் தேதி சென்னையிலும், பிப்.16 ஆம் தேதி சேலத்திலும், பிப். 18 ஆம் தேதி திண்டுக் கல்லிலும், பிப். 23 ஆம் தேதி திருவாரூரிலும், மார்ச் 9 ஆம் தேதி நெல்லையிலும், மார்ச் 18 ஆம் தேதி கோவையிலும், மார்ச் 23 ஆம் தேதி திருச்சியிலும் மாநாடுகள் எழுச்சியுடன் நடைபெற்றன. சென்னை மாநாட்டில் பேரணிக்கு காவல்துறை திடீரென மாநாட்டுக்கு முதல்நாள் அனுமதி மறுத்தது. சேலம் மாநாட்டுக்கு காவல்துறை விதித்த தடையை எதிர்த்து உயர்நீதிமன்றத்தின் வழியாக அனுமதி பெற்று, மாநாடு சிறப்புடன் நடந்தது.

மாநாடுகளைத் தொடர்ந்து, "எங்கள் தலை முறைக்கு ஜாதி வேண்டாம்" என்ற முழக்கத்தை முன்வைத்து, சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மார்ச் 15 தொடங்கி மார்ச் 24 வரை பரப்புரை இயக்கம் நடத்தினர். அம்பத்தூரில் தொடங்கிய பரப்புரை இயக்கம், காஞ்சிபுரத்தில் நிறைவடைந்தது. ஜாதிவெறி அமைப்புகள் தலைதூக்குவதை எதிர்த்து, மக்களிடம் தோழர்கள் கருத்துகளை முன்வைத்து, பல்லாயிரக் கணக்கில் துண்டறிக்கைகளையும் வழங்கினர். மனு சாஸ்திர எரிப்புப் போராட்டம் ஏன் என்று மக்களிடம் விளக்கப்பட்டன. ஜாதி தீண்டாமைக்கு எதிராக கழகம் தொடங்கிய இயக்கம் 'விஜய்' தொலைக்காட்சியில், 'நீயா? நானா?' நிகழ்விலும் எதிரொலித்தது. கிராமங்களில் நடக்கும் தீண்டாமைக் கொடுமைகள் பற்றி உரத்துப் பேசிய நிகழ்ச்சியாக அது அமைந்திருந்தது. இதே கருத்தை முன்வைத்து நடிகர் பிரகாஷ்ராஜ் 'கவுரவம்' என்ற திரைப்படத்தை தயாரித்தார். அப்படத்தின் பாடல் ஒலி நாடா, இந்த தொலைக்காட்சி நிகழ்ச்சியிலேயே வெளியிடப் பட்டது.

### மனு சாஸ்திரம் எரிப்பு

திட்டமிட்டபடி புரட்சியாளர் அம்பேத்கர் பிறந்த நாளில், தமிழ்நாட்டில் 18 மய்யங்களில் மனு சாஸ்திரம் எரிக்கப்பட்டது. தூத்துக்குடி, கோபி, ஒட்டன் சத்திரம், குமாரபாளையம், புதுச்சேரி, திருப்பூர், மேட்டூர், கோவை, சென்னை, கல்லக்குறிச்சி, மயிலாடுதுறை, திருச்சி, கரூர், பொள்ளாச்சி, ஈரோடு, ஒசூர், காஞ்சிபுரம், சேலம் ஆகிய ஊர்களில் மனு சாஸ்திரத்தை எரித்து, ஆயிரத்துக்கும் மேற்பட்ட தோழர்கள் கைதானார்கள். போராட்டங்களுக்கு பெண்களே தலைமை தாங்கினார்கள்.

கழகத்தின் ஜாதி-தீண்டாமை ஒழிப்புப் பணியைப் பாராட்டி விடுதலை சிறுத்தைகள் கட்சி, ஏப்.14 ஆம் தேதி நடத்திய அம்பேத்கர் பிறந்த நாள் விழாவில் கழகத் தலைவர் கொளத்தூர் மணிக்கு 'பெரியார் ஒளி விருது' வழங்கியது.

ஏப். 20 ஆம் தேதி, கூடங்குளம் அணுஉலை எதிர்ப்புக் கூட்டு இயக்கத்தின் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் கன்யாகுமரியிலிருந்து கூடங்குளம் நோக்கி முற்றுகைப் பயணம் தொடங்கிய போது கொளத்தூர் மணி உள்ளிட்ட 200 தோழர்கள் கைதானார்கள்.

ஏப். 30 ஆம் தேதி சென்னை மாவட்டத்தில் சென்னை இராயப்பேட்டை, திருவல்லிக்கேணி பகுதியில் கழகத்தை கோட்டையாக்கி வீரமரண மடைந்த தோழர் பத்ரி நாராயணன் நினைவு நாளில் தோழர்கள் குருதிக் கொடை முகாமை நடத்தினார்கள். அன்று மாலையே மரணதண்டனைக்கு எதிராக 7 நாள் பரப்புரை இயக்கத்தை சென்னை மாவட்டக் கழகத் தோழர்கள் தொடங்கினர். சென்னை தியாகராயர் நகரில் வைகோ தொடங்கி வைத்த பயணம் மாங்காட்டில் நிறைவடைந்தது.

மே 15 ஆம் தேதி கிணத்துக்கடவு பகுதியில் தொடரும் தீண்டாமைக் கொடுமைகளுக்கு எதிராக கோவை மாவட்டக் கழகம் ஆர்ப்பாட்டம் நடத்தியது.

மே 26 ஆம் தேதி திருப்பூரில் மாநில செயற்குழு கூடியது. ஜாதியைக் காக்கும் புதிய நிறுவனமாக அரசியல் கட்சிகள் உருவாகி வருவதை சுட்டிக் காட்டியும், மத்திய அரசின் பிற்படுத்தப்பட்டோர் இட ஒதுக்கீட்டில் கிரிமிலேயர் புகுத்துவதைக் கண்டித்தும்; உலக மய சுரண்டல், இஸ்லாமியர் மீது பொய் வழக்குகள், ஆசிரியர் தேர்வில் அநீதிகளைக் கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஆதிக்க ஜாதி அமைப்புகள் நடத்தும் வன்முறைகளை ஒடுக்குவதில் தமிழக அரசின் முயற்சிகளை வரவேற்கும் அதே நேரத்தில் அடக்குமுறைச் சட்டங்களை (தேசிய பாதுகாப்பு, குண்டர் சட்டம்) பயன்படுத்துவது கூடாது என்றும் செயற்குழு சுட்டிக்காட்டியது.

மே 17, 18, 19 தேதிகளில் கழகத்தின் முன்னணி அமைப்பான தமிழ்நாடு அறிவியல் மன்றம் குழந்தைகளுக்கான மூன்று நாள் 'பழகு மகிழ்வு முகாமை' திண்டுக்கல்லில் நடத்தியது.

இதே மே மாதத்தில் சென்னிமலை அருகே வடுகபாளையம் என்ற கிராமத்தில் சுடுகாட்டுக்கு இடம் கோரி போராடி கைதான தலித் மக்களுக்கு ஆதரவாக ஈரோடு மாவட்டக் கழகம் களமிறங்கியது. உரிமைக்குப் போராடிய மக்களுக்கு வழக்காட வழக்கறிஞர்களை ஏற்பாடு செய்து, அவர்கள் பிணையில் வெளியே வருவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு உயர்நீதிமன்றம் வரை வழக்கைக் கொண்டு செல்ல கழகம் உதவியது.

மே 30 ஆம் தேதி சென்னையில் சத்ய சாய்பாபா கோயில் விரிவாக்கத்துக்காக அப்பகுதி ஏழை மக்களுக்கு கல்வி தந்த பள்ளியை இடித்ததைக் கண்டித்து கோயில் நிர்வாகத்தை எதிர்த்து கோயிலை முற்றுகையிடச் சென்ற கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜூன் 8, 9 தேதிகளில் ஏற்காட்டில் கழகத்தில் புதிதாய் இணைந்த தோழர்களுக்கான இரண்டு நாள் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன.

ஜூன் 17 ஆம் தேதி கோவை கிணத்துக்கடவு பகுதியில் நிலவும் தீண்டாமைக் கொடுமைகளை பட்டியலிட்டு சுட்டிக் காட்டியப் பிறகும், நடவடிக்கை எடுக்க முன் வராத கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தை முற்றுகையிடும் போராட்டம், கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடந்தது, 178 தோழர்கள் கைதானார்கள்.

ஜூன் 30 ஆம் தேதி கோபி அலுக்குளியில் ஒரு நாள் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டது.

ஜூலை : தர்மபுரியில் இளவரசன் என்ற தலித் இளைஞரும் திவ்யா என்ற வன்னிய ஜாதிப் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பி திருமணம் செய்து கொண்டு வாழ்ந்ததை சகிக்க முடியாத ஜாதி வெறி சக்திகள், இளவரசன் வாழ்ந்த கிராமத்தை சூறையாடியதோடு, அந்த இளம் காதலர்களையும் அச்சுறுத்தி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து பிரித்தனர். மனம் உடைந்த இளைவரசன், இரயில் முன் பாய்ந்து தற்கொலை செய்து கொண்டார். தமிழகம் முழுதும் அதிர்ச்சி அலைகளை எழுப்பியது இந்நிகழ்வு. இளவரசன் மரணத்துக்குக் காரணமான ஜாதி வெறியர்களைக் கண்டித்து, ஜூலை 7 ஆம் தேதி பல்லடத்தில் தடை மீறி ஆர்ப்பாட்டம் நடத்திய 68 தோழர்கள் கொளத்தூர் மணி தலைமையில் கைது செய்யப்பட்டனர்.

ஜூலை 20, 21 தேதிகளில் சென்னை மாவட்டக் கழக சார்பில் புதிய தோழர்களுக்கு மாமல்லபுரத்தில் பயிற்சி முகாம் நடந்தது.

### 20 நாள் பரப்புரை

ஜூலை 24 ஆம் தேதி மயிலாடுதுறையில் தொடங்கிய 'சுயமரியாதை-சமதர்ம பரப்புரைப் பயணம்' கழகத் தலைவர் தலைமையில் 20 நாள் தொடர்ந்து 58 ஊர்களில் பரப்புரை செய்து ஆகஸ்டு 12 இல் புதுவையில் நிறைவடைந்தது.

ஜூலை 27 ஆம் தேதி சென்னை உயர்நீதி மன்றத்தில் கோவை மாநகர மாவட்டக் கழகத் தலைவர் பன்னீர்செல்வம் சார்பில் ஒரு வழக்கு தொடரப் பட்டது. தீண்டாமைக் குற்றத்தைத் தடுக்கத் தவறிய மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட காவல் துறை அதிகாரியை பதவி நீக்கம் செய்யக் கோரி, உச்ச நீதிமன்றம் தந்த தீர்ப்பின் அடிப்படையில் அந்த வழக்கு தொடரப்பட்டது. தமிழ்நாட்டில் இந்த அடிப்படையில் நீதிமன்றம் வந்த முதல் வழக்கு இதுதான்.

செப்டம்பர் முதல் நாள் சென்னையில் நாத்திகர் விழா, நாத்திகர் பேரணி, மாநில மாநாடு போல் நடந்தது. பேரணிக்கு காவல்துறை தடைபோட்டது. உயர்நீதிமன்றத்தில் கழகம் தொடர்ந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதிபதி, வழக்கை நாத்திகர் விழா நடக்கும் தேதிக்குப் பிறகு தள்ளிப் போட்டார். அன்றைய தினமே உயர்நீதிமன்ற மேல் அமர்வுக்கு முறையீடு செய்தது. அடுத்த நாள் விடுமுறை நாளாக இருந்தும், நீதிபதியின் இல்லத்திலேயே வழக்கு விசாரணைக்கு ஏற்கப்பட்டு பேரணிக்கு அனுமதி பெறப்பட்டது.

இது, கழக வழக்கறிஞர்கள் மேற்கொண்ட இடைவிடாத முயற்சிக்குக் கிடைத்த வெற்றி. வெகு அபூர்வமான வழக்குகளில் மட்டும், விடுமுறை கால விசாரணைகள் நடப்பது வழக்கம். அந்தப் பெருமை, நாத்திகர் விழா பேரணிக்குக் கிடைத்தது வரலாற்றுச் சிறப்பாகும்.

செப். 13 ஆம் தேதி, நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கோயிலில் முடங்கிக் கிடக்கும் தங்கத்தை ரிசர்வ் வங்கிக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவரவேண்டும் என்று வலியுறுத்தி, மாவட்டந்தோறும் கழக சார்பில் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்பட்டன.

செப்.15 ஆம் தேதி சென்னையில் இந்து முன்னணி நடத்தும் விநாயகன் சிலை ஊர்வலத்தை நிறுத்தக் கோரி, பெரியார் கைத்தடி ஊர்வலம் நடத்தி, கொளத்தூர் மணி தலைமையில் தோழர்கள் கைதானார்கள்.

செப்.26இல் திருச்சி வந்த குஜராத் முதல்வர் மோடிக்கு கறுப்புக் கொடி காட்டி கழகத் தோழர்கள் கைதானார்கள்.

அக்டோபர்: அக்.7 ஆம் தேதி அரசு அலுவலகங்கள், காவல் நிலையங்களில் ஆயுத பூஜைகளை நிறுத்தக் கோரி கழகம் மாவட்டந்தோறும் ஆர்ப்பாட்டங்களை நடத்தியது. மயிலாடுதுறையில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகத்தில் சட்டவிரோதமாக

(4 ஆம் பக்கம்)

DATE OF PUBLICATION 18.12.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

# மகாராஷ்டிராவில் பில்லி சூன்ய மூடநம்பிக்கைகள் குற்றமாகிறது!

மூடநம்பிக்கைகளுக்கு எதிரான மசோதா, மராட்டிய சட்டமன்றத்தில் டிசம்பர் 13 ஆம் தேதி நிறைவேறியது. நரபலி தருவது, பில்லி சூன்யம் மந்திரிப்பது, நோய் தீர்க்க மூடநம்பிக்கைகளைப் பயன்படுத்துவது உள்ளிட்ட மூடநம்பிக்கைகள் தண்டனைக்குரிய குற்றமாக்கப்பட்டுள்ளது. இந்த மசோதா, மகாராஷ்டிர மேலவையில் அடுத்த வாரம் அறிமுகப்படுத்தப்படும். பகுத்தறிவாளர் நரேந்திர தபோக்கர் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவரது நினைவாக அவசர சட்டமாக - இதை மகாராஷ்டிர அரசு பிறப்பித்திருந்தது. இப்போது சட்டசபையில் சட்டமாக்கப்பட்டுள்ளது. சட்டத்தில் குறிப்பிட்ட மூடநம்பிக்கைகளில் ஈடுபடுவோருக்கு 6 மாதம் முதல் 7 ஆண்டுகள் வரை தண்டனை வழங்க சட்டம் வகை செய்கிறது.

மசோதா குரல் ஓட்டின் மூலம் நிறைவேற்றப்பட்டது. பாரதிய ஜனதா, சிவசேனா போன்ற இந்து மத அமைப்புகள் இந்த மசோதாவில் ஏராளமான திருத்தங்களைக் கொண்டுவந்தன. அதில் பெரும்பாலான திருத்தங்களை மாநில அரசு ஏற்றுக் கொண்டது. இதன்படி, சோதிடம், வாஸ்து சாஸ்திரம் போன்ற மூடநம்பிக்கைகள், மசோதாவிலிருந்து விலக்கப்பட்டுவிட்டன. மசோதாவை அறிமுகம் செய்து பேசிய சமூக நலத் துறை அமைச்சர் சிவாஜிராவ் முகே, “இது வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம்; அப்பாவி மக்களை பில்லி சூன்ய நம்பிக்கைகளிலிருந்து விடுவித்து, காப்பாற்றும் தீர்மானம். இந்த மசோதா சமூக மாற்றத்துக்கான இயக்கத்துக்கு வழி வகுக்கும்” என்று குறிப்பிட்டார்.

சிவசேனா உறுப்பினர் சுபாஷ் தேசாய் இந்தச் சட்டத்தை எதிர்த்ததோடு, இந்தச் சட்டம் இந்துக்களின் மதச் சுதந்திரத்தில் குறுக்கிட்டால் வீதிக்கு வந்து பேராடுவோம்” என்று எச்சரித்து, மூடநம்பிக்கையும் இந்து மதமும் பிரிக்க முடியாதவை என்பதை உணர்த்தினார். சுட்டுக் கொல்லப்பட்ட மருத்துவர் நரேந்திர தபோல்கரின் மகள் முக்தா தபோல்கர், சட்டம் நிறைவேறியதற்கு மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். மராட்டிய முதலமைச்சரும் சமூக நலத்துறை அமைச்சரும் தந்த வாக்குறுதியை நிறைவேற்றியுள்ளனர். மேலவையிலும் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறேன்” என்று கூறியுள்ளார்.

## தீண்டாமை தாக்குதலைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்

நிலக்கோட்டை அருகே கரியாம்பட்டியில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீது தாக்குதல் தொடருகிறது; நடவடிக்கை எடுக்காமல் காவல்துறை வேடிக்கைப் பார்த்து வருகிறது; நடவடிக்கை எடுக்காத காவல்துறையைக் கண்டித்தும் வன்கொடுமைச் சட்டத்தின் கீழ் ஜாதி வெறியர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் கண்டன ஆர்ப்பாட்டம்.

| | | |
|---|---|---|
| நாள் | : | 24.12.2013 காலை 10 மணியளவில் |
| இடம் | : | திண்டுக்கல் நகராட்சி அலுவலகம் எதிரில் |
| தலைமை | : | விடுதலை இராசேந்திரன் |
| கண்டன உரை | : | இரத்தினசாமி, திருப்பூர் துரைசாமி, பால். பிரபாகரன் |

**தோழர்களே, திரண்டு வாரீர்!**

## தலைமைக் கழகத்தில் நடந்த சாதி மறுப்பு மணவிழா

திராவிடர் விடுதலைக் கழக தலைமை அலுவலகத்தில் 15.12.13 அன்று காலை அமெரிக்காவில் ஆராய்ச்சிப் பட்டம் முடித்த தோழர் இராசசேகர குமார், ஆராய்ச்சியாளர் தோழியர் சிறீதேவி ஆகியோரின் சுயமரியாதை ஜாதி மறுப்பு மணவிழா சிறப்புடன் நடந்தது. இராசசேகர குமார், திருநெல்வேலியையும், சிறீதேவி கோவையையும் சேர்ந்தவர்கள். தமிழகத்தில் பட்ட மேற்படிப்பை முடித்து பிரான்சிலும், அமெரிக்காவிலும் ஆராய்ச்சி மேற்படிப்பை மேற்கொண்டவர்கள். தமிழச்சி (பிரான்ஸ்) அவர்களின் பெரியாரின் பதிவுகளை இணையத்தில் படித்து பெரியாரை உள்வாங்கிக் கொண்ட இவர்கள், நான்கு ஆண்டுகளாக திருமணம் செய்து கொள்ளாமலேயே இரு குடும்பத்தினரின் சம்மதமும் பெற்று இணையர்களாக வாழ்ந்து வருகின்றனர். இப்போது, பெரியாரின் சுயமரியாதை திருமண வழியில் திருமணத்தைப் பதிவு செய்ய விரும்பினர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் திருமணத்தை தலைமை அலுவலகத்தில் நடத்தி வைத்தார். நிகழ்வில் மணமக்கள் இருவரும் பெரியாரியல் கொள்கைக்கு எப்படி வந்தோம் என்பதை அனுபவங்களின் வழியாக விளக்கி உரையாற்றினர். பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், பெரியார் கூறிய வாழ்க்கை முறைகளை விளக்கிப் பேசினார். கழகத் தோழர்கள் திரண்டு வந்திருந்தனர். அனைவருக்கும் மணமக்கள் சார்பாக உணவு வழங்கப்பட்டது.




கழக சார்பில் கழக வெளியீடுகள் பரிசாக வழங்கப்பட்டன.

இயக்க வளர்ச்சிக்கு ரூ.15000-த்தை பொதுச் செயலாளரிடம் மணமக்கள் வழங்கினர்.

# தீட்சதப் பார்ப்பனர்கள் ‘கைலாச’த்திலிருந்து குதித்தவர்களாம்!

(2 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிர்வாகம் செய்ய இவர்களை அனுமதிக்க முடியாது.

“தங்களை பரம்பரை அறங்காவலர்கள் என்றும் தீட்சிதர்கள் கூறிக் கொள்கிறார்கள். அவ்வாறு பரம்பரை அறங்காவலர்களாக இருப்பவர்கள் நிர்வாக முறைகேட்டில் ஈடுபட்டால் அதில் தலையிடுவதற்கு அரசுக்கு உரிமை உண்டு என்பது ஏற்கனவே சட்ட ரீதியாக நிறுவப்பட்டதாகும் என்று கூறினார்.

இப்போது நீதிபதி சௌகான் குறிக்கிட்டார். “சுப்பிரமணிய சாமியின் வாதங்களில் நாங்கள் முற்று முழுதாக திருப்தி அடைந்திருக்கிறோம். மற்றவை பற்றி பேச வேண்டாம். முந்தைய தீர்ப்புக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்” என்று துருவ மேத்தாவிடம் நீதிபதி சௌகான் கூறினார்.

துருவ் மேத்தா பேசத் தொடங்குவதற்கு முன்னரே வேகமாக குறுக்கிட்ட சுப்பிரமணியசாமி, “இந்தக் கேள்விக்கு துருவ் மேத்தா பதில் சொல்லக் கூடாது, அரசாங்கத்தின் வழக்குரைஞர்தான் இதற்கு பதில் சொல்ல வேண்டும்” என்றார்.

உடனே, நீதிபதி அரசு வழக்கறிஞரை பதில் சொல்லப் பணித்தார்.

எழுப்பிய கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாமல் நிர்வாக அதிகாரியின் அதிகாரங்கள், அவர் கோயிலில் என்ன செய்கிறார் என்பது பற்றி அவர் ஏதேதோ படித்துக் காட்டத் தொடங்கினார். அவர் படித்த வரிகளில், வங்கிக் கணக்கை கையாள்வது, கால்நடைகளை கையாள்வது போன்றவை தொடர்பானவை இடம் பெற்றன.

உடனே, நீதிபதி சௌகான், “நீங்கள் என்ன எல்லா வல்லமையும் கொண்ட அரசா, எல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக் கொண்டால், தீட்சிதர்கள் எப்படி வாழ்க்கை நடத்துவார்கள், நீங்கள் சம்பளம் கொடுக்கிறீர்களா?” என்று கேள்வி எழுப்பினார். “கோயில் நிர்வாகத்தையே தீட்சிதர்களிடமிருந்து இன்னமும் நாங்கள் எடுக்க முடியவில்லை. அப்புறம் எப்படி ஊதியம் தருவது?” என்று பதிலளித்தார் அரசின் வழக்குரைஞர்.

மறுபடியும், நீதிபதி குறுக்கிட்டார். “கோயிலுக்கு உள்ளே நிர்வாக அதிகாரியின் அலுவலகம் வைத்திருக்கிறீர்களாமே. கோயிலுக்குள் உங்களுக்கு என்ன வேலை. முதலில் கோயிலைவிட்டு வெளியில் வாருங்கள்” என்று கூறிவிட்டு, “நான் சீக்கிரமே ஓய்வு பெறப் போகிறேன். ஏதாவதுசெய்துவிட்டு ஓய்வு பெற விரும்புகிறேன்” என்று கூறினார் நீதிபதி சௌகான்.

இத்துடன், வாதங்கள் முடிவுற்றன. வழக்கின் அடுத்த விசாரணை முடிந்தபின் எதிர்தரப்பான தமிழக அரசின் வழக்குரைஞருடைய தோளில் கைபோட்டபடியே, சுப்பிரமணிய சாமி வெளியில் வந்தார். “உங்கள் தமிழக அரசு எனக்கு நட்பான அரசுதான். கருணாநிதி ஆட்சி என்பதால்தான் நான் இந்த வழக்கில் தலையிட்டேன். நீங்கள் கருணாநிதி போட்ட அரசாணையை வாபஸ் வாங்குவதுதான் நல்லது என்று ஆலோசனை கூறுங்கள்” என்று யோகேஷ்கன்னாவிடம் பேசியபடியே நடந்து சென்றார் சுப்பிரமணியசாமி.

**நன்றி : ‘வினவு’ இணையதளம்**

(3 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நடந்த ஆயுத பூஜையைத் தடுக்கச் சென்ற தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டு 15 நாள் சிறைவாசத்துக்குப் பிறகு, பிணையில் விடுதலையானார்கள். மேட்டுப்பாளை யத்தில் ஆயுத பூஜையின் மடமைகளை விளக்கி துண்டறிக்கை வழங்கிய தோழர்கள் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டு, 15 நாள் கழித்து பிணையில் விடுதலையானார்கள்.

அக்.20 இல் சுயமரியாதை கலை பண்பாட்டுக் கழகம், கழகக் குடும்பங்களை இணைத்து திராவிடர் வாழ்வியல் விழாவையும் திராவிடர் உணவுத் திருவிழாவையும் நடத்தியதோடு திராவிடர் பண்பாட்டு மலர் ஒன்றையும் வெளிக்கொண்டு வந்தது.


அக். 28 ஆம் தேதி, காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்பதை எதிர்த்து, சென்னையில் அஞ்சலகங்களில் தாக்குதல் நடத்தியதாகவும், சேலம் வருமான வரித் துறை அலுவலகத்தில் சாக்குத் துணியை கெரசனில் நனைத்து, தீ வைத்து வளாகத்துள் எறிந்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டு, 7 கழகத் தோழர்கள் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைதானார்கள். கழகத்தின் தலைவர் கொளத்தூர் மணியையும் குற்றச்சாட்டில் இணைத்து தேசிய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தமிழக அரசு கைது செய்தது. சென்னை சேலம் சிறைகளில் 8 தோழர்கள் சிறைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இதைத் தவிர, பரப்புரைக் கூட்டங்களும், பயிற்சி வகுப்புகளும் நடந்தன. தொய்வின்றி திராவிடர் விடுதலைக் கழகம் தொடங்கியது முதல் களத்தில் பரப்புரை - போராட்டம் - கொள்கைப் பயிற்சி என்று இயங்கிக் கொண்டிருக்கிறது.

**– நமது செய்தியாளர்**

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 19th December 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2044 | டிசம்பர் 26, 2013 | புரட்சி 12 | முழக்கம் 50 | விலை: ரூ.3.00


## வினாக்கள்... விடைகள்...!

+ நிர்வாகிகள் ஒருபுறமும், தலைவர்கள் ஒருபுறமும் வேட்பாளர்கள் மறுபுறமும் ஒருங்கிணைப்பின்றிச் செயல்பட்டதால் தான் காங்கிரஸ் தோற்றது. **– சோனியா**

*அப்படி, விளக்கமாக சொல்லுங்க. நாங்ககூட, ஏதோ, வாக்காளர்கள்தான் தோற்கடிச்சுட்டதா தப்பாகவே புரிஞ்சுகிட்டோம்!*

+ நாடாளுமன்ற தேர்தல் கூட்டணி பற்றி முடிவு செய்ய அ.தி.மு.க. பொதுக்குழு ஜெயலலிதாவுக்கு அதிகாரம். **– செய்தி**

*அதிகாரத்தை அம்மா முறையாகப் பயன்படுத்தி, வெற்றிக் கூட்டணியை அமைக்காவிட்டால், எந்த நேரத்திலும் பொதுக்குழு அதிகாரத்தைப் பறித்துவிடும், எச்சரிக்கை!*

+ அமெரிக்காவுக்கான இந்திய பெண் தூதர் கைது பிரச்சினையை – பத்திரிகைகள் பக்கம் பக்கமாக செய்தி போடுகிறதே! **– ஒரு வாசகரின் வியப்பு**

*அதெல்லாம் ஒன்றுமில்லை. அந்தப் பெண் தூதர் படத்தை வெளியிடத் தடைபோட்டுவிட்டால் செய்தியும் நின்று விடும்.*

+ தூதர் தேவயானி மீது அமெரிக்காவில் தொடரப்பட்ட வழக்கை அந்நாடு திரும்பப் பெற வேண்டும் என்பதுதான் இப்போதைய முக்கிய கோரிக்கை. **– அமைச்சர் கமல்நாத்**

*விடாதீங்க.... வழக்கை திரும்பப் பெறாவிட்டால், அவசரமாக இந்திய நாடாளுமன்றத்தைக் கூட்டி சட்டத் திருத்தம் கொண்டு வருவோம் என்று எச்சரியுங்க!*

+ இலங்கை கடற்படையின் மீனவர் கைதைக் கண்டித்து அண்ணா சாலையில் மீன் பிடிக்கும் போராட்டம் நடத்திய மீனவர்கள் கைது. **– செய்தி**

*அண்ணாசாலையில் மீன் பிடித்தாலும் கைதுதான்!*

+ மாநகராட்சி சட்டத்தின்படி விதிமுறைகளை மீறி வைக்கப்படும் பேனர்கள் உடனே அகற்றப்படுகின்றன. **– அதிகாரிகள் மாநாட்டில் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்**

*‘அம்மா’ என்ற மூன்று எழுத்துகளோடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட அம்மாவின் படமும் இல்லாவிட்டால், கண்டிப்பாக ‘பாரபட்சமின்றி’ நடவடிக்கை எடுக்கப்படும்.*

+ கோட்டையில் நடந்த அதிகாரிகள் மாநாட்டில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், காவல்துறை அதிகாரிகள் முதல்வரை ‘அம்மா’, ‘அம்மா’ என்று விளித்து புகழ் மாலைகளைக் குவித்தனர். **– ஜூனியர் விகடன் செய்தி**

*இது ஒரு தவறா? “இந்தியாவை வழி நடத்தும் மகத்தான சக்தி எங்கள் அம்மா” என்று ஒரு தீர்மானம்கூட போடாமல் கட்டுப்பாடாக நடந்து கொண்டார்களே; அதை எல்லாம் பாராட்ட மாட்டீங்களா?*


+ காங்கிரசோ, பா.ஜ.க.வோ மத்தியில் ஆட்சி அமைக்க முடியாது. **– இந்திய கம்யூனிஸ்ட் கட்சி மூத்த தலைவர் ஏ.பி. பரதன்**

*தோழர், இதிலேயாவது கம்யூனிஸ்ட் கட்சியின் பெயரை சேர்த்து சொல்லக் கூடாதா? கட்சியை மறந்தே போயிட்டிங்க போல.*

+ தேவயானி மீது புகார் கொடுத்த வேலைக்காரப் பெண்ணின் பெற்றோருக்கு அமெரிக்கா அவசர அவசரமாக விசா அளித்தது ஏன்? **– பா.ஜ.க. செய்தி தொடர்பாளர் ரவிசங்கர் பிரசாத்**

*நல்ல கேள்வி! அதோடு மோடிக்கு அமெரிக்காகாரன் விசா மறுப்பதையும் சேர்த்துக்குங்க. அப்பத்தான் அமெரிக்காகாரன் மானம் போகும்!*

## குரல் உள்ளவரை பேசுவேன்!



நான் (எனக்கு ஞாபகமிருக்கிற வரையில்) என்னுடைய 10 ஆவது வயதிலிருந்தே நாத்திகன். சாதி, சமயச் சடங்கு முதலியவற்றில் நம்பிக்கையில்லாதவன். ஒழுக்க சம்பந்தமான காரியங்களில்கூட மற்றவர்களுக்குத் துன்பமோ, தொல்லையோ தரப்படாது என்பதைத்தவிர, மற்றபடி வேறு காரியங்களில் ஒழுக்கத்துக்கு மதிப்புக் கொடுத்தவனும் அல்ல. பணம், காசு, பண்டம் முதலியவைகளில் எனக்குப் பேராசை இருக்கிறது என்றாலும், அவைகளைச் சம்பாதிப்பதில் சாமர்த்தியத்தை யாவது காட்டியிருப்பேனே யொழிய, நாணயக் குறைவையோ, நம்பிக்கைத் துரோகத்தையோ காட்டியிருக்க மாட்டேன். யாரையும் ஏமாற்றலாம் என்பதில் நான் சிறிதுகூட முற்பட்டிருக்க மாட்டேன்.

வியாபாரத் துறையில் பொய் பேசியிருந்தாலும், பொது வாழ்வுத் துறையில் பொய்யையோ, மனமறிந்து மாற்றுக் கருத்தையோ வெளியிட்டிருக்க மாட்டேன். இப்படிப்பட்ட நான், எதற்காக ஒரு சமுதாயத்தாரிடம் விரோதமோ, குரோதமோ கொள்ள வேண்டும்? நான் நமது நாட்டையும் சமுதாயத்தையும் ஆங்கில நாட்டுத் தன்மைக்கும், நாகரிகத்திற்கும் கொண்டுவர வேண்டும் என்கின்ற ஆசையுடையவன். இதற்கு முட்டுக்கட்டையாகப் பார்ப்பனச் சமுதாயம் இருக்கிறது என்று சரியாகவோ தப்பாகவோ கருதுகிறேன்.

அப்படி இல்லை என்பதைப் பார்ப்பனர்கள் காட்டிக் கொள்ள வேண்டாமா? உண்மையிலேயே எனக்கு மாத்திரம் பார்ப்பனர்களுடைய ஆதரவு இருந்திருக்குமானால், நம் நாட்டை எவ்வளவோ முன்னுக்குக் கொண்டுவர என்னால் முடிந்திருக்கும். (விடுதலை - 1.1.1962)

### நான் துறவி

நான் துறவி. துறவிக்கு வேந்தன் துரும்பு என்பார்கள். எனக்கு வேந்தன் மாத்திரம் துரும்பல்ல; கடவுளும் துரும்பு. வேத சாத்திரங்கள் துரும்பு. சாதி துரும்பு. அரசியலும் துரும்பு. துரும்பு மாத்திரமல்ல; அவைகளை, எல்லா யோக்கியக் குறைவையும் காய்ச்சிச் சுண்ட வைத்துப் பிழிந்தெடுத்த சத்து என்று சொல்லுவேன். (விடுதலை - 15.06.1967)


### குரல் உள்ளவரை பேசுவேன்!

நாதசுரக் குழாயாக இருந்தால் ஊதியாக வேண்டும்; தவுலாயிருந்தால் அடிபட்டுத் தானாக வேண்டும் என்பதுபோல் - எனக்குத் தொண்டை, குரல் உள்ளவரையில் பேசியாக வேண்டும்; பிரசங்கம் செய்தாக வேண்டும். (விடுதலை - 18.05.1948)

## அறிவுரைக்குழுமத்தின் முன் கழகத் தலைவர் –தோழர்கள் வாதுரை

தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டு, சேலம் சிறையில் அடைக்கப்பட்டுள்ள திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி மற்றும் தோழர்கள் கிருட்டிணன், அருள்குமார், அம்பிகாபதி ஆகியோர், கடந்த 17.12.2013 அன்று பிற்பகல் 3 மணியளவில் சென்னையில் அறிவுரை குழுமம் முன் நேர் நிறுத்தப்பட்டனர். சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் வளாகத்திலுள்ள அறிவுரைக் குழுமத்துக்கு தோழர்கள் வருவதை அறிந்த கழகத் தோழர்கள், ஆதரவாளர்கள், வழக்கறிஞர்கள் ஏராளமாகத் திரண்டு வந்திருந்தனர். தோழர்களை சந்திக்க காவல்துறை செய்த கெடுபிடி காரணமாக கடும் எதிர்ப்புகள் கிளம்பியதால் பதட்டம் நிலவியது.

தோழர் கொளத்தூர் மணி சார்பில் விடுதலை இராசேந்திரனும், ஏனைய தோழர்களுக்கு பொருளாளர் இரத்தினசாமி, பரப்புரைச் செயலாளர் பால். பிரபாகரன், அமைப்புச் செயலாளர் தாமரைக் கண்ணன், குழுமத்தின் முன் வாதிட்டனர். கழகத் தலைவர் கொளத்தூர் மணி சுமார் 45 நிமிடங்கள் இந்த வழக்குப் பொய்யாக புனையப்பட்டது என்பதை காவல் துறை சாட்சியங்கள், தேசியப் பாதுகாப்புச் சட்டத்தில் கைதுக்காக பிறப் பிக்கப்பட்ட ஆணைகளிலிருந்து விரிவாக எடுத்துக் காட்டி விளக்கினார். வாதுரை முடிந்தவுடன் அனைவரும் சேலம் கொண்டு செல்லப்பட்டனர்



**தலையங்கம்**

## குரூப் 1 – தேர்வு வயது வரம்பை உயர்த்துக!

*வேலை வாய்ப்புகளை வழங்குவதில் தமிழகம் பின் தங்கியுள்ளது என்று ‘டீம்லீஸ்’ எனும் நிறுவனத்தின் ஆய்வு தெரிவிக்கிறது. முன்னெப் போதும் இல்லாத அளவுக்கு, தகவல் தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தித் துறைகளில் வேலை வாய்ப்பு குறைந்து வருவதோடு நாடு முழுதும் சுகாதாரம் மற்றும் மருந்து உற்பத்தித் துறை ஏறுமுகமாக இருந்தாலும், தமிழகம் மட்டும் பின்னடைந்துள்ளது என்றும் அந்த ஆய்வு கூறுகிறது. தென்னக நகரங்களிலேயே வேலை வாய்ப்பில் மிகவும் பின்தங்கியிருப்பது சென்னைதான் என்றும் ஆய்வு கூறுகிறது. மிகவும் கவலையளிக்கக் கூடிய இளைஞர்களின் எதிர்காலத்தைப் பாதிக்கக் கூடிய பிரச்சினை குறித்து ஆட்சியாளர்கள் கவலைப் படுவதாகத் தெரியவில்லை. அடுத்து வரவிருக்கும் தேர்தல்கள்தான் அழுத்தமாக விவாதிக்கப்பட்டு வருகிறது.*

*தமிழ்நாட்டில் பன்னாட்டு நிறுவனங்களை இறக்குமதி செய்தபோது வேலை வாய்ப்பு அதிகரிக்கும் என்று உறுதிமொழியை மத்திய மாநில ஆட்சிகளின் தமிழக அமைச்சர்கள் கூறினார்கள். அப்படி வேலைவாய்ப்பு ஏதும் அதிகரித்து விடவில்லை. தமிழ்நாட்டில் தொழில் நிறுவனங்கள் புதிதாக வேலைக்கு ஊழியர்களை சேர்க்காமல், குறைந்த ஊதியத்தில் பயிற்சி யாளர்களாக ஓராண்டுக்கு மட்டும் வேலைக்கு எடுத்து, உழைப்பை உறிஞ்சிக் கொண்டு, வீட்டுக்கு அனுப்பிவிடுகிறார்கள். 21000 கோடி ரூபாய்க்கு வரி ஏய்ப்பு செய்த, நோக்கியா நிறுவனம், 7000 ஊழியர்களை நட்டாற்றில் தவிக்கவிட்டு, நிறுவனத்தை வேறு ஒரு நிறுவனத்துக்கு மாற்றிக் கொடுத்துவிட்டது. நோக்கியாவைக் கொண்டு வந்த தயாநிதி மாறன்கள் – மவுனம் சாதிக்கிறார்கள்.*

*தனியார்நிறுவனங்களின் கதை இப்படி என்றால், தமிழ்நாடு அரசு நிலையோ, மேலும் மோசம். ஆசிரியர் தேர்வில் சமூக நீதியைக் குழி தோண்டிப் புதைத்த அ.இ.அ.தி.மு.க. ஆட்சி, பல வேலைகளுக்கு அறிவிப்புகளை வெளியிட்டாலும் “பெருந்தொகை” கைமாறினால்தான் வேலை கிடைக்கும் என்ற நிலை.*

*தமிழ்நாடு தேர்வாணையம், குரூப்-1 தேர்வுகளுக்கான வயது வரம்பை உயர்த்த வேண்டும் என்ற சமூகநீதி கோரிக்கையையும் தமிழக அரசு காதில் போட்டுக் கொள்ள மறுக்கிறது. இந்தத் தேர்வுக்கான வயது வரம்பு பொதுப் பிரிவினருக்கு 30 ஆகவும், மற்ற அனைத்து வகுப்பினருக்கு 35 ஆகவும் நிர்ணயிக்கப் பட்டுள்ளது. இந்தத் தேர்வுகள் ஒரு காலத் திட்டத்தின்படியும் நடப்பது இல்லை. அத்துடன் வேலை வாய்ப்புக்காகக் காத்திருப்போர் பட்டியலும் அதிகரித்து வரும் நிலையில் 35 வயதுக்குள் வேலை வாய்ப்பு வழங்காதது அரசின் தவறே தவிர, இளைஞர்களின் தவறு அல்ல. மற்ற மாநிலங்களில் இந்த வயது வரம்பு உயர்த்தப்பட்டிருக்கிறது.*

*அரியானா, ஜார்கண்ட், பீகார், திரிபுரா, குஜராத், கேரளத்தில் 45 ஆகவும், ஆந்திராவில் 41 ஆகவும், உ.பி.யில் 40 ஆகவும் உள்ள நிலையில் தமிழ்நாட்டில் மட்டும் 35 ஆகவே இருக்கிறது. வயது வரம்பு உயர்த்தப்பட்டால், 3.5 லட்சம் பட்டதாரிகள் பயனடைவார்கள் என்று கூறப்படுகிறது.*

*தமிழகத்தில் இளைஞர்களின் எதிர்காலம் நெருக்கடிக்கு உள்ளாவதால்தான் அவர்கள் தவறான திசையில் தடம்மாறிப் போய் விடுகிறார்கள். செயின் பறிப்பு, குழந்தை கடத்தல், சைபர் கிரைம் என்ற கணினி தொடர்பான குற்றங்களில் ஈடுபடுவோர் எல்லாம் படித்த இளைஞர்களாகவே இருப்பது ஆபத்தான அறிகுறி. கொலை, கொள்ளைகள் அதிகரிக்கும் மாநிலமாக தமிழ்நாடு மாறிக் கொண்டிருக்கிறது. அதிகாரிகள் தரும் அறிக்கைகள் புள்ளி விவரங்களில் மூழ்கிப் போய் கற்பனைப் பெருமைகளில் மூழ்கிக் கிடக்காமல் நாட்டின் நிகழ்வுகளை கவலையோடு பரிசீலிக்க வேண்டிய பொறுப்பு தமிழக முதல்வருக்கு உண்டு!*



# அறிவியல் வேறு; தொழில்நுட்பம் வேறு!

தமிழக அரசு பதிப்பித்த 10 ஆம் வகுப்புத் தமிழ்ப் பாடப் புத்தகத்தில், “தமிழ்மொழியில் அறிவியல் சிந்தனைகள்’ என்ற பாடம் இருக்கிறது. அதில் வரும் வரிகள் இவை: “தமிழ் இலக்கியத்தை நுண்ணிதின் ஆய்கின்றபோது எத்தனையோ அறிவியல் கருத்துக்கள் ஆழப் புதைந்து கிடப்பதனை அறியலாம். அறிவியல் வளர்ச்சி மிகுந்த காலம் ஒன்று இருந்திருக்கக் கூடும் என்பதனை, அதனை ஆராய்வோரே அறிவர்.”

பாடத்தில் தமிழருக்கு விண்ணியல், பொறியியல், மண்ணியல், கனிமவியல், அணுவியல், நீரியல் போன்ற பல இயல்களில் ஆழ்ந்த அறிவு இருந்தது என்று கூறப்படுகிறது. இத்தகைய பாடங்கள் மாணவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தக் கூடியவை.

அறிவியல் என்பது கோட்பாடு (தியரி), சோதனை (எக்ஸ்பெரிமெண்ட்), கண்டறிதல் (ஃபைண்டிங்ஸ்) என்ற மூன்றையும் உள்ளடக்கிய செயல்பாடு. இயற்கையில் இருப்பதை, நடப்பதைப் பதிவு செய்வது மட்டும் அறிவியல் ஆகி விடாது. உதாரணமாக, ‘செம்புலப் பெயல் நீர்போல’ என்று செம்மண்ணைப் பற்றிப் புலவர் எழுதிவிட்டதால், அவர் மண்ணியல் அறிஞர் ஆகிவிட மாட்டார். அந்த வண்ணம் மண்ணுக்கு வந்தது $Fe_2O_3$ என்ற இரும்பு ஆக்ஸைடால் என்று சொல்பவர்கள்தான் அறிவியல்பூர்வமாகப் பேசுபவர்கள். இதேபோன்று, கற்பனையில் பிறந்ததெல்லாம் அறிவியல் ஆகி விடாது. ‘வலவன் ஏவா வானூர்தி’ என்று எழுதி விட்டதால், எழுதியவர் விண்ணியல் வல்லுனராக ஆகிவிட மாட்டார். அப்படி ஓர் ஊர்தி முன்னால் இருந்தது என்பதும் இதனால் உறுதியாகிவிடாது. பறப்பது என்பது மனிதனின் கனவுகளில் ஒன்று. இந்தக் கனவு நனவாவதற்கு அறிவியல் பல மைல்கற்களைத் தாண்ட வேண்டியிருந்தது. உதாரணமாக, எரிபொருள் இல்லாமல் விமானம் பறந்திருக்க முடியுமா? அகக் கனற்சிப் பொறி யில்லாமல் (இண்டெர்னல் கம்பஷன் என்ஜின்) விமானம் பிறந்திருக்க முடியுமா? ரப்பர், அலுமினியம் போன்ற பொருள்கள் இல்லாமல் அது உருவாக்கப்பட்டிருக்க முடியுமா? எல்லா வற்றுக்கும் மேலாக பெர்னூலி கொள்கை தெரியாமல், நியூட்டனின் விதிகள் தெரியாமல், பறப்பது பற்றிய ஒரு அடிப்படைப் புரிதல் இருந்திருக்க முடியுமா?

கேள்விகளுக்குப் பதில் இவ்வாறு வரலாம்: எங்களிடம் எல்லாம் இருந்தன, தொலைந்து போய் விட்டன. தொலைந்து போவது அவ்வளவு எளிதல்ல. மனிதன் தனக்குப் பயன்படக்கூடிய வகையில் இருந்த எந்தக் கண்டுபிடிப்பையும் தொலைத்துவிட்டதாகச் சரித்திரம் இல்லை. மேலும், இந்தப் பதிலை உலகில் இருக்கும் எந்த இனக் குழுவினரும் சொல்ல முடியும். அது அறிவியல்பூர்வமான பதிலாக இருக்காது.

இதனால், தமிழர்களுக்கு ஒன்றுமே தெரியாது என்று நான் கூறுகிறேன் என்ற முடிவுக்கு வந்துவிடக் கூடாது. தமிழர்கள் அணைகளைக் கட்டியிருக் கிறார்கள். கோயில்களைக் கட்டியிருக்கிறார்கள். சிற்பங்களைச் செதுக்கியிருக்கிறார்கள். உலகம் வியக்கும் செப்புச் சிலைகளை வடித்திருக்கிறார்கள்.

ஆனால், இவற்றையெல்லாம் ஆக்குதற்கு அறிவியல் ஞானம் தேவையில்லை. தொழில்நுட்பம் போதுமானது.

மேற்கத்திய உலகில்கூட, நாம் இன்று அறிவியல் என்று சொல்லிக்கொள்ளும் நவீன அறிவியல் பிறந்தது 17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கலீலி யோவுக்குப் பிறகுதான். அதற்கு முன்பும் இந்திய அறிஞர்களுக்கு அறிவியல் முறைகளைப் பற்றிய ஓர் அடிப்படை அறிவு இருந்திருக்க வேண்டும் என்பது நிச்சயம். இல்லாவிட்டால், 12 ஆம் நூறறாண்டில் வாழ்ந்த இரண்டாம் பாஸ்கரரிடமிருந்து லீலாவதி, பீஜ கணிதம் போன்ற நூல்கள் பிறந்திருக்க முடியாது. பாஸ்கரருக்கு நுண்கணிதம் (கால்குலஸ்) பற்றிகூட அடிப்படை அறிவு இருந்தது என்று சொல்லப்படுகிறது. ஆனால், அதன் உபயோகம் என்ன என்பது அவருக்குத் தெரிந்திருக்கவில்லை. மேற்கில் நடந்ததுபோல, இங்கு அடித்தளத்தின்மீது கட்டுமானங்கள் வரவில்லை.

அறிவியலுக்கும் தொழில்நுட்பத்துக்கும் இடையே இன்று இருக்கும் பிணைப்பு பிரிக்க முடியாதது. அறிவியல் இல்லையென்றால், தொழில் நுட்பம் முன்னேற முடியாது. தொழில்நுட்பம் இல்லையென்றால், அறிவியலின் பல கண்டு பிடிப்புகள் நிகழ்ந்திருக்க வாய்ப்பே இல்லை. ஆனால், இரண்டும் ஒன்றல்ல. உதாரணமாக, நமது முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மிகச் சிறந்த தொழில்நுட்ப அறிஞர். சமீபத்தில் பாரத ரத்னா பெற்ற சி.என்.ஆர். ராவ் அறிவியல் அறிஞர்.

பண்டைய தமிழர்கள் கட்டடங்களைக் கட்ட முடிந்ததற்கும் செப்புச் சிலைகளை வடிக்க முடிந்தததற்கும் காரணம், தொழில்நுட்பத்தில் அவர்களுக்கு இருந்த அறிவுதான். அந்த அறிவு அவர்களுக்குப் பரம்பரை பரம்பரையாகக் கைவரப் பெற்றது. ஆங்கிலத்தில் ட்ரையல் அண்ட் எரர் என்று சொல்வார்கள். செய்து செய்து பார்த்துத் தவறுகளைத் திருத்திக் கொள்ளும் முறையை நமது முன்னோர்கள் கையாண்டார்கள்.

‘பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டம் சால மிகுத்துப் பெயின்’ என்பது வள்ளுவர் வாக்கு. பண்டைய தச்சருக்கு அவர் உருவாக்கிய வண்டி எவ்வளவு பளு தாங்கும் என்பதுபற்றி நிச்சயம் தெரிந்திருக்கும். ஆண்டுக் கணக்கில் தச்சு வேலை செய்வதால் அவரால் கண் பார்வையிலேயே எந்த வண்டியில் எவ்வளவு பளு ஏற்றலாம் என்பதையும் சொல்ல முடிந்திருக்கும். பளுவை எவ்வாறு வண்டியில் பரப்பி வைக்க வேண்டும் என்பதும் அவருக்குத் தெரிந்திருக்கும். ஆனால், அவருக்கு ‘தகைப்பு (ஸ்ட்ரெஸ்) என்றால் என்ன என்பது தெரிந்திருக்காது. ‘திரிபு’ (ஸ்ட்ரெயின்) பற்றியும் தெரிந்திருக்காது.

எளிமையாகச் சொல்லவேண்டும் என்றால், அறிவியலால் நிறுவப்பட்ட கோட்பாடுகளின் அடிப்படையில் இன்றைய தொழில்நுட்பம் இயங்குகிறது. அன்று, அவ்வாறு இல்லை.

இதைப் படிப்பவர்களுக்கு ஒரு முக்கியமான கேள்வி எழலாம். அறிவியல் ஞானம் இல்லாத காலத்தில் கட்டிய தஞ்சை பெரிய கோயில் 1000 ஆண்டுகளாகியும் அப்படியே நிற்கிறது. கடல்மல்லைக் கோயில் சந்திக்காத புயல்கள் இல்லை. ஆனாலும் நிமிர்ந்து நிற்கின்றது. மாறாக, தொழில்நுட்பம் வலுப்பெற்றிருக்கும். இந்நாளில், சில ஆண்டுகள் முன்பு கட்டிய அடுக்குமாடி வீடுகள் காற்றடித்தால் தள்ளாடுகின்றனவே என்பதே அந்தக் கேள்வி. இதற்கு எளிமையான ஒரு பதில் இருக்கிறது. பெரிய கோயிலைக் கட்டிய வரும் கடலோரக் கோடியிலைக் கட்டியவரும மாமேதைகள். அவர்கள் இன்றிருந்தாலும் உலகமே பாராட்டும் கட்டடங்களை நமக்குத் தந்திருப் பார்கள். அவர்களுக்குத் தாங்கள் செய்யும் தொழில்மீது மரியாதை இருந்திருக்க வேண்டும். முழுமை அடையும்வரை மீண்டும் மீண்டும் முயன்றிருக்க வேண்டும். அன்றைய தொழில் நுட்பத்தின் உச்சத்தை அடைந்தவர்கள் அவர்கள். ஆனால், அவர்களுக்கும் அறிவியலுக்கும் தொடர்பு கிடையாது.

எனவே, மாணவர்களிடம் நம் முந்தையர் செய்த விந்தைகளைப் பற்றிக் கூறும்போது, அறிவியலுக் கும் தொழில்நுட்பத்துக்கும் இடையே உள்ள தொடர்புகளையும் வித்தியாசங்களையும்பற்றி அவர்களுக்கு விளக்க வேண்டும். அதிகக் கருவிகளும் அடிப்படை அறிவியல் ஞானமும் இல்லாமலே முன்னோர்களால் அரிய சாதனைகளை நிகழ்த்த முடிந்தது. அவர்களின் வழி வந்த நமக்குத் தொழில்நுட்பத்தோடு அறிவியல் ஞானமும் இருக்கிறது. அவை உலகத்தின் சொத்துக்கள். அவற்றின் துணையால் நம்மாலும் சாதனைகளை நிகழ்த்த முடியும் என்று அழுத்திச் சொல்ல வேண்டும்.

எங்களிடம் எல்லாம் இருந்தது என்று நம்மை நாமே பாராட்டிக் கொள்வதைத் தமிழர்கள் முதலில் விடவேண்டும்.

**‘தி இந்து’ நவம்பர், 28, இதழில்**
**பி.ஏ. கிருஷ்ணன் எழுதிய கட்டுரை**

## சென்னை கருத்தரங்கில் விடுதலை இராசேந்திரன் உரை

# ‘ஆதார்’ அடையாளம் அல்ல; ஆபத்து!

*14.12.2013 அன்று சென்னையில் மக்கள் சிவில் உரிமைக் கழகம் நடத்திய ‘ஆதார்’ குறித்த கருத்தரங்கில் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆற்றிய உரையின் சுருக்கம்.*

‘ஆதார்’ அடையாள அட்டையை கட்டாய மாக்கும் முயற்சிக்கு உச்சநீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்துள்ளது. ஆனாலும், சமையல் எரிவாயுவுக்கு மான்யம் பெற ஆதார் எண் அவசியம் என்று சில நிறுவனங்கள் வலியுறுத்தி வருகின்றன. தமிழகத்தில் இன்னும் பல லட்சம் பேர் ஆதார் அட்டைகளைப் பெறவில்லை. இதற்கிடையே இதை வழங்கும் பணி டிசம்பர் 31 ஆம் தேதியுடன் நிறைவடைகிறது.

ஆதார் அட்டை வழியாக ஒருவரின் விரல் ரேகை, விழிப்படலம் என்று பல்வேறு அடையாளங்கள் பதியப்பட்டு, ஒவ்வொருவருக்கும் ஒரு குறியீட்டு எண் வழங்கப்படுகிறது. ஒவ்வொரு மாநிலத்தில் வாழும் குடி மக்களும் இதன் வழியாக இந்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்படு கிறார்கள் என்பது இதில் அடங்கியுள்ள ஆபத்தான அம்சம். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரை மக்கள் நலத் திட்டங்களை எளிதில் பெறுவதற்கான வாய்ப்பு என்று வெளியில் கூறப்பட்டாலும் இதன் அடிப்படையான நோக்கமே ஒவ்வொருவரையும் கண்காணிப்புக்கு உட்படுத்துவதுதான்.

2006 ஆம் ஆண்டு மத்திய திட்டக்குழு, அங்க அடையாளங்களுடன் கூடிய ‘பயோ மெட்ரிக்’ அடையாளத்தை எடுக்கும் திட்டத்தை முன்வைத்து மத்திய தகவல் ஆணையம் வழியாக ஓராண்டுக்குள் முடிக்க திட்டமிட்டார்கள். பிறகு 2009 ஆம் ஆண்டில் இதற்காக ஒரு தனி ஆணையத்தை உருவாக்கினார்கள். ‘இன்போசிஸ்’ நிறுவனத்தில் தலைமைப் பொறுப்பில் பணியாற்றிய நந்தன் நிலகேணி என்பவர் தலைமைப் பொறுப்பில் அமர்த்தப்பட்டார். மத்திய அமைச்சர்களுக்கு இணையான அதிகாரம் அவருக்கு வழங்கப்பட்டு, மத்திய அமைச்சர்களைக் கொண்ட குழு ஒன்றும் அவருக்குக் கீழே ஆலோசனை கூற உருவாக்கப் பட்டது.

இதற்கிடையே வடகிழக்கு மாநிலங்களில் வங்கதேசத்திலிருந்து வந்த முஸ்லிம் அகதிகள், இந்த அட்டையைப் பயன்படுத்தி, இந்திய குடிமக்களா வதற்கு முயற்சிப்பதாக டெல்லியில் ஆர்.எஸ்.எஸ். சார்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. அப்போது உள்துறை அமைச்சராக இருந்த ப.சிதம்பரம், தனது அமைச்சகத்தின் கீழ் உள்ள மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறை வழியாகவே இதை அமுல்படுத்த வேண்டும் என்று பிரதமருக்கு கடிதம் எழுதினார். இதைத் திட்டக் குழு துணைத் தலைவராக இருந்த மாண்டே சிங் அலுவாலியா எதிர்த்தார். இருவரும் வெளிப்படையாகவே மோதிக் கொண் டனர். பிறகு 2012இல் ஒரு முடிவு செய்யப்பட்டது. 60 கோடிப் பேர் மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறை வழியாகவும் 60 கோடிப் பேர் ஆணையத்தின் வழியாகவும் கணக்கெடுப்பு நடத்த முடிவு செய்யப்பட்டது. அதன்படி தமிழ்நாட்டில் இந்தப் பணி மக்கள் தொகைக் கணக்கெடுப்புத் துறையின் கீழ் வந்தது.

இந்தியாவில் சட்டவிரோதமாக அகதிகள் குடியேறுவதைத் தடுக்கவே இந்தத் திட்டம் என்பதை அமைச்சர்கள் குழுவும் தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. உண்மையில் 2002 ஆம் ஆண்டு பா.ஜ.க. ஆட்சியிலேயே ‘பல்நோக்கு தேசிய அடையாள அட்டை’ என்ற பெயரில் இதைத் தொடங்க முடிவு செய்தார்கள். 1999 ஆம் ஆண்டு கார்கில் யுத்தத்துக்குப் பிறகு, நாட்டில் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாகவும், உளவு அமைப்பை வலிமைப்படுத்த வேண்டும் என்றும் பா.ஜ.க. அமைச்சரவை பரிந்துரைத்தது. இந்திய உளவுத் துறையின் முன்னாள் இயக்குனரான ஏ.கே.டோவல் என்பவர் அப்போதே இத்திட்டத்தின் நோக்கத்தை வெளிப்படையாகவே கூறிவிட்டார். நாட்டின் சட்ட விரோத சக்திகளையும் அந்நியர் ஊடுருவலையும் அடையாளம் காண வேண்டும் என்பதே இத்திட்டத்தின் நோக்கம் என்றும், ஆனால், மக்கள் நலத் திட்டங்களுக்காகவே இத்திட்டம் என்று கூறினால்தான் மக்கள் ஒத்துழைப்பார்கள் என்றும் அவர் கூறினார்.

நோபல் பரிசு பெற்ற அமர்த்தியா சென், இத் திட்டத்தைக் கடுமையாக எதிர்த்தார். தேச முன் னேற்றம் என்பதன் பெயரில் தனிமனித சுதந்திரத்தை விலைபேச முடியாது என்று அவர் கண்டித்தார்.

நாடாளுமன்றத்தின் ஒப்புதல் இல்லாமலே இதற்காக அமைக்கப்பட்ட ஆணையத்துக்கு பல் வேறு துறைகளிடமிருந்து நேரடியாக தகவல்களைப் பெறக்கூடிய அதிகாரம் வழங்கப்பட்டது. இந்த ஆணையத்தை எதிர்த்து நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. 2010 ஆம் ஆண்டு தமிழ்நாட் டிலுள்ள மனித உரிமைப் பாதுகாப்பு மய்யம், உயர்நீதிமன்றத்திலும் விக்ரம் கிருஷ்ணா என்பவர், மும்பை உயர்நீதிமன்றத்திலும், 2012இல், கர்நாடக ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி புட்டசாமி என்பவர் உச்சநீதிமன்றத்திலும் வழக்கு தொடர்ந் தனர். புட்டசாமி தமது மனுவில் சட்டவிரோதமாக முஸ்லிம் அகதிகள் ஊடுருவி விடுவார்கள் என்ற ஆர்.எஸ்.எஸ். கருத்தையே வலியுறுத்தியிருந்தார். இதற்கிடையே ஆதார் அட்டையை கட்டாயமாக்கிய மகாராஷ்டிரா மாநில அரசு நீதிபதிகளேயானாலும், ஆதார் அட்டை இல்லாமல் ஊதியம் வாங்க முடியாது என்று அறிவித்திருந்தது. உச்சநீதிமன்றம் இந்தப் பின்னணியில் ஆதாருக்கு இடைக்காலத் தடையை பிறப்பித்தது.

எரி வாயு, உணவுப் பொருள்களுக்கான மான்யங்களை ரொக்கமாக வழங்குவதாகக் கூறும் இத்திட்டத்தின் நோக்கத்தில் இரண்டு ஆபத்துகள் அடங்கியுள்ளன. பொருட்களை வெளிச் சந்தையில் வாங்குவதற்கு கட்டாயப்படுத்துவதன் மூலம் பொருள்களின் விலை நிர்ணயம் சந்தைக் கட்டுப் பாட்டின்கீழ் கொண்டுவரப்படுகின்றன. இரண்டா வதாக, ரேஷன் கடைகள் இழுத்து மூடப்படுவதற்கும் வழியமைக்கப்படுகிறது. நீண்டகாலமாக உலகவங்கி இதைத்தான் வலியுறுத்தி வருகிறது.

> இந்தியாவில்திரட்டப்பட்டஒவ்வொரு குடிமகன்பற்றியதகவலையும் அமெரிக்கஉளவுநிறுவனமான ‘சிஐஏ’வுக்குஅனுப்பப்படுகிறது

இது தொடர்பாக ஆணையத்தின் தலைவர் நந்தன் நீலகேணி தெரிவித்துவரும் கருத்துகள் அதிர்ச்சி யூட்டுபவையாகும். கடந்த ஏப்ரல் மாதம் உலக வங்கி நடத்திய கருத்தரங்கில் அவர் பேசினார். அப்போது வட அமெரிக்கக் கண்டத்துக்கு பிழைப்புக்காக வந்த அய்ரோப்பியர்கள் பற்றி அவர் குறிப்பிட்டார். கனடா நாட்டில் எல்லீஸ் தீவுக்கு வந்த அய்ரோப்பியர்களை - குடியேற்றத் துறை அதிகாரிகள் விசாரணைக்கு உட்படுத்தியபோது ஒவ்வொருவரும் வெவ்வேறு மொழிகளில் தங்கள் பெயரை உச்சரித்தனர். அப்போது குடியேற்றத் துறை அதிகாரிகள், அவர்களின் தாய்மொழிப் பெயர் அனைத்தையும் நீக்கிவிட்டு, அதிகாரிகளே, ஒரு பெயரை சூட்டி, இனி இதுதான், இந்த நாட்டில் உனக்கான பெயர் என்று அறிவித்தார்கள். நந்தன் இதை நினைவு கூர்ந்து, “ஆதார் - உலகின் மிகப் பெரும் பெயர் சூட்டுவிழா; 21 ஆம் நூற்றாண்டின் எல்லீஸ் தீவு” என்றார். பெயர், இனம், மொழி, தொழில் அடையாளங்களைவிட ஒரு மனிதன் என்ற முறையில் உடலின் தனித்துவமான அடையாளங்கள் பதிவு செய்யப்படும் திட்டமாகும். சோதிக்கப்படும் சந்தர்ப்பங்கள் வந்தால், இந்த ‘பயோ மெட்ரிக்’ அளவீடுகளைக் கொண்ட உடலமைப்பைக் கொண்ட மனிதன் நான்தான் என்பதை ஒவ்வொரு வரும் நிரூபிக்க வேண்டும்.

விழிப்பாவை, கைரேகைகளில் மாற்றம் வந்தால், அடையாளங்களைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டும் என்று ஆணையத்தின் விதி கூறுகிறது. மாட்டுக்கு சூடு வைப்பதைப் போன்ற அடையாளம் இது. இது ‘ஒற்றைத் தேசிய அடையாளம்’ என்று பெருமையுடன் கூறுகிறார் தேசிய புலனாய்வு வலைப் பின்னலின் தலைவர் (National Intelligence Grid) ரகுராமன். உள்நாட்டு பாதுகாப்புகளைக் கண்காணிப்பதற்காகவே உருவாக்கப்பட்ட உளவுத் தகவல் வலைப்பின்னல் அமைப்பு இது.

அனைவரின் தொலைபேசி, இணைய சேவை, ரயில்-விமானப் பயணத் திட்டங்கள், கடன் அட்டைகள், வீடு-நிலப் பத்திரங்கள், ஓட்டுநர் உரிமங்கள் அனைத்தும் இரண்டு ஆண்டுகளுக்குள் ஆதாருடன் இணைக்கப்படவுள்ளன.

கிராமப்புற மக்களின் சேமிப்புகளையும் வங்கிகளை நோக்கி இழுத்து, உள்ளூர் அளவிலான பொருளாதாரத்தை அழித்து, தேசிய நுகர்வுச் சந்தையுடனும் வங்கிக் கடன் சந்தையுடனும் கிராம மக்களை இணைப்பதும் இத் திட்டத்தின் மற்றொரு நோக்கம். கிராம மக்கள் சட்டிப் பானைகளில் போட்டு வைத்திருக்கும் சேமிப்புகளை வங்கிக்குக் கொண்டுவரவேண்டும் என்கிறார், ரிசர்வ் வங்கித் தலைவர் ரகுராம் ராஜன்.

வங்கிகள், கிராமங்களில் கிளைகளைத் திறக்காமல், முகவர்களை கிராமங்களுக்கு அனுப்பி, அவர்களிடம் அட்டைகளை ‘ஸ்வைப்’ செய்யும் கருவிகளை வழங்கி, நடமாடும் வங்கிகளாக மாற்றும் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. ‘ஆதார்’ பணிகளில் அமர்த்தப்பட்ட அமைப்புகள், இந்தியாவில் திரட்டப்பட்ட ஒவ்வொரு குடிமகன் பற்றிய தகவலையும் அமெரிக்க உளவு நிறுவனமான ‘சி.அய்.ஏ.’வுக்கு அனுப்பி வைக்கிறது என்ற அதிர்ச்சியான தகவலும் வெளிவந்துள்ளது. மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் இந்த ஆபத்தை சுட்டிக் காட்டியிருக்கிறது.

ஜெர்மனியில் இட்லர் ஆட்சியில் யூதர்கள் பற்றிய தகவல்களைத் திரட்டி, இட்லரின் இனப்படு கொலைக்கு உதவியதாகக் குற்றம் சாட்டப்படும் நிறுவனம் அய்.பி.எம். அமெரிக்க இராணுவத்துடன் நெருங்கிய தொடர்புள்ள மற்றொரு நிறுவனம் ‘எல்.ஒன் சர்வீசஸ்’. முன்னாள் அமெரிக்க உளவுத் துறை நிர்வாகிகளைக் கொண்டு செயல்படுவது ‘அசென்ச்சர்’ என்ற நிறுவனம். இந்த நிறுவனங்கள் வழியாகத் தான் இந்தப் பணிகள் நடைபெறுகின்றன. அமெரிக்காவை எதிர்க்கும் கிரீஸ், எகிப்து, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் குடிமக்கள் அடையாள அட்டைகள் அமெரிக்க அரசிடம் வந்து சேர்ந்துவிட்டன என்பதை ‘விக்கி லீக்ஸ்’ அம்பலப்படுத்தியிருக்கிறது. மேற்கு வங்க மாநில ஆட்சி சட்டசபை தீர்மானத்தின் வழியாக ஆதார் அட்டைக்கு மாநிலத்தில் தடை விதித்துவிட்டது. அய்ரோப்பிய நாடுகளில் மக்களின் வாழ்க்கைக்கான அடிப்படைத் தேவைகள் உறுதி செய்யப்படுகின்றன. அங்கே வழக்கப்படும் அட்டைகளோடு அடிப் படைத் தேவைகளையே புறக்கணிக்கும். இந்தியா போன்ற நாடுகளை ஒப்பிட்டுப் பேசக் கூடாது. இது போன்ற ‘பயோ மெட்ரிக்’ அடையாளத் திரட்டல் இங்கிலாந்தில் தோல்வியைத் தழுவியிருக்கிறது. மக்களின் அடிப்படை உரிமைகளுக்குப் போராடு வோரை அடக்குமுறைச் சட்டங்களில் கைது செய்து சிவில் உரிமைகளை உறுதி செய்யாத மக்களை சந்தேகிக்கக்கூடிய ஆட்சிகளின் கீழ் இத்தகைய கண்காணிப்பு தொழில் நுட்பங்கள் இருப்பது ஆபத்தான விளைவுகளையே உண்டாக்கும். தமிழ்நாட்டுக் குடிமகனாக இருப்பவர்களை நேரடியாக இந்திய ஆட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரும் ஆதார், அடையாளம் அல்ல; ஆபத்து என்ற முடிவுக்கே வரவேண்டியிருக்கிறது.”+


‘புரட்சிப் பெரியார் முழக்கம்’
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு:
ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆ 9941613535

DATE OF PUBLICATION 25.12.2013 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/CCN/9/12-14
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/7776

## மன்னையில் ‘உயிர் வலி’ ஆவணப்படம் வெளியீடு

வசதி வாய்ப்புப் படைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்பி விடுகின்றனர். அப்பாவி மக்களை மட்டும் பாதிக்கும் மரண தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்க வேண்டுமென மன்னார்குடியில் நடைபெற்ற ‘உயிர்வலி’ ஆவணப்பட வெளியீட்டு விழாவில் பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் பேசினார்.

மரண தண்டனைக்கு எதிரான வரலாற்றுப் பதிவு ‘உயிர்வலி’ (சக்கியடிக்கும் சத்தம்) ஆவணப்பட வெளியீட்டு விழா மன்னார்குடி தமிழ் இனஉணர்வாளர்கள் கூட்டமைப்பு சார்பில் மாமன்னர் மருதுபாண்டியர் திருமண அரங்கத்தில் தமிழின உணர்வாளர் பா.வெங்கட்ராமன் தலைமையில் நடைபெற்றது. ‘உயிர்வலி’ ஆவணப்படத்தை திருவாரூர் மாவட்ட முன்னாள் ம.தி.மு.க. செயலாளர் இரயில் பாஸ்கர் வெளியிட, மன்னை வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கத் தலைவர் அனையாவிளக்கு அய்யப்பன் பெற்றுக் கொண்டார்.

இராஜிவ் காந்தி கொலை வழக்கில் பொய்யான குற்றச்சாட்டின்பேரில் 22 ஆண்டுகாலமாக தூக்குதண்டனை கைதியாக சிறையில் வாடும் பேரறிவாளனின் வாழ்க்கை வரலாற்றை விளக்கும் ‘உயிர்வலி’ ஆவணப்படம் குறித்து பொங்கு தமிழ் இயக்க செயலாளர் மருத்துவர் பாரதிச் செல்வன், தமிழக தலித் மக்கள் முன்னேற்றக் கழகத் தலைவர் மன்னை ஜே.ஆர்.எஸ்., வடுவூர் தமிழின உணர்வாளர்கள் மன்றத் தலைவர் வ.சீ.ராமச்சந்திரன், மாணவர் பெருமன்ற மாநில துணைச் செயலாளர் துரை அருள்ராஜன், தமிழ் தேசிய விடுதலை இயக்க மாவட்ட செயலாளர் ரெபுகழேந்திரன், தமிழ் தேசிய பொதுவுடைமைக் கட்சி நகர செயலாளர் ஜெயபால், தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற செயலாளர் மணி கணேசன், வெள்ளை மனம் மன்றத் தலைவர் ஜி. முரளி, தலித் மக்கள் முன்னேற்ற கழகப் பொருளாளர் ஆறு சுதாகர், நாம் தமிழர் கட்சி நகர செயலாளர் தீனமுத்துச்செழியன் ஆகியோர் உரையாற்றினர். பேரறிவாளனின் தாயார் அற்புதம்மாள் சிறப்புரையாற்றினார். அவர் தன் உரையில் ராஜிவ் காந்தி கொலை வழக்கில் இரண்டு பேட்டரிகள் வாங்கிக் கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் 22 ஆண்டுகாலமாக தூக்கு தண்டனை கைதியாக இருக்கும் பேரறிவாளனை உடனே விடுதலை செய்ய வேண்டும். வசதி படைத்தவர்கள் தண்டனையில் இருந்து தப்பிவிடுகிறார்கள். அப்பாவி பொது மக்களை மட்டும் பாதிக்கும் மரண தண்டனையை சட்டப் புத்தகத்திலிருந்து நீக்க வேண்டும் என கூறினார். முன்னதாக மன்னை வட்ட லாரி உரிமையாளர்கள் சங்கப் பொருளாளர் சேரன்குளம் செந்தில்குமார் வரவேற்றார். திராவிடர் விடுதலைக்கழக திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா. காளிதாசு விழாவை ஒருங்கிணைத்தார். வழக்கறிஞர் செ.செந்தமிழ்ச் செல்வன் நன்றி கூறினார்.

## மக்கள் சந்திப்பு இயக்கம் திருவாரூர் மாவட்டக் கழகம் முடிவு



**கழகப் பொருளாளர் ஈரோடு ரத்தினசாமி தோழர்களுடன் உரையாடுகிறார்**

திருவாரூர் மாவட்ட திராவிடர் விடுதலைக்கழக செயல்வீரர்கள் கூட்டம் மன்னார்குடியில் டிசம்பர் 4 அன்று திருவாரூர் மாவட்ட செயலாளர் இரா. காளிதாசு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்ற மாநில பொருளாளர் ஈரோடு ரெத்தினசாமி, செயலவை தலைவர் திருப்பூர் துரைசாமி, மாநில பரப்புரை செயலாளர் தூத்துக்குடி பால் பிரபாகரன் ஆகியோர் உரையாற்றினர்.

கழகத் தோழர்கள் 7 பேரை தமிழக அரசு தேசிய பாதுகாப்பு சட்டத்தில் கைது செய்ததையும், இச் சம்பவங்களில் தொடர்பில்லாத கழகத் தலைவர் கொளத்தூர் மணி மீதும் தேசிய பாதுகாப்புச் சட்டம், பாய்ச்சப்பட்டதற்கும் திருவாரூர் மாவட்ட கழகம் வன்மையாக கண்டிக்கிறது. மக்கள் சந்திப்பு இயக்கத்தை திருவாரூர் மாவட்டம் முழுவதும் நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.

கூட்டத்தில் கழக ஒன்றிய செயலாளர்கள் மன்னை சேரன், ரமேஷ், நீடா நல்லிக் கோட்டை முருகன், வலங்கைமான் செந்தமிழன், கோட்டூர் அனுராசு, திருவாரூர் கலைவேந்தன், நகர செயலாளர்கள் கரிகாலன், பிரபாகரன், கலைவாணன் உள்பட நிர்வாகிகள் பங்கேற்றனர். முன்னதாக மன்னை நகர செயலாளர் மணிகண்டன் வரவேற்றார். நகர அமைப்பாளர் ராகுல்ராசு நன்றி கூறினார்.

## கருத்துச் செறிவு மிக்க திராவிடர் பண்பாட்டு மலர்



சுயமரியாதைக் கலைப் பண்பாட்டுக் கழகம், திருப்பூரில் அக்.20 ஆம் தேதி நிகழ்ந்த திராவிடர் வாழ்வியல் விழா, உணவு விழாவையொட்டி ‘திராவிடர் பண்பாட்டு மலர்’ ஒன்றையும் வெளியிட்டுள்ளது. வாழ்வியலின் மூலக் கூறுகளான திருமணம், மறுமணம், கல்யாண விடுதலை, குழந்தைப் பேறு, கர்ப்பத் தடை, சோதிடம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் பெரியாரின் ஆழமான கட்டுரைகளை தேடிப்பிடித்து தொகுத்திருப்பது மலரின் தனிச் சிறப்பாகும். ‘வாஸ்து’ மூடநம்பிக்கை, பெயர் சூட்டல் குறித்து - கொளத்தூர் மணி கட்டுரைகளும், சங்க இலக்கியங்களிலேயே பார்ப்பனியம் ஊடுருவியதை விளக்கும் - விடுதலை இராஜேந்திரன் கட்டுரையும் நல்ல கருத்து விளக்கங்களை முன் வைக்கின்றன.

‘திராவிடர் உடை’ என்ற கட்டுரை, வேட்டி சேலை அணிவதும், இந்து மதப் பண்பாடு என்று சங்கராச்சாரி கூறுவதை எடுத்துக்காட்டி, அதையே தமிழர்களின் அடையாளமாக தமிழ்ப் பண்பாடு பேசுவோரையும் சுட்டிக்காட்டி, தமிழர் அடையாளம் இந்துப் பண்பாடா என்ற கேள்வியை எழுப்புகிறது. உணவு மற்றும் உடையைப் பொறுத்தவரை மதம், கலாச்சாரப் பார்வையைத் தவிர்த்துவிட்டு, அவரவர் வசதி விருப்பத்தைச் சார்ந்து என்பதே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும். பெரியார், உடையில் பெண், ஆண் வேறுபாடு இருப்பதே தேவையில்லை என்றார். இந்திய வைத்தியக் கல்லூரி ஒன்றை நீதிக்கட்சி ஆட்சியில் பனகல் அரசர் தொடங்கியபோது, சமஸ்கிருத அடிப்படையிலான ஆயுர்வேதத்துக்கு மட்டுமே கல்லூரி தொடங்க வேண்டும் என்று சத்தியமூர்த்தி பார்ப்பனர்கள் பேசியதும், மத சாஸ்திரங்களுக்கு விரோதமில்லாத வைத்தியமுறை ஆயுர்வேதம்தான் என்றும், நாத்திகர்களுக்கு வைத்தியமே செய்யக்கூடாது என்றும், மூத்த சங்கராச்சாரி கூறியிருப்பதும் மலரில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பெரியாரின் ஒழுக்கம் குறித்த மதிப்பீடுகளை ஆழமாக திறனாய்வு செய்துள்ள சுகுணா திவாகரின் கட்டுரை நல்ல வெளிச்சத்தைத் தருகிறது. கிராம சீர்திருத்தம் என்பதே கிராமங்களை எல்லாம் அழித்து, கிராம மக்களை நகரத்துக்குக் குடியேற்றுவதுதான் என்று பெரியார் கூறும் கிராம சீர்திருத்தக் கட்டுரை, ‘மாட்டுக் கறி’ உணவு பற்றிய மீனா மயிலின் அரிய கட்டுரை, மாற்றுத் திரைப்படம் பற்றிய பாமரன் சிந்தனை என்று மலர் பக்கத்துக்கு பக்கம் கருத்துச் செறிவுடன் விளங்குகிறது. பெரியார் பண்பாட்டுப் புரட்சியின் வாழ்வியல் கூறுகளை விரிவாக அலசும் திராவிடர் பண்பாட்டு மலர் ஒவ்வொருவரும் வாங்கிப் படித்து, பாதுகாக்க வேண்டிய கருத்துக் கருவூலம்.

*மலர் கிடைக்குமிடம் : தலைமையகம், திராவிடர் விடுதலைக் கழகம், 95 டாக்டர் நடேசன் சாலை, அம்பேத்கர் பாலம், சென்னை-600041. பேசி : 044-24980745*

*பக். : 175; விலை : ரூ.150. கருந்திணை : திண்டுக்கல். பேசி : 9786889325*

**– இந்திரஜித்**

## பட்டுக்கோட்டையில் கண்டன ஆர்ப்பாட்டம்

30.11.2013 அன்று பட்டுக்கோட்டை அஞ்சல் நிலையம் அருகில் தலைவர் கொளத்தூர் மணியையும், தோழர்களையும் தேசிய பாதுகாப்புச் சட்டத்தில் கைது செய்யப்பட்டதைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பேராவூரணி திராவிடர் விடுதலைக் கழகப் பொறுப்பாளர் கி. திருவேங்கடம், ஒரத்தநாடு ஒன்றிய பொறுப்பாளர் க.சொ. சிவசுப்பிரமணியன், திருவாரூர் மாவட்ட கழக அமைப்பாளர் இரா. காளிதாசு, தஞ்சை மாவட்ட கழகத் தலைவர் கு.பாரி, நல்லக்கோட்டை ஒன்றிய செயலாளர் பெ. முருகன், வடசேரி கழகத் தோழர் அ.மா. பிரபாகரன், மன்னார்குடி கழகத் தோழர் செந்தமிழன் ஆகியோர் கண்டன உரையாற்றினர்.

### வாழ்நாள் முழுவதும் நான் தொண்டனே!

நான் மறைந்து நின்று சிலரைத் தூண்டிவிட்டு எந்தக் காரியத்தையும் செய்யச் சம்மதிக்க மாட்டேன். ஒரு சமயம் எனக்கு அப்படிச் செய்ய ஆசையிருந்தாலும் எனக்கு அந்தச் சக்தி கிடையாது. மறைவாய் இருந்து காரியம் செய்ய, சக்தியும் சில சவுகரியமும் வேண்டும். அந்த சக்தியும் சவுகரியமும் எனக்கில்லாததாலேயேதான், நான் என் வாழ்நாள் முழுவதும் தொண்டனாகவே இருந்து தீரவேண்டியதாய் இருக்கிறது என்பதோடு, எதையும் எனக்குத் தோன்றிய எண்ணங்களை வெளிப்படுத்தித் தாட்சண்யம் இல்லாமல் கண்டிக்க வேண்டியவனாகவும் இருக்க வேண்டியிருக்கிறது. (பெரியார், ‘குடிஅரசு’ - 24.11.1940 )

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 26th December 2013

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN